24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 48
விலை: 40

சுடர் 34 கதிர் 13 கார்த்திகை 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 09 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# கடவுளே வந்து சொன்னாலும் ரணிலுக்கு பதவி வழங்கேன்

## மைத்திரி உடும்புப்பிடி

கொழும்பு, டிசெம்பர் 9

கடவுளே வந்து ரணில் விக்கிரம சிங்கவை தலைமை அமைச்சராக நியமிக்குமாறு சொன்னாலும், அவரை இனியொரு தடவை என் வாழ்நாளில் தலைமை அமைச்சராக நியமிக்கவே மாட்டேன். இவ்வாறு அடித்துக் கூறியுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

» 45



கோப்புப்படம்

## ஐ.தே.கவின் தாளத்துக்கு எல்லாம் ஆட முடியாது

### அரச தலைவர் தேர்தல் பற்றி நானே முடிவு செய்யவேண்டும் - மைத்திரி

கொழும்பு, டிசெ. 9

அரச தலைவர் தேர்தலை நடத்துமாறு, ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த கோரிக்கையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.
டெய்லி மிரர் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அரச தலைவர் மைத்திரிபால மேற்

» 45

### மைத்திரியின் வீட்டை முடக்க

## ஒன்றரை லட்சம் பேரை குவிக்கின்றது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 9

கொழும்பில் அடுத்த வாரம் ஒன்றரை லட்சம் பேரைக் குவித்து, அரச தலைவரின் வீடு மற்றும் அவரது செயலகத்தை முடக்கிப் போராட்டத்தை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

» 45

## நெருக்கமான கண்காணிப்பு வளையத்துக்குள் இலங்கை

### கூறுகிறது பிரிட்டன்



கொழும்பு, டிசெ. 9

இலங்கையின் நிலமைகளை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகத் தெரிவித்துள்ள, பிரிட்டனின் மனித உரிமைகளுக்கான இராஜாங்க அமைச்சர் அகமட் பிரபு, அங்கு மனித உரிமைகள்,

» 45

## நீதிமன்றத் தீர்ப்பு தீர்வாக அமையாது

### நிறைவேற்று அதிகார ஒழிப்பே ஒரே வழி என்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 9

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எத்தகையதாக அமைந்தாலும் அது அரசியல் குழப்பத்துக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று நாங்கள் கருதவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச இருவரும் நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கு மதிப்பளிப்பவர்களாயின், நீதிமன்றத் தீர்ப்பு தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். ஆனால் அவர்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பதாலேயே,

» 45

## பொல்லைக் கொடுத்து வாங்கிக் கட்டும் மைத்திரி

கொழும்பு, டிசெ. 9

நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்க மகிந்த முயற்சித்தாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவரது வாயாலேயே தெரிவித்துள்ளார். இதன் மூலம் இவர்கள் பெரும்பான்மையை நிரூபிக்க மேற்கொண்ட சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது. மைத்திரியின் முகத்திரையும் கிழிந்துள்ளது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆங்கில இணையத்தளத்துக்கு வழங்கிய நேர்காணலில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பேரம் பேசுதலில் ஏற்பட்ட விலை அதிகரிப்பாலேயே

» 45

## முச்சக்கரவண்டி, மூடுந்து பெற்றோல் ஊற்றி எரிப்பு

### குடும்பத் தகராறு காரணமா என்ற கோணத்தில் பொலிஸ் விசாரணை



» 45

## மைத்திரி, மகிந்த அணிகள் சங்கமிப்பு: ஒன்றாகப் போட்டியிட வியூகம் அமைப்பு

கொழும்பு, டிசெ. 9

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி என்பன இணைந்து ஒரே கூட்டணியாகச் செயற்படும். அதன் தலைமைத்துவத்தை மைத்திரி வைத்திருப்பார். ஆனால் மகிந்த அனைத்து விடயங்களிலும் மைத்திரியுடன் இணைந்து செயற்படுவார். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் ரோகண லக்ஸ்மன் பியதாச தெரி

» 45

## மகிந்த தரப்புக்கு ஆதரவளித்தோரை கட்சியில் வைத்திருக்கும் க.குமார் எங்களை பேரவையிலிருந்து வெளியேறச் சொல்வதா?

### சித்தார்த்தன் சீற்றத்துடன் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாக்குகளால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் தெரிவான உள்ளூராட்சி சபையின் இரண்டு உறுப்பினர்கள், மகிந்த தரப்புக்கு ஆதரவளித்தனர். அவர்களை கட்சியில் தொடர்ந்தும் வைத்திருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்மைப் பேரவை

» 45



### வாள்களுடன் சென்று

## 60 அலைபேசிகளை திருடினர் இருவர்!

### கிளிநொச்சியில் துணிகரம்

(விரிவு - பக். 03)

011 5 411 411

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி.

12.60% வ.வ.

வ.தே.வ. 13.14%

4 மாதங்கள்

அழையுங்கள்: 0115 411 411

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

SDB வங்கி

## அஞ்சலி



இலங்கையில் ஐந்து ஆண்டுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட யானைகள்விபத்தில்உயிரிழந்துள்ளன. உயிரிழந்தயானைகளுக்கு நினைவேந்தி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கொழும்பில் உள்ள டச்சுமருத்துவமனைமுன்வளாகத்தில் கடந்தஇரண்டுநாள்களாக நடைபெற்றது. உயிரிழந்த யானைகளின் ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு செல்பவர்கள்மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (5)

## யானைகளின் நடமாட்டம் குறித்து எஸ்.எம்.எஸ்.

### தொடருந்துசாரதிகளுக்கு அனுப்பத் திட்டம்

தொடருந்துப்பாதைகளுக்குஅருகில் யானைகள் நடமாடுவது தொடர்பில் குறுந் தகவல்கள் (எஸ்.எம்.எஸ்) மூலம் தொடருந்துச் சாரதிகளுக்கு அறிவிக்கும் நடவடிக்கைகள்நாளைஆரம்பிக்கப்படவுள்ளன.

யானைகள் தொடருந்துடன் மோதி உயிரிழப்பதைத் தவிர்ப்பதற்காக எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்தப் புதிய திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக 24 மணித்தியாலங்களும் இயங்கும் மைய நிலையமும் அமைக்கப்படவுள்ளது. (5,222)



## பதவி ஆசை எனக்கு இல்லை: இப்படிச் சொல்கிறார் மகிந்த

கொழும்பு, டிசெ. 9

பதவிகளைஎதிர்பார்த்துக்கொண்டுஅரசியலில்நான்ஈடுபடவில்லை. பதவி இல்லாமலும் நான் அரசியல் செய்திருக்கின்றேன். இவ்வாறுநாடாளுமன்றஉறுப்பினர்மகிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பன்னிபிட்டிய, ருக்மல்பிரதேசத்தில்நேற்றுஇடம்பெற்றநிகழ்வில் மகிந்த பங்கேற்றார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

'நாட்டில்தற்போதுஒருவகைஅரசியல்குழப்பநிலைஉள்ளது. அந்தக் குழப்ப நிலையை நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக மாத்திரமே சரிசெய்ய முடியும். நாங்களும், நாட்டுமக்களும் பொதுத் தேர்தலையே எதிர்பார்க்கின்றோம்" என்று மகிந்த கூறியுள்ளார். (5)

## விபத்தில் சிக்கியவரின் கால் அகற்றப்பட்டது

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

விபத்தில் காயமடைந்ததாகத் தெரிவித்து யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையில்சேர்க்கப்பட்டஇளம்குடும்பத்தலைவரின் வலது கால், முழங்காலின் கீழ் அகற்றப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்துக்கு முன்பாக, காங்கேசன்துறை பிரதான வீதியில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு விபத்து இடம்பெற்றது.

விபத்துத் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்ததாவது:

தெல்லிப்பழையிலிருந்து யாழ்ப்பாணம்நோக்கிஉந்துருளி வேகமாகச்சென்றது. அதில்இருவர்பயணித்தனர். தெல்லிப்பழைச்சந்திப்பகுதியில்போக்குவரத்துப்பொலிஸார்அவரை மறித்தனர். அவர்கள் நிற்காமல் வேகமாகச்சென்றனர். முச்சக்கர வண்டி ஒன்றில் பொலிஸார் அவர்களைப் பின்தொடர்ந்தனர். உந்துருளியில் சென்றவர்கள் வெட்டி வெட்டிச்சென்றனர்.

மல்லாகம்விசாலாட்சிவித்தியாலயத்துக்குமுன்பாக, யாழ்ப்பாணத்திலிருந்துதெல்லிப்பழைநோக்கியதிசையில்முச்சக்கரவண்டிவந்தது. உந்துருளியில்சென்றவர்கள்முன்னால் சென்றவாகனத்தை விலத்திச்செல்ல முற்பட்டபோது முச்சக்கரவண்டியுடன்மோதினர். முச்சக்கரவண்டிதடம்புரண்டது. உந்துருளி சுமார் 10 மீற்றர் தூரத்து இழுபட்டுச் சென்றது. சம்பவஇடத்திலேயேகுடும்பத்தலைவரின்கால்தசைத்துண்டங்கள் துண்டாகின, என்று குறிப்பிட்டனர்.

உந்துருளியில் பயணித்த ஒருவர் தெல்லிப்பழை மருத்துவமனையிலும்மற்றையவர்யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட, தெல்லிப்பழையைச் சேர்ந்த 2பிள்ளைகளின்தந்தையான குணபாலசிங்கம்கமலசீலனின் (வயது -32) கால் சிதைவடைந்த நிலையில் இருந்ததால்சத்திரசிகிச்சை ஊடாகஅகற்றப்பட்டதாகமருத்துவமனை வட்டாரங்கள்தெரிவித்தன. (5,26,37)

## ஓவியக் கண்காட்சி கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, டிசெ. 9

வன்முறையற்ற வாழ்வைக் கொண்டாடுவோம் என்ற ஓவியக் கண்காட்சி கிளிநொச்சியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் கண்காட்சி, மாலை 5.30 மணிவரை இடம்பெறும். இதேபோன்று நாளையும் கண்காட்சி தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஓவியர்கள் சிலர் இணைந்து வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர்கள் என்ற ஒரு குழுவை 2017ஆம் ஆண்டு உருவாக்கினர். பெண்களுக்கும், அனைவருக்கும் வன்முறைகளற்ற மகிழ்வான வாழ்வு, ஓவியத்தில் ஈடுபாடுள்ள மாணவர்களுக்கும் இளந்தலைமுறையினருக்கும் சமூக மாற்றத்துக்கான ஓவியங்கள் பற்றிய முன்னுதாரணங்களை வெளிப்படுத்தலும் ஓவியத் துறையில் ஊக்குவித்தலுமே இதன் நோக்கம். கமலாவாசுகி, ப.நிரஞ்சன், மு.தா.பா.ருக்சானா, கோ. மதீஸ்குமார், வெ. ஜதீஸ்குமார், த.வினோஜா, க.துஸா, அ.கீதாநந்தி, தி.திசாந்தினி, பா.மேரி நிருபா, ப. ராஜதிலகன், சு.நிர்மவாசன் ஆகிய ஓவியர்களின் ஓவியங்களே காட்சிப் படுத்தப்படவுள்ளன. (5,214)

### காலநிலை மாற்றம்

## பாதிப்புக்களை அதிகம் எதிர்கொண்ட இலங்கை

### பன்னாட்டுத் தரவரிசையில் இரண்டாமிடம்

கொழும்பு, டிசெ. 9

**உலகில் காலநிலை மாற்றங்களால், அதிகம் பாதிப்புகளை எதிர்கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.**

1998 ஆம் ஆண்டு தொடக்கம்2017ஆம்ஆண்டுவரையான காலப்பகுதியில் பன்னாட்டு ரீதியாக இடம்பெற்ற காலநிலை இடர்கள் தொடர்பாகமேற்கொள்ளப்பட்டஆய்வுகளின்அடிப்படையில்இந்த விடயம் தெரியவந்துள்ளது. போலந்தில், ஐக்கிய நாடுகளின்உலககாலநிலைமாநாடு அண்மையில் நடந்தபோது இது வெளியிடப்பட்டுள்ளது. பாதிப்பு மிகுந்த காலநிலை கொண்ட நாடுகளில் இது வரைகாலமும்ஏற்பட்டஇடர்களின்விகிதாசாரஅடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டது. காலநிலை இடர்கள் மிகுந்த நாடாககரிபியன்பிராந்தியத்தின் புவேர்டோரிகோ முதலிடம் பெற்றுள்ளது. இரண்டாவதுஇடத்தில்இலங்கைஉள்ளது. இலங்கைக்கு அடுத்தபடியாக டொமினிக்கன் குடியரசு தரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் மண்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்றவற்றால் சுமார் 200 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

கடந்த20வருடங்களில்உலகளாவியரீதியாகஇடம்பெற்ற காலநிலை இடர்கள் காரணமாக சுமார் 5 லட்சத்து 26 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. (5)

## நாட்டின் தலைவிதியை மாற்ற ஐ.தே.கவை அனுமதியுங்கள்

### மைத்திரியிடம் கோரிக்கை

புதிய அரசை அமைத்து நாட்டின் தலைவிதியை மாற்றுவதற்குஅரசதலைவர்மைத்திரிபாலஅனுமதிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியின்பொதுச்செயலர் அகிலவிராஜ்காரியவசம் நேற்றுவெளியிட்டுள்ளஅறிக்கையிலேயேமேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் முட்டுக்கட்டையை முடிவுக்கு கொண்டுவராவிட்டால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மோசமான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக நியமிப்பதன் மூலம் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வைக் காணலாம். நாடு முன்னோக்கி நகரமுடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது. தற்போதுஏற்பட்டுள்ளபெரியஇழப்பை மக்களே செலுத்தவேண்டியிருக்கும்.

இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசை அமைத்துநாட்டின்தலைவிதியைமாற்றுவதற்குஅரசதலைவர் அனுமதிக்கவேண்டும். இலங்கையின் அரசமைப்பையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி தொடரும். இலங்கையின் சுயாதீன நீதித்துறை, நீதியான தீர்ப்பை வழங்கும் - என்றார். (5)

## பொலிஸார் கொலையைக் கண்டித்து வடக்கில் தொடர்ந்தும் கவனவீர்ப்பு

வவுனியா, டிசெ. 9

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவில் பொலிஸார்இருவர்சுட்டுக்கொல்லப்பட்டமையைக் கண்டித்து வடக்கு மாகாணத்தில் தொடர்ந்தும்கவனவீர்ப்புப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா ஈச்சங்குளம் கிராமத்தில் நேற்றுக் காலை10மணிக்குகவனவீர்ப்புப்போரட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஈச்சங்குளம்தவசியாகுளம் அ.த.க பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமான போராட்டமானது 611ஆவது இராணுவத் தலைமையகம் முன்பாக நிறைவடைந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் 611 வது படைபிரிவின் இரானுவத் தளபதி ஆகியோரிடம் கையளித்தார்கள்.

வவுணதீவில் பொலிஸார் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து வவுனியாமாவட்டத்தின்வேறுபிரதேசங்களிலும்,



முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பிரதேசங்களிலும், யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும்கடந்தசிலநாள்களாகத்தொடர்ந்துகவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சிவில் பாதுகாப்பு பணியாளர்கள், சிறுவர்கள் உள்ளிட்ட தரப்பினர் கவனவீர்ப்புப் போராட்டத்தில்பங்கேற்றிருந்தனர். (5,110)

# நாடாளுமன்ற அடிதடியால் இரண்டரை லட்சம் ரூபா இழப்பு

கொழும்பு, டிசெ. 9.
நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான அரச சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரியவந்துள்ளது.
கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி மகிந்தவை தலைமை அமைச்சராக மைத்திரிபால சிறிசேன நியமித்த பின்னர், நாடாளுமன்றம் கடந்த மாதம் 14ஆம் திகதி கூடியது. மகிந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மகிந்த அணியினர் குழப்பங்களை விளைவித்தனர். நாடாளுமன்றம் கடந்த மாதம் 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெற்றபோதும், குழப்பங்கள் விளைவிக்கப்பட்டன. ஆசனங்கள் தூக்கி வீசப்பட்டன. ஒலி வாங்கிகள் சேதமாக்கப்பட்டன.
இந்தச் சேதங்கள் தொடர்பில் முதற்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நாடாளுமன்றத்தின் இலத்திரனியல் உபகரணங்கள் சேதமாக்கப்பட்டதன் மதிப்பு 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா எனவும், சபையின் இரு பக்கமும் அமைக்கப்பட்ட கம்பிகள் சேதப்படுத்தப்பட்டமைக்கான இழப்பு 30 ஆயிரம் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளன.
இதேவேளை, நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சபாநாயகரால் நியமிக்கப்பட்டது. அந்தக் குழு எதிர்வரும் 12ஆம் திகதி முதற்றடவையாக கூடவுள்ளது.
இந்தக் குழுவின் தலைவராக பிரதி சபாநாயர் ஆனந்தகுமாரசிறி நியமிக்கப்பட்டதுடன், சமல் ராஜபக்ச, பிமல் ரத்நாயக்க, மாவை.சேனாதிராசா, சந்திரசிறி கஜதீர, ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரும் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர். (5.10)

# தூதரகங்களின் நிகழ்வுகளில் அயலுறவுத்துறைச் செயலர்

## மேன்முறையீட்டு நீதிமன்ற இடைக்கால கட்டளையால் இந்த நிலை

**கொழும்பு, டிசெ. 9**
**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலக் கட்டளையை அடுத்து, தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்குப் பதிலாக, வெளிநாட்டுத் தூதரகங்களின் நிகழ்வுகளில், அயலுறவுத்துறைச் செயலரே, அரசைப் பிரதிநிதித்துவம் செய்து வருகிறார்.**



மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால கட்டளையினால் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகச் செயற்பட முடியாத நிலையும், அமைச்சர்கள் பணியாற்ற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. எனினும், மேன்முறையீட்டுநீதிமன்றம்இந்தக்கட்டளையைப் பிறப்பித்த அன்று, கொழும்பில் ஷங்ரிலா விடுதியில் நடந்த ஐக்கிய அரபு எமிரேட்சின்47ஆவது தேசியநாள்நிகழ்வுகளில், அந்த நாட்டின் தூதுவரின் அழைப்பின் பேரில் மகிந்த ராஜபக்ச கலந்துகொண்டிருந்தார்.
எனினும், ஷங்ரிலா விடுதியில் கடந்த புதன்கிழமைநடந்த, தாய்லாந்துதேசிய நாள் நிகழ்விலும், வியாழக்கிழமை ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமாவின் இல்லத்தில் நடந்த வரவேற்பு நிகழ்விலும், அயலுறவுத்துறைச் செயலர் ரவிநாத்ஆரியசிங்கவேஅரசைப்பிரதிநிதித்துவம்செய்தார்.
ஜப்பானிய சக்தரவர்த்தி அகிஹிட்டோவின் 85 ஆவது பிறந்த நாள், கொழும்பில் உள்ள தூதுவரின் இல்லத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் சபாநாயகர்கருஜெயசூரிய,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்உள்ளிட்டவர்கள்பங்கேற்றனர்.
இராஜதந்திர நிகழ்வுகளில், முதன்மை விருந்தினராக அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களேஅரசைப்பிரதிநிதித்துவம்செய்வது வழக்கம்.
மேன்முறையீட்டு நீதிமன்றம், தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், அமைச்சர்கள் பங்கேற்க வேண்டிய நிகழ்வுகளில் செயலர்களை பங்கேற்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# சட்டமருத்துவ அதிகாரி பிணையில் விடுதலை

*பரிசோதனைக்கு வந்த இளம்பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தாரென குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ. 9
மருத்துவப் பரிசோதனைக்காக களுபோவில மருத்துவமனைக்குச் சென்ற இளம் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில், சட்ட மருத்துவ அதிகாரி கைது செய்யப்பட்டு, நுகேகொட நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் களுபோவில பொலிஸார் தெரிவித்ததாவது:
கணவர் தாக்கியதாகத் தெரிவித்து மேற்படி இளம்பெண் ஜயவர்த்தனபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்றம் அவரை மருத்துவப் பரிசோதனைக்காக களுபோவில சட்ட மருத்துவ அதிகாரியிடம் அனுப்பி வைத்தது.
மருத்துவப் பரிசோதனைக்காக இளம்பெண்ணும் அவருடன் தாயாரும் சென்றுள்ளார். தாயாரை தனது அறைக்கு வெளியில் நிற்குமாறு கூறிவிட்டு, இளம் பெண்ணை மருத்துவப் பரிசோதனைக்காக அழைத்துச் சென்றுள்ளார். மருத்துவச் சோதனை என்ற பெயரில் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக அந்தப் பெண், எம்மிடம் (களுபோவில பொலிஸ்) முறைப்பாடு செய்தார், என்று குறிப்பிட்டனர்.
சட்ட மருத்துவ அதிகாரி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார். (5)

*நீதிமன்ற அவமதிப்பு வழக்கு*

# முன்னிலையாகுமாறு ரஞ்சனுக்கு அழைப்பு



கொழும்பு, டிசெ. 9
நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணைகளுக்காக எதிர்வரும்பெப்ரவரிமாதம் 26ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு ஒகஸ்ட் 21ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது நாட்டிலுள்ள நீதிவான்கள் மற்றும் சட்டத்தரணிகளில் பெரும்பாலானோர் ஊழல்வாதிகள் என்று ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.
இது நீதிமன்றத்தை அவமதிப்பதாகத் தெரிவித்து ஓய்வு பெற்ற வான்படை அதிகாரியான சுனில் பெரேரா மற்றும் சிங்கள ராவய அமைப்பின் செயலர் மாக்ல்கந்த சுதத்த தேரர் ஆகியோரால் உயர் நீதிமன்றத்தில் இரு வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.
மேற்படி மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. இதன்போதே 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உத்தரவிடப்பட்டது. (5.10)

# பரீட்சைமீள்திருத்த பணிகள் நிறைவு

கொழும்பு, டிசெ. 9
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மீள்திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மீள்திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன. அடுத்த வாரத்தில் பெறுபேறுகள் வெளியிடப்படும். அவை, கல்வி அமைச்சு மற்றும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மீள்பரிசீலனைக்கு 20 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன" என்று தெரிவித்துள்ளார்.
இதேவேளை, கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 3 லட்சத்து 55 ஆயிரத்து 326 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தார்கள். (5)


VISA SERVICES
கனடாவில் குடும்பமாக / தனியாக குடியேற விரும்புவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்.
தகைமைகள் : *உயர்தரம், Diploma / Degree
*45 வயதிற்குட்பட்டவர்கள்
எங்குமில்லாத மிகக்குறைந்த கட்டணங்கள்.
இவ்வரிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி கனடா செல்ல விரும்புவர்கள் 07.12.2018, 08.12.2018, 10.12.2018 ஆகிய தினங்களில் எமது அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகத்தேர்வில் ஆவணங்களுடன் கலந்து கொள்ளுங்கள்.
10 am - 3 pm
5 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கை
WINSTAR CONSULTANTS PVT LTD
45, VEMBADI STREET, JAFFNA.
www. winstarjaffna.com


# சந்திரிகாவை நாங்கள் ஒதுக்கவில்லை அவர்தான் ஒதுங்கிச் செயற்படுகின்றார்

## சு.க. செயலர் விளக்கம்

கொழும்பு, டிசெ. 9
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியும், முன்னாள் அரச தலைவருமான சந்திரிகாவை நாங்கள் ஓரங்கட்டவில்லை. அவர்தான் கட்சியின் செயற்பாடுகளிலிருந்து விலகிச் செயற்படுகின்றார். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சந்திரிகா அதில் பங்கேற்கவில்லை. தனக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று தெரிவித்து சந்திரிகா, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அது ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது.
இதற்குப் பதிலளித்து சு.க. செயலர் தெரிவித்ததாவது:
சந்திரிகாவை சுதந்திரக் கட்சி ஓரங்கட்டவில்லை. அவர் தான் கட்சியிலிருந்து விலகிச் செயற்படுகின்றார். மேலும் சந்திரிகா பண்டாரநாயக தொடர்ந்தும் கட்சிசார் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை புறக்கணித்து வருகின்றார். அவர் குற்றஞ்சாட்டுவதைப்போன்று நாம் அவரை ஓரங்கட்டவில்லை. அதற்கான தேவையும் கட்சிக்கு இல்லை.
தற்போது நாட்டில் காணப்படும் அரசியல் நெருக்கடி நிலமையில் இவ்வாறான விடயங்கள் குறித்துக் குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பது வீணான செயலாகும்.
கடந்த வாரம் இடம்பெற்ற சுதந்திரக் கட்சி சம்மேளனத்துக்கு தொகுதி அமைப்பாளர்களுக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டது. இதனால்தான் அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை - என்றார். (5)

# சிறுவர் முதியோருக்கு போசாக்குணவு வலி.தென்மேற்கு சபை புதிய திட்டம்

## அடுத்த வருடத்தில் ரூபா 30 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிசெ. 9

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் முன்பள்ளி மாணவர்கள், முதியோர் ஆகியோருக்கு போசாக்கு உணவு வழங்கல் மற்றும் பல அபிவிருத்தித் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது என தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது: வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட சிறப்பு அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த அமர்வில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்கு என சபை நிதியில் இருந்து ரூபா 31 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலதிகமாக ஏனைய நிதியில் 211.5 மில்லியன் ரூபா அபிவிருத்தி வேலைகளுக்காக திட்டமிடப்பட்டுள்ளது. சபையின் பொது நிர்வாகச் சேவைகளுக்காக 25.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது டன் சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதார சேவைகளுக்காக 44 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீதிகள், காணிகள், கட்டடங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக 70 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சபையின் 28 உறுப்பினர்களினதும் ஒத்துளைப்புடன் சபைக்குட்பட்ட 28 வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன. அந்த வீதிகளுக்கான வீதி விளக்குகளும் முழுமையாகப் பொருத்தப்படவுள்ளன.

சபையால் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர் விநியோக சேவைகளுக்காக 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நலன்புரி சேவைகளான சந்தைகள் மற்றும் நூலகங்களுக்காகவும் விளையாட்டு மைதான சீரமைப்புக்காகவும் மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்புப் பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை அமைப்பதற்காகவும் 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் பிரதேச சபைக்கென முன்பள்ளிக் கட்டடமும், கேட்போர் கூடமும், கலாசார மண்டபமும், கடைத்தொகுதிகளும் அமைக்கப்படவுள்ளன. இடர்களின் போதான முகாமைத்துவச் செயற்பாடுகளுக்குளனவும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர்களின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு பிரதேசத்துக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்குவதற்காக 2 மில்லியன் ரூபாவும் முதியோர் நலன் கருதி முதியோருக்கான போசாக்கு உணவு வழங்குவதற்காக ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் போன்ற மக்கள் நலன் சேவைகளுக்காகவும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார். (ம-8)

# சி.க.கூ.ச சமாசத்துக்கு புதிய பணிமனை

கொடிகாமம், டிசெ. 9

யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கச் சமாசத்துக்கென யாழ்ப்பாணம் தட்டாதெருப் பகுதியில் அமைக்கப்பட்ட புதிய பணிமனை திறப்பு விழாவும் கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் சிலை திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சிக்கனகடன் கூட்டுறவுச்சங்கச்சமாசத்தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன், வடமாகாண கூ.வே. ஆணைக்குழுச் செயலாளர் ந.திருலிங்கநாதன், இலங்கை சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் டாக்டர் பி.ஏ.கிரிவந்தெனிய, மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் ஏ.ஜெயசித் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் புதிய பணிமனையையும், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் உருவச்சிலையையும் திறந்து வைக்கவுள்ளனர். (ம-17,159)



# குடமியன் அ.த.க பரிசளிப்புவிழா

கொடிகாமம், டிசெ. 9

குடமியன் அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம.லினோஸ்குமார் தலைமையில் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கிராமிய அபிவிருத்தித்திணைக்களமாகாணப்பணிப்பாளர் திருமதி. இன்பராஜ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், மதிப்புறு விருந்தினராக குடமியன் அ.த.க. பாடசாலையின் முன்னாள் அதிபர் பொ.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-159)

# முதியோர் மதிப்பளிப்பு

கைதடி டிசெ. 9

கைதடியில், முதியோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வொன்று இன்று இடம்பெறவுள்ளது. கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

கைதடிவடக்குகயற்றசிட்டிகந்தசாமிகோவில்கல்யாணமண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழக தலைவர் 'லயன்' ப.செல்லத்துரையின் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் தங்கவேல் கிருபாகரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மதியழகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த விழாவில் 70 வயதுக்கு மேற்பட்ட 260 முதியோர்களுக்கு மதிப்பளிக்கப்படவுள்ளது. கனடாவாழ்கைதடிபுலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-288)



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் வாசிப்பு மாத போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ம– 159)

### போர் மற்றும் ஆழிப்பேரலையால் அதிகம் பாதிக்கப்பட்ட

# வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடுகள் அவசியம்

## சரவணபவன் எம்பியிடம் பருத்தித்துறை சபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 7

போர்மற்றும்சுனாமியால்மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடமாராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்கு அதிகளவான நிதியை 2019ஆம் ஆண்டின் பன்முகப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கித் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் பருத்தித்துறைப் பிரதேச சபையின் தவிசாளர் அரியகுமார்.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட மருதங்கேணி வட்டார உறுப்பினர் சுரேஸ் குமாரின் குறித்தொதுக்கப்பட்ட நிதியான 71 ஆயிரம் ரூபாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பாடசாலை உபகரணங்



களை மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு பருத்தித்துறைப் பிரதேச சபையில் கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

நாகர்கோவில் மகா வித்தியாலயம், மாமுனை அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கே அவ்வாறு கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் தவிசாளர் அரியகுமார்.

"பருத்தித்துறைப்பிரதேசசபைக் குட்பட்ட பகுதி நீண்ட பரந்த பிரதேசமாகக் காணப் படுகின்றது. ஆனால் வருவாய் குறைந்த பகுதியாகவும் இது உள்ளது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் அடுத்த ஆண்டில் எமது பகுதிக்கு கூடுதல் நிதி ஒதுக்குமாறு கோரியுள்ளேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் அரசியல் இணைப்பாளர் பிரதாபும் கலந்துகொண்டிருந்தார். (ம-160)

# நாட்டில் குழப்பம் உடன் தீர தேவாலயத்தில் மன்றாட்டு

## ஆனைக்கோட்டை அடைக்கலநாயகியிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

நாட்டில் தற்போது நிலவுகின்ற அரசியல் குழப்பம் தீருமாறு ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலயத்தில் நேற்று மன்றாடப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் 'கடன் திரு நாள்கள்' என்று சொல்லப்படக்கூடிய முக்கியமான விழாக்களில் ஒன்றான மரியன்னையின் அமலஉற்பவப்பெருவிழாத்திருப்பலிஆனைக் கோட்டை அடைக்கலநாயகிஆலயத்தில்நேற்றுக் காலை 7 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் மன்றாட்டுவேளையில் நாட்டில் தற்போது நிலவும் அரசியல் குழப்பம் முடிவுக்கு வரவேண்டும் என்று மன்றாடப்பட்டது. (ம)



## சாதனையாளர் மதிப்பளிப்பு

கொடிகாமம்,டிசெ.9

கிளிநொச்சி இந்து ஆரம்பவித்தியாலய பரிசில்நாள்நிகழ்வும் சாதனையாளர்கள்மதிப்பளிப்பும் கடந்தமாதம் 30ஆம்திகதி காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் பாலன் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பொ.விஜயநாதன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சைவ மங்கையர் கழகச் செயலரும் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகருமான திருமதி செ.சோமசேக ரம்பிள்ளை, ஜெயந்திநகர் கிராம அலுவலர் திருமதி றஜீவனா ஜஸ்டினன்ட், அயற் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர்கலந்துகொண்டனர். (159)

வடக்கின் எல்லையான ஒதியமலைக் கிராமத்தை

# காட்சிப்பொருளாக பார்க்க வேண்டாம்

அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

வவுனியா,டிசெ.9

**வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களினதும், வடக்கின் எல்லையாகவும் உள்ள ஒதியமலைக்கிராமம் இன்று காட்சிப் பொருளாக மட்டும் உள்ளது. இந்தக்கிராமங்களை பாதுகாக்கவேண்டும்என்றமனநிலையைக்காணமுடியவில்லையெனஒதியமலை, பெரியகுளம் பகுதி மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.**

இந்த பிரதேசங்களில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில கிராம மக்கள் தெரிவித்ததாவது:

ஒதியமலைக் கிராமம் வரலாற்றில் பல சாதனைகளையும், சோதனைகளையும் சந்தித்த முக்கிய கிராமம். போர் ஆரம்பிக்கும்முன்பேஒதியமலைக்கிராமத்தில்154 குடும்பங்களும், அயல் கிராமமான பெரியகுளத்தில் 117 குடும்பங்களும் வாழ்ந்து வந்தன. 1984 ஆம் ஆண்டுவரை அனைத்துவளங்களோடும்போதியவருமானத்தோடும் வாழ்ந்த இந்தக் கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி இரவுநடந்த சம்பவத்தில்34ஆண்கள்படுகொலைசெய்யப்பட்டதுடன், கிராமத்தின் இயல்புநிலை இழக்கப்பட்டது. கிராமத்தில் இருந்து சுமார் 2 மைல்தொலைவில்1983ஆம்ஆண்டில் தமிழ்மக்களின்பூர்வீகநிலங்களைஅபகரித்து மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின்ஊடேபுகுந்தஇராணுவத்தினர் இந்தமனிதஅவலத்தைஅரங்கேற்றினர். அன்றிலிருந்தேஇடம்பெயரத்தொடங்கிய மக்கள் இன்று வரைக்கும் அச்சத்துடனேயே வாழ்கின்றனர்.

இதன்பிற்பாடு இறுதிப் போர் காரணமாக இடம்பெயர்ந்து நாட்டின் பல பாகத்திலும் சிதறிவாழும்நிலையில், கிராமத்தில்மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரைக்கும் ஒதியமலையில் 57 குடும்பங்களும், பெரியபுலத்தில் 14 குடும்பங்களும் மட்டுமே மீளக்குடியமர்ந்துள்ளன.

இந்த மக்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் இல்லை. ஒதியமலை மற்றும் பெரியகுளம்பகுதியில்55வீடுகளைதொண்டு நிறுவனம்ஒன்றுஅமைத்துவழங்கியது. இருப்பினும் ஏனைய எந்த அடிப்படை வசதிகளும் இன்றியே மக்கள் வாழும் நிலையில் அண்மையில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துஒட்டுசுட்டான்பிரதேசசெயலரைத்தொடர்புகொண்டுகேட்டபோது:

இந்தக் கிராமத்தின் பல குறுக்கு வீதிகள் சீரமைக்கப்படவேண்டி உள்ளதோடு, மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், மின் குமிழ் பொருத்துமாறும் , தினம் யானையால் ஏற்படும் பிரச்சனைக்குத் தீர்வுவழங்குமாறும் மக்கள்கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

யானைத் தாக்கத்திற்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்க அடுத்த ஆண்டுநிதிகோரப்பட்டுள்ளது. மின் குமிழ் பொருத்தும் நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயப்படுவதுடன் இவர்களுக்கான விவசாயஊக்குவிப்புத்தொடர்பிலும்ஆராயப்படுகின்றது-என்றார். (105)

வவுனியா மாவட்ட குளங்கள் நிரம்புவதால் அபாயம்

## பாவற்குளம் உடைப்பெடுத்தால் எதிர்கொள்ள நடந்தது ஒத்திகை

வவுனியா,டிசெ.9

இந்த ஆண்டில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் மழைவீழ்ச்சி அதிகளவில் காணப்படுவதால் குளங்களின்கொள்ளளவு முழுமையடையும்சந்தர்ப்பம்ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் பாவற்குளமும் அதன் கொள்ளளவை அண்மிப்பதால், நீர் உடைப்பெடுத்து ஆபத்து ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த ஒத்திகை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

பாவற்க்குளத்தின்மொத்தக்கொள்ளளவு19.6அடி. குளத்தில் நீர்மட்டம் தற்போது 18 அடியையும் தாண்டியுள்ளது.

நீர் வெளியேறும் நிலை ஏற்பட்டால் அருகில் உள்ள 6 கிராமங்களும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும்.

அதனை எதிர்கொள்வது எப்படி? கிராமத்தில் வசிக்கும் 2 ஆயிரத்து 940 பேரையும் வெளியேற்றும் வழிமுறைகள் என்ன என்பது தொடர்பில் ஆராயப்பட்டதோடு, மக்களை வாகனங்கள் மூலம் வெளியேற்ற கைக்கொள்ளும் முறைகள், அதற்கு தேவையான கால அவகாசம் என்பன பரீட்சித்துப் பார்க்கப்பட்டு அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

இதற்காகபாவற்குளம்4ஆம், 5ஆம், 6ஆம்பகுதிமக்களும் ஆண்டியாபுளியங்குளம், சூடுவெந்தபுலவு, கந்தசாமிநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைவரும் நேற்று முன் தினம் வெளியேற்றப்பட்டு பரீட்சிக்கப்பட்டது.

இந்தப் பணியில் 12 திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும்உத்தியோகத்தர்கள்பங்குகொண்டிருந்தனர். மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவினர் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். (105)



## கலைஞர்கள் ஒன்றுகூடல்

மாந்தை, டிசெ. 9

மாந்தை கிழக்கு பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரின் ஏற்பாட்டில் பிரதேச கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வுகள் இரு இடங்களில் நடைபெற்றன.

நேற்று முன்தினம் கலைஞர்கள் அதிகம் வாழும் பொன்னகர், விநாயகபுரம்பிரிவுகளைச்சேர்ந்தகலைஞர்களுக்கு பொன்னகர் பொது நோக்கு மண்டபத்திலும், ஏனைய பிரிவு கலைஞர்களுக்கு பிரதேச செயலக மண்டபத்திலும் ஒன்றுகூடல்கள் இடம்பெற்றன.

கலைஞர்கள் ஒன்றுகூடித் தமது அனுபவப் பகிர்வுகளையும் எதிர்கால கலாசாரச் செயற்பாடுகள் தொடர்பாகவும்கலந்துரையாடினர்.



பிரதேச கலாசார அலுவலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக பிரதேச செயலர் றஞ்சனா நவரத்தினம் கலந்து கொண்டார். (9)

## பச்சிலைப்பள்ளி சபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு

கிளிநொச்சி, டிசெ. 9

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் தெரிவித்துள்ளார்.

சபையின் பாதீட்டை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் மற்றும் முள்ளிப் பற்று, புலோப்பளை. முகமாலை போன்ற உப அலுவலகங்களில் பர்வையிட முடியும்.

அத்துடன் எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் மக்கள் தமது ஆலோசனைகளை வழங்குமாறும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார். (6)



## வாழ்வாதார உதவியாக வர்த்தக நிலையம் வழங்கல்

வவுனியா, டிசெ.9

கணவனை இழந்து 4 பிள்ளைகளுடன் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு, வர்த்தக நிலையம் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் மூலம் ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் டீரன் என்பவர் இதற்கு ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளார்.

வவுனியா தேக்கவத்தைப்பகுதியில் அமைக்கப்பட்ட பலசரக்கு விற்பனை நிலையம் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால் முன்னெடுக்கப்பட்டது.

சமூக ஆர்வலர்களினால் நேற்று வர்த்தக நிலையம் திறந்துவைக்கப்பட்டு, பெண்தலைமைத்துவக் குடும்பத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. (110)



## சேமிப்பை ஊக்குவிக்க வங்கியால் வழிகாட்டல்

மாந்தை, டிசெ. 9

மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சிறிகேதாரலிங்கேஸ்வரர் கோவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சேமிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய சேமிப்பு வங்கியினர் வங்கிக் கணக்குப் புத்தகத்தையும் உண்டியல்களையும் வழங்கினர்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரதேசசெயலகமண்டபத்தில் இடம்பெற்றது.

கோவில்நிர்வாகத்தினர்மேற்கொண்ட முயற்சியின்பயனாக வங்கியின் கணக்குப் புத்தகங்களையும் உண்டியல்களையும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்த கொண்ட பிரதேசசெயலர் றஞ்சனா நவரத்தினம் வழங்கினார். (9)

**விற்பனைக்கு**

புத்தகம் வெட்டும் இயந்திரம் (3 KNIFE CUTTER) ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்டது. (Original) 3 புதிய உருக்குக்கத்திகளுடன் அதற்குரிய சகல உபகரணங்களுடன் மலிவு விலையில் ஏக்கித்த, வத்தளை. (ACO 3580)(14,17)

**077 495 1947**

**SVM கொப்பிகள் மலிவு விற்பனைக்கு**

தடித்த மட்டை கேட்டு கொப்பி வரைக்கும் மற்றும் அனைத்து பாடசாலை உபகரணங்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. மற்றும் கண்ணாடி அலுமாரி Fittings விற்பனைக்கு உண்டு.

**075 927 3306** (CS 21701)(14,17)


**கடை வாடகைக்கு**

யாழ்.நகரில் **K.K.S.** வீதியில் அமைந்துள்ள விசாலமான கடை வாடகைக்கு விடப்படும்.

**077 915 1247, 076 838 3672**


# இரணைமடுக் குளத்தின் 5 வான்கதவுகள் திறப்பு

## மக்கள் அச்சமடையத்தேவையில்லையென பொறியியலாளர் தெரிவிப்பு



கிளிநொச்சி, டிசெ.9

தொடரும் கன மழையால், கிளிநொச்சி மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளமாக வுள்ள இரணைமடுக் குளத்தின் ஐந்து வான் கதவுகள் திறக்கப்பட் டுள்ளன.

குளத்திற்கான நீர் வரவு அதிகரித்துள்ளமையால் தற்போது குளத்தின் நீர் மட்டம் 36.5 அடியாக உயர்ந்துள்ளது.

இந்த அபாய நிலையைக் கருத்தில்க் கொண்டு நேற்றுக் காலை 11 மணியளவில் குளத்தின் 14 வான்கதவுகளில், ஐந்து வான் கதவுகள் 150 மில்லி மீற்றர் அளவில் நீர் வெளியேறத்தக்கதாக பிரதி நீர்பாசனப் பணிப்பாளர், பொறியியலாளர் சுதாகரனின் கண்காணிப்பில் திறக்கப்பட்டது.

எதிர்வரும் நாட்களில் இன்னமும் அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்க பெறும் என எதிர்பார்க்கப்படுவதால் முன்னெச்சரிக்கையாகவே இந்த ஐந்து வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

இவ்வாறு வான் கதவுகள் திறந்து விடப்பட்டமையால் திறந்து விடப்பட்டுள்ள நீர் கனகராயன் ஆறு வழியாக கடலில் கலக்கிறது. இதனால் தாழ் நிலப் பகுதியில் எந்தவகையிலும் பெரிய அளவிலான பாதிப்புக்கள் ஏற்படாது எனவும், தாம் தொடர்ந்தும் கண்காணிப்பில் உள்ளதால் ,மக்கள் அச்சமடையத்தேவை இல்லை எனவும் பிரதி நீர்பாசனப் பணிப்பாளர், பொறியியலாளர் சுதாகரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் குளத்தின் வான் கதவுகளில் ஒன்று சம்பிரதாயபூர்வமாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (6,214)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா உருத்திரன்



காளி கோவிலடி மல்லாகத்தை பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா உருத்திரன் நேற்று (08.12.2018) சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை பூரணம் தம்பதியரின் அன்புகனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் உருத்திரனின் (முன்னாள்சிரேஸ்டகணக்காளர், இ.போ.ச) அன்புமனைவியும் சிவசுதாசன், சிறிரவீந்திரதாசன், பாலமுரளிதாசன் காலஞ்சென்ற துளசிதாசன் மற்றும் செந்தில்தாசன் ஆகியோரின் அன்புத்தாயும் தேவிகா, ரேணுகா, சுதாஜினி, மைதிலி ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இலட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, கதிரமலை(மலை), கிட்டினர்(சின்னத்தம்பி), விக்கினேஸ்வரன் (பிள்ளையார்), நடராஜா (ஓய்வு பெற்ற அதிபர், யா/ அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் அனுஜா, ஜனனி, நிலானி, டானியல், மைக்கல் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளி கோயிலடி,**
**மல்லாகம்.**

**தகவல் : த. நடராஜா (T.N -சகோதரர்)**
**சிறிஸ்கந்தராஜா (சிறி, மருமகன்)**
**077 1146 819**


**வீடு விற்பனைக்கு**

சுன்னாகம், ஸ்ரேசன் வீதிக்கு அருகில் 04 பரப்புக்காணியில் 4 அறைகளைக் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. (CS/20826)(11,17)

**021 224 2046, 075 042 2858**

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் சந்தியில் இருந்து மானிப்பாய் வீதியில் 1km தொலைவில் $1^{1/2}$ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**தொடர்பு - 076 119 8887, 076 998 0693**

**விற்பனைக்கு**

40 அடியை இரண்டாக வெட்டியதில் பாதி கன்ரெய்னர் பெட்டி விற்பனைக் குண்டு.
மண் / சல்லி இருக்கும் இயந்திரம் விற்பனைக்கு.

**077 374 0773**

**பணிப்பெண் தேவை**

திருநெல்வேலி வீட்டில் தங்கி இருந்து பணிசெய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 077 668 7688**

**விற்பனைக்கு**

Stock Clearing Sale
கம்பியால் தைக்கும் இயந்திரம்
(Wire Stiching Machine)

(ACO/356)(11,17) **077 712 4747**

**டிப்பர் விற்பனைக்குண்டு**

TATA ரக டிப்பர் (3C) 36000 km ஓடிய நிலையில் உள்ளது. இல NPLM xxxx
விலை 38 00 000/=

**தொடர்பு - 077 239 2626**

**வான் விற்பனைக்கு**

Hiace டொல்பின் வான் விற்பனைக்கு. 250 -

**தொடர்பு - 077 673 7956 யாழ்ப்பாணம்.**


**விற்பனைக்குண்டு**

K.K.S இல் உடனடியாக காணி விற்பனைக்குண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**071 072 7233**


## மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 06 . 06 . 1946 | | 08 . 12 . 2018 |



### கணபதிப்பிள்ளை சிறிகந்தராசா

வடமராட்சி கிழக்கு, குடாப்பு நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும், விசுவமடுவை வசிப்பிடமாகவும் தற்போது சாந்தசோலை வீதி, காளிகோவில் 4 ஆம் ஒழுங்கை மகாஇறம்பைக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிறிகந்தராசா நேற்று (08.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான வைரவநாதன் நவமணிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் குபேந்திரன் (லண்டன்), சிவசக்தி (கனடா), காலஞ்சென்ற சிவரூபி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பளை), குமாரசாமி (புலவர், உடையார் கட்டு) மற்றும் சிவஞானசுந்தரம் (செந்தில், மீசாலை), மனோன்மணி (பளை), முருகையா, வைத்தியர் கஜேந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஜெயந்தா (லண்டன்), சுதாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் சுலக்சிகா, குவேரி, சாகித்திகா, தேனுசன், கஜானா, கேதிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2018) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாந்தசோலை வீதி,**
**4 ஆம் ஒழுங்கை மகாஇறம்பைக்குளம்,**
**வவுனியா.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**சகோதரர் - செந்தில் 077 712 5450,**
**மனைவி - மகேஸ்வரி 077 530 0457**


British BUSINESS COLLEGE — Where Students Come First

**BBCஇன் புதிய அனுமதிகள்**

BBC பாலர் பாடசாலையின்
20ஆம் வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2019ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC Early Learning Schools

சர்வதேச தரத்தினாலான **Canada** கல்லூரியின் பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

No Admission Fees
No Monthly Fees



**நடன வகுப்புக்கள்**

- பிரபல பரதநாட்டிய ஆசிரியரினால் நடாத்தப்படும் அனைத்து மாணவர்களுக்குமான பரதநாட்டிய வகுப்புக்கள்
- எமது யாழ் மற்றும் மானிப்பாய் வளாகங்கள்
- மாணவர்களின் வசதிக்கேற்ற நேரங்களில் வார மற்றும் வார இறுதி நாட்களில்

**2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2 + முதல் 3 வரை | 3 + முதல் 4 வரை | 3 + முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்

நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

## சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அத்தியட்சகர் கடமையேற்றார்

யாழ்ப்பாணம், டிசெ. 9

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகராக மருத்துவர் திருமதி தயாளினி மகேந்திரம் நியமிக்கப்பட்டுள்ளார். அங்குஏற்கனவேபணிப்பாளராக இருந்த மருத்துவர் ம. அச்சுதன் மிருசுவில் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு தயாளினி மகேந்திரன் நியமிக்கப்பட்டபோது அதுவரை அத்தியட்சகராக இருந்த அச்சுதன் அங்கிருந்து வெளியேறியிருக்கவில்லை. அதனால் குழப்பம் ஏற்பட்டது.

தயாளினி தற்காலிகமாக மாகாணசுகாதாரஅமைச்சில் இணைக்கப்பட்டிருந்தார். அது தொடர்பில் ஆராயப்பட்டது.

இறுதியில் மேற்குறித்த இடங்களில் பணிபுரிய வடக்கு மாகாண ஆளுநர் கடந்தவாரம்அவர்களுக்குஉத்தரவிட்டிருந்தார். (4,105)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 9

தோட்டக்கிணற்றிலிருந்துமுதியவரின் சடலத்தை மீட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சிகரணவாயில்கடந்த 6ஆம்திகதிஇதுஇடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் தெய்வேந்திரன் (வயது -71) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் நீண்டகாலமாகத் தனித்துவாழ்ந்துவந்துள்ளார். அவரது வீட்டுக்கு அருகிலுள்ள தோட்டக்கிணற்றில்மர்மமான முறையில் அவர் சடலமாகக் காணப்பட்டதைஅயலவர்கள் அவதானித்து பொலிஸாருக்குத்தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச்சென்ற பொலிஸார் விசாரணை நடத்தினர். சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில்சேர்த்திருந்தனர்.

பரிசோதனையில் சந்தேகத்துக்கிடமானதாகக் கருதமுடியவில்லை. அவருக்குக் கண் பார்வை குறைவு. என்றுவிசாரணையில்கூறப்பட்டது. அவர் தவறுதலாகக் கிணற்றுக்குள் வீழ்ந்திருக்கலாம் என்று விசாரணையில் கூறப்பட்டது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4,8)

# ஈழத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களை மீளக் கட்டியெழுப்ப நிதி வழங்குங்கள்!

## புலம்பெயர்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவரிடமும் கோரிக்கை விடுக்கிறது கனகபுரம் மாவீரர் பணிக்குழு

யாழ்ப்பாணம், டிசெ. 9

**தாயகத்தில் அமைக்கப்பட்டிருந்த 30க்கும் மேற்பட்ட மாவீரர் துயிலுமில்லங்கள் திட்டமிட்டு சிதைக்கப்பட்டுவிட்டன. அவற்றை மீளக் கட்டியெழுப்ப நினைவாலயங்களின் மீட்புக்கு நிதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

கனகபுரம்மாவீரர்பணிக்குழுவின்செயலாளர் குமாரசிங்கம் புலம்பெயர் உறவுகளிடம் முதன்மைக்கோரிக்கையாக இதனைவிடுத்துள்ளார். அவர் மாவீரர் கப்டன் காந்தரூபனின் தந்தை.

இதுதொடர்பாகஅவர்வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

கனகபுரம் துயிலுமில்ல தெற்குப் பக்கத்தின் கட்டடம் ஆஸ்திரேலியாவின் சிட்னியிலுள்ள தமிழர்களின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டது.

மாவீரர்கள் தமிழ்த் தேசிய இனத்துக்குச் சொந்தமான அழியாத சொத்துக்கள், என்றுமே மறக்கமுடியாத நினைவுக் கோபுரங்கள். அவர்கள் துயில்கின்ற இல்லங்கள் தமிழர்கள் போற்றி வணங்கவேண்டிய கோயில்கள். நாம் காலங்காலமாகப்போற்றிவழிபட்டுவந்தஎமதுமாவீரத் தெய்வங்களின் நினைவாலயங்கள் முற்றாகச் சிதைத்து அழிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இன நீதிக்காகவும் இன விடுதலைக் காகவும் நாங்கள் அரசியல் வழிநின்று போராடிக் கொண்டிருக்கிறோம். மறுபுறம் எமக்கே உரித்தான எமது பூர்வீக அடையாளங்களும் எமது மாவீரர்களின்நினைவாலயங்களும்திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றை அழிவிலிருந்து பாதுகாத்து எமது அடுத்த சந்ததிக்குக் கொண்டுசெல்லவேண்டியதுஒவ்வொருதமிழரினதும்தார்மீகக்கடமை.

கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்லத்தின் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முதற்கட்டமாகச் சுற்றுமதில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இல்லத்தின்பின்புறமதில்யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனின்ஒழுங்குபடுத்தலில்கட்டிமுடிக்கப்பட்டிருந்தது. தற்போதுதுயிலுமில்லத்தின்தெற்குப்பகுதியில்மதில்25இலட்சம்ரூபாநிதியில்கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதில்பூச்சுமற்றும்வர்ணம்பூசும் பணிகள்மீதமுள்ளன. இந்தப்பணிகளைஓரிரு வாரங்களில் பூர்த்திசெய்து தருவதாகச் சிட்னி உறவுகள் உறுதியளித்துள்ளனர். அந்த உறவுகளுக்கு எமதுநன்றிகளையும் அன்பையும் பரிமாறிக்கொள்வதில்மனநிறைவடைகின்றோம்.

கட்டுமானப் பணிகளின் தொடர்ச்சியாக மீதமுள்ளஇருபக்கமதில்களைக்கட்டியெழுப்புவதற்குப் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் எமது உறவுகள் கட்டுமானப் பணிகளைப் பூர்த்திசெய்ய உரிய ஏற்பாடுகளைச்செய்யவேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டிக்கொள்கிறோம் - என்றுள்ளது. மாவீரர் தினம் தாயகம் எங்கும் கடந்தவருடம்போன்றுஇந்தமுறையும்எழுச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4,222)

# மாமுனை - பளை குறுக்கு வீதியை சீரமைக்க எவராவது நிதி வழங்குங்கள்

## மருதங்கேணிப் பிரதேச செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 9

வடமராட்சி கிழக்கில் மாமுனையிலிருந்து பளைக்குச் செல்லும் குறிக்கு வீதியைச் சீரமைக்க 65 மில்லியன் ரூபா பணம் தேவைப்படுகிறது. இதுதொடர்பில்பலதரப்பிடமும் பல தடவைகள் கூறியுள்ளோம். இன்னும் கோரிக்கை விடுத்து வருகிறோம். நிதி வழங்க எவரும் முன்வரவில்லை. நிதி கிடைத்தால்தான் அந்த வீதியைச் சீரமைக்கலாம்.

இவ்வாறுமருதங்கேணிப்பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த வீதியைச் சீரமைக்குமாறு அதனைப் பயன்படுத்தும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இதுவரைஅதற்கானநடவடிக்கைஎடுக்கப்பட்டதா? எப்போதுதான் வீதியைச் சீரமைப்பார்கள் என்று மக்கள்கேள்வியெழுப்புகின்றனர்.

இதுகுறித்துஅவர்கள்மேலும்தெரிவித்ததாவது:

குறித்த வீதி மழை காலங்களில் பயணிக்கமுடியாதவாறுதண்ணீர் தேங்கியுள்ளது. அந்தவீதியில்ஒரு பாலம்அமைத்தும்சுமார்500மீற்றர் நீளத்துக்குக் களிமண் அல்லது கிரவலாவது போட்டு வீதியின் உயரத்தைச் சுமார் இரண்டு அடிவரை உயர்த்தினால் தம்மால் இலகுவாகப் பயணிக்க முடியும் என்றும் அதனூடாகப் பயணிப்பவர்கள் கூறுகின்றனர்.

தற்போது மாமுனை செம்பியன் பற்று பகுதியிலிருந்து சுமார் 5.6 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பளை நகருக்குத் தாம் மருதங்கேணி புதுக்காடு வழியாகச்சுமார் 20 கிலோமீற்றர் தூரம்வரை செல்லவேண்டியுள்ளது.

இரண்டுவருடங்களுக்குமுன்னர் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர், அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் மக்கள் பங்களிப்புடன் ஓரளவுதிருத்தம்செய்யப்பட்டது. அந்த நிதிக்குள்முழுமையாகச்சீரமைக்க முடியவில்லை. தற்போது போக்குவரத்து முடங்கியுள்ளது. தாம் இலகுவாக விரைவில் பயணிக்க குறித்த வீதியைச் சீரமைக்கவேண்டும்என்றுஅதனூடாகப் பயணிப்பவர்கள் கூறுகின்றனர்.



இவை தொடர்பில் பிரதேச செயலரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்தவீதியைச்சீரமைக்கவேண்டும்என்றுஅதனூடாகப்பயணிப்பவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். மழை காலங்களில் வீதியின் சுமார் 1.6 கிலோமீற்றர் தூரத்துக்கு வெள்ளம் வீதியை முடிப் பாய்கிறது. அந்த இடத்தில் கற்கள் நிரப்பியே வீதியை உயர்த்திப் பின்னர் வீதி அமைக்க வேண்டும். அதற்கு 65 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. அதற்கான நிதியை அரசு அல்லது அரச சார்பற்றநிறுவனங்கள்வழங்கவேண்டும். பெருந்தொகை நிதிஎன்பதால் நிதி கிடைப்பது கடினமாகவே உள்ளது. நிதி கிடைத்தால்தான் வீதியைச் சீரமைக்க முடியும். இந்த வீதியைச்சீரமைக்கவீதிஅபிவிருத்தித் திணைக்களத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிதி கிடைப்பதில்தான்தாமதம்ஏற்படுகிறது. இந்தவிடயத்தைஅரசசார்பற்ற நிறுவனங்களோ ஏதாவது வேறு அமைப்புகளோ கவனம் செலுத்தி நிதி வழங்க முன்வர வேண் டும். அப்போதுதான் குறித்த பகுதியிலுள்ள மக்கள் இலகுவாகப் பயணிக்க முடியும் - என்றார். (4,160)

# நியமனம் இறுதி நிலையை எட்ட மூக்கை நுழைத்தார் அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 9

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களை அரச நியமனத்துக்குள் உள்வாங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளநிலையில், வடக்கிலுள்ளஓர்அமைச்சர் நியமனம்தொடர்பில் அமைச்சரவைத் தீர்மானத்தைச் சமர்ப்பிக்க முயன்றுள்ளார். அதனால் அது சர்ச்சைக்குரியதாகியது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில்மேலும்தெரியவருவதாவது: வடக்கு மாகாணத்தில் உள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்குவது 3 வருடங்களாகஇழுபறியில்இருந்தது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தற்போதுள்ள சுகாதாரத் தொண்டர்கள் அனைவரையும் நிரந்தரமாக்கும் முயற்சியை எடுத்திருந்தது. குறிப்பிட்ட சிலரை அதற்குள் உள்வாங்குவதில் இழுபறி காணப்பட்டது. அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரை நாடியுள்ளனர். அமைச்சர் தான் ஓர் அமைச்சரவைப் பத்திரத்தைச்சமர்ப்பிக்கிறேன்என்றுஅதற்கானஆவணத்தைத் தயாரித்து கொழும்பு அரசின் அமைச்சரவைக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தத் தகவல் கொழும்பிலிருந்து வடக்கு ஆளுநருக்கு தெரிவிக்கப்பட்டது. வடக்கில் தற்போது107 சுகாதார ஊழியர்களுக்குவெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஏற்கனவே பணியிலுள்ளசுகாதாரத்தொண்டர்களில்467 பேருக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். பதவி உயர்வு வழங்கப்படும்போது ஆரம்ப நிலையில்467வெற்றிடங்கள்ஏற்படும். அவற்றுக்கு 467பேருடன் இணைந்து மிகுதியாகவுள்ள 107 பேருக்குமாக மொத்தம் 574 பேருக்குநியமனம்வழங்கமுடியும். தற்போது நியமனம் கோரியுள்ளவர்களின் எண்ணிக்கை 574.

புதிய நியமனம் வழங்குவதற்குத் திறைசேரியின்ஒப்புதல்பெறப்படவேண்டும். ஒப்புதலுக்குக்கடிதம்அனுப்பிவைக்கப்பட்டுவிட்டது. அது கிடைத்ததும்நியமனம்வழங்கமுடியும்என்று கூறப்பட்டுள்ளது. எனவே அந்த அமைச்சரது பத்திரம்தேவையற்றநடைமுறைச்சிக்கலை உண்டுபண்ணும் எனத் தெரிவித்து அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் அலுவலகம் மூலமாக அறிய முடிந்தது.

தற்போது அமைச்சர்கள் என்று எவரும் இல்லை. அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ராஜாங்கஅமைச்சர்கள்மட்டுமன்றிதலைமை அமைச்சர்களான மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க அனைவரும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே உள்ளனர். (4,105)

# முதலாளிமார் சம்மேளனம் சர்வாதிகாரியாக மாறுகிறது

## தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பிரதிப் பொதுச் செயலர் விசனம்

கொழும்பு, டிசெ. 9
பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் போராட்ட விடயத்தில் தொழிற்சங்கங்களிடையே கருத்தொருமிப்பு இன்மையும், ஒற்றுமையின்மையும் நீடிக்கிறது. அதனால் முதலாளிமார் சம்மேளனம் சர்வாதிகாரிகளைப்போன்று செயற்படும் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பிரதிப் பொதுச் செயலர் ஆர். சலோபராஜா தெரிவித்தார்.

சம்பள முரண்பாடு நீடிப்பது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

ஆயிரம் ரூபா சம்பளத்தை வலியுறுத்திப் பல்வேறு தரப்பினரும் போராட்டத்தை வலுப்படுத்தியுள்ளனர். முதலாளிமார் சம்மேளனம் தனது நிலைப்பாட் டில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பலசுற்றுக்களாக நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வி கண்டுள்ளன.

இன்றைய சூழ்நிலையில் தோட்டங்களை நிர்வகிக் கும் 22 கம்பனிகளையும் தனித்தனியாக இயங்கவைக்க வேண்டும். இது குறித்து ஏற்கனவே நாம் அரசதலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் கடிதம் மூலமாக அறிவித்துள்ளோம். கம்பனிகள் தனியாக இயங்கும் போது அவற்றின் நிர்வாகிகளுக் கிடையே போட்டி மனப்பான்மை ஏற்பட்டு அதிக இலாபம் பெற்று முன்னிலை பெறுவதற்காக ஆர்வத்துடன் செயற்படுவர். தொழிலாளர்களுக்குக் கூடிய சம்பளம் வழங்கும் நிலைக்கு உந்தப்படுவர்.

கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில சரத்துக்கள் சிறந்தவை. ஆனால் சம்பளத்தைத் தீர்மானிக் கும் விடயத்தில் உள்வாங்கப்பட்டுள்ள சரத்துகள் ஏற்புடையனவாக இல்லை. இந்த விடயத்தில் அரசோ, அரசதலைவரோ முதலாளிமார் சம்மேளனத்துக்கு நேரடியாக அழுத்தம் கொடுக்கமுடியாது. புரிந்துணர்வு அடிப்படையில் பேசி தீர்மானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

எனவே கூட்டு ஒப்பந்தச் சரத்துகளில் மாற்றத்தை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும்.

முதலாளிமார் சம்மேளனத்தின் இலாப, நட்ட கணக்கு விவரங்களை ஆய்வுசெய்ய பொது இணக்கத்தின் அடிப்படையில் ஐவர் அடங்கிய சுயாதீன ஆணைக்குழு ஒன்றை அரச அனுசரணையுடன் அமைக்க வேண்டும். இதன்போது கம்பனியின் உண்மையான வருமானம் செலுத்தும் வருமானவரி என்பவற்றை அறியலாம். இந்தக் குழுவில் தொழிற்சங்கங்கள் சார்பான பிரதிநிதி, மனித உரிமை ஆணைக்குழு சார்பான பிரதிநிதி, தொழில் அமைச்சின் சார்பாக அரச பிரதிநிதி, கணக்காய்வாளர் நாயகத் திணைக்களப் பிரதிநிதி, ஓய்வுபெற்ற நீதியரசர் ஆகியோர் உள்ளடங்க வேண்டும். இந்தக் குழுவின் ஆய்வின் மூலமாகக் கம்பனிகளின் உண்மை இலாபத்தை அறியமுடியும். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ள தொழிற்சங்கங்கள் மூன்றும் தமக்கிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்திக் கொள்வதோடு, ஏனைய மலையகத் தொழிற்சங்கங்களினதும் கருத்தை உள்வாங்கிக் கொண்டு செயற்படுவதன் மூலமாக எதிர்பார்க்கும் நியாயமான சம்பளத்தைப் பெறமுடியும். தொழிலாளர் ஒற்றுமையையும் பாதுகாக்கமுடியும் - என்றார். (4)

# வாள்களுடன் சென்ற இருவர் 60 அலைபேசிகளைத் திருடினர்

## அவற்றின் பெறுமதி ரூ.15 லட்சம் கிளிநொச்சியில் சம்பவம்

**யாழ்ப்பாணம், டிசெ. 9**
**வாள்களுடன் கடைக்குள் நுழைந்த இரு திருடர்கள் 60க்கும் மேற்பட்ட அலைபேசிகளைத் திருடிச் சென்றுள்ளனர். அவற்றின் பெறுமதி சுமார் 15 லட்சம் ரூபா என்றும் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.**

இந்தச் சம்பவம் கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகம் முன்பாக ஏ9 வீதியில் அமைந்துள்ள அலைபேசி விற்பனையகத்துக்குள் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 அளவில் இடம்பெற்றது.

திருடர்கள் இருவர் வாள்களுடன் விற்பனையகத்தின் கதவை உடைத்து உட்செல்கின்றனர். ஒருவர் கையில் வாளுடன் நிற்க மற்றையவர் கடையில் நீண்டநேரமாகத் தேடுதல் நடத்தி அலைபேசிகளைத் திருடுகிறார். அவற்றை எடுத்துக்கொண்டு இருவரும் அங்கிருந்து சென்றுவிடுகின்றனர். இவை அனைத்தும் அங்கு பொருத்தப்பட்டிருந்த மறைகாணியில் (சிசிரி கமரா) பதிவாகியுள்ளன. திருட்டுத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. விசாரணை நடத்தப்படுகிறது என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (4,105)

# சிறுவர் முறைகேடுகள் தொடர்பில் 215 முறைப்பாடுகள் பதிவாகின

கொழும்பு, டிசெ. 9
ஊவா மாகாணத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்றுமுன்தினம் 7ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சிறுவர் முறைகேடுகள் தொடர்பில் 215 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஊவா மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை ஆணையக அறிக்கையொன்றில் இது குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் 35 பேர், சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் ஆறு சிறுவர்கள், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான 19 பேர் என்ற வகையில் 60 பேர் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்று பதிவாகியுள்ளது. அவர்களில், 49 சிறார்கள் மறுவாழ்வின் பின்னர் சமூக மயப்படுத்தப்பட்டுள்ளனர். பதினொரு பேர் சிறுவர் காப்பகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

49 பேரில் 16 பேர் சுய தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். காப்பகங்களில் இருப்பவர்கள் பலர், தொழிற் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இத்தகைய வேலைத்திட்டங்களுக்கென்று 2019ஆம் ஆண்டு 70 மில்லியன் ரூபா ஒதுக்கியிருப்பதாக ஊவா மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் அனுர விதானகமகே தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை , மகியங்கனை ஆகிய இடங்களில் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் நன்னடத்தைப் பணியகக் கட்டடங்களை அமைத்தல், சுஜாதா செவன சிறுவர் காப்பகத்துக்கான புதிய கட்டடம் அமைத்தல், பாடசாலைகளிலிருந்து சிறுவர்கள் இடைவிலகலை நிறுத்துதல், தொழிற்கல்வி மேம்பாடு, சிறுவர்களைத் தனிமைப்படுத்தாமை, விழிப்புணர்வுச் செயலமர்வு போன்ற வேலைத்திட்டங்கள் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் மாகாண அமைச்சர் தெரிவித்தார்.

ஊவா மாகாணத்தில் இந்த வருடம் தொடக்கம் இதுவரைக்குமான காலப்பகுதியில், 215 சிறுவர் தொடர்பாக முறைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டவர்கள், சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கப்பட்டுள்ளனரென்றும், பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான உதவி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளனவென்றும், ஊவா மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை ஆணையக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

## பாதசாரிகள் கடவையில்

# முச்சக்கர வண்டி மோதி பெண் உயிரிழந்தார்

கொழும்பு, டிசெ. 9
பயணிகள் கடவை ஊடாக வீதியைக் கடந்த பெண்ணை முச்சக்கரவண்டி மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளையில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சந்திரிகா விஜயரட்ன (வ்யது -37) என்பவரே உயிரிழந்தார்.

சடலம் பண்டாரவளை அரசினர் மருத்துவமனையின் சடல அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளைப் பொலிஸார் முச்சக்கர வண்டியின் சாரதியைக் கைது செய்தனர். அவரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பண்டாரவளை நீதிவான் உத்தரவிட்டார். முச்சக்கர வண்டி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (4)



'தேசிய உணவு அரங்கம் – 2018' நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தேசிய உணவு ஊக்குவிப்பு நிலையத்தால் இது நடத்தப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த அமரவீர, இ.அங்கஜன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர். அதில் இலங்கையின் தேசிய உணவு வகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## ஊவாவில் பாடசாலைகளிலுள்ள

# ஒப்பந்த ஊழியர்களுக்கு நியமனம் வழங்கத் தடை

கொழும்பு, டிசெ. 9
ஊவா மாகாணக் கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் கடந்த மூன்றாண்டு காலமாக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களாகப் பணியாற்றிய 22 பேருக்கு நியமனம் வழங்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றாம் திகதி, 22 பேருக்கும் ஒப்பந்த அடிப்படையில் ஊவா மாகாணப் பாடசாலைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நியமனங்கள் அனைத்தும் நேர்முகப் பரீட்சைகளின் மூலமாக வழங்கப்பட்டவை. ஊவா மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவே மேற்படி நேர்முகப் பரீட்சைகளை நடத்தியது.

இதற்கமைய க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மொழி அல்லது கணிதம் உள்ளிட்ட பாடங்களை இருமுறைகளுக்கு மேற்படாத வகையிலும் வேறு ஆறு பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும் என்று மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு வெளியிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தந் தகைமைகளையும் பரிசீலனை செய்தபின்னரே, விண்ணப்பதாரிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில் வழங்கப்பட்டது.

தற்போது தகைமைகள் குறைவு என்ற காரணத்தை முன்னிலைப்படுத்தி ஒப்பந்த அடிப்படையில் தொழில் செய்துவந்த 22 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுகின்றமை நிறுத்தப்பட்டுள்ளன. மொழி அல்லது கணிதம் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதன் பொருள் குறிப்பிட்ட இரு பாடங்களில் ஒருபாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்பதே. தற்போது மொழி, கணிதம் ஆகிய இரு பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்று கூறி ஒப்பந்த அடிப்படையில் தொழில் செய்தவர்களுக்குநிரந்தரநியமனங்கள் வழங்குவதை அதிகாரிகள் தடைசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தடையுத்தரவை எதிர்த்து பாதிக்கப்பட்ட 22 பேரும் ஊவா மாகாண ஆளுநர், ஊவா மாகாணப் பொதுச்சேவை ஆண்ணக்குழுவின் செயலாளர், ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர், மனித உரிமை ஆணைக்குழுவின் பதுளை மாவட்டப் பணிப்பாளர் ஆகியோருக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் சிலர், சுற்றறிக்கையில் ஏற்பட்டிருக்கும் தவறு குறித்து சட்டநடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளனர். புதியவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி, இடைக்காலத் தடை உத்தரவை நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் 22 பேருக்கான வெற்றிடங்களைப் பூர்த்திசெய்ய புதியவர்களை நியமிக்க நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேங்கிக் கிடக்கும் அரசியல் களம்

முடிவே இல்லாது தொடர்ந்து அலுப்புத்தட்டும் ஒரு திரைப்படத்தைப் போன்று ஆகிவிட்டது இலங்கையின் அரசியல் களம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தமை சட்டமுறையானதா? இல்லையா? என்பது தொடர்பான தனது இறுதி முடிவை உயர்நீதிமன்றம் நேற்றுத் தெரிவிக்கும் என்கிற எதிர்பார்ப்புப் பொய்த்துப் போன நிலையில் இழுபட்டுக்கொண்டே செல்கிறது பிரச்சினை.

நீதிமன்றத் தீர்ப்பு வந்துவிட்டால் இந்தப் பிரச்சினை ஒரு வழியாகத் தீர்வுக்கு வந்துவிடும் அல்லது புதிய திருப்பம் ஒன்றை அடையும் என்று நம்பியிருந்தவர்களுக்குப் பெரும் ஏமாற்றமே மிஞ்சியது.

இது எதனைப் பற்றியும் கவலைப்படாமல் தன்பாட்டில் தொப்பியும் கண்ணாடியும் ரிசோர்ட்டுமாக இரணைமடுக் குளத்தைத் திறந்து வைத்துவிட்டு இளசுகளுடன் தம்படமும் (செல்பி) எடுத்துக் கொண்டு அநாயாசமாக வலம் வருகிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. தன்னால்தான் இத்தகைய குளறுபடிகளும் சிக்கல்களும் இழுபறிகளும் நாட்டைப் பாதிக்கின்றன என்பது பற்றிய கவலை, அழுத்தம் ஏதும் அவரிடம் தெரிவதாக இல்லை. நாடே பற்றி எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனைக் கதைகளில் மட்டுமே அறிந்திருக்கும் மக்களுக்கு அவர் இப்படித்தான் இருந்திருப்பாரோ என்கிற ஒரு ஆர்வத்தை உருவாக்குபவராக இருக்கிறார் மைத்திரிபால சிறிசேன.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்போது வரும் என்பதும் தெரியாத நிலையில் அடுத்த வாரத்திலும் இந்தப் பிரச்சினை நீடிக்கப்போகிறது. அதுவரையில் ஆதியும் நானே அந்தமும் நானே என்கிற வகையில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவே இலங்கை அரசை நடத்திச் செல்லப்போகிறார். கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி நாட்டை அவர் திறம்பட வழிநடத்திச் செல்வார் என்பதற்கான அறிகுறிகளையும் காணமுடியாத நிலையில் முடிவே இல்லாத அலுப்புத்தட்டும் திரைப்படமாக மாறி வருகின்றது அரசியல் காட்சிகள்.

பன்னாட்டு அழுத்தம், குறிப்பாக வல்லரசுகளின் அழுத்தம், உள்நாட்டில் மகிந்தவுக்கு காட்டப்படும் ஆணித்தரமான எதிர்ப்பு என்று எது குறித்தும் கவலைப்படாமல், எந்த நகர்வும் இல்லாமல் தேங்கி நிற்கின்றது இலங்கை.

அடுத்த வாரத்தில் மேலும் சில புதிய காட்சிகள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அரங்கேறக்கூடும். என்றாலும் தீர்வு ஒன்றை நோக்கி அரசியல் பிரச்சினையை அவை நகர்த்துமா என்பது கேள்விக்குறியே! உயர் நீதிமன்றம் அடுத்த வாரத்தில் தனது அறுதியான தீர்ப்பை வெளியிடாதபட்சத்தில் இந்தப் பிரச்சினையில் அடுத்த வாரத்திலும் மந்தமான முன்னேற்றமே காணப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

பெரும்பான்மைப் பலம் இருந்தாலும் ஆட்சியமைக்க முடியாத ரணில் விக்கிரமசிங்க, ஆட்சியைப் பிடித்தாலும் அதனை அனுபவிக்கவும் முடியாது, கொண்டு நடத்தவும் முடியாது சிக்கி விக்கி நிற்கும் மகிந்த ராஜபக்ச, தான் ஆதரவளித்தவரை ஆட்சிக் கதிரையில் இருத்தி அழகு பார்க்க முடியாத இக்கட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இத்தனை சண்டைகளுக்கும் நடுவில் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துவிடாதா சிங்கள மக்களின் மனங்களை வெல்வதற்கு என்கிற காத்திருப்பில் ஜே.வி.பி. என்று எந்தப் பக்கத்திலும் வேகம் எடுக்காத திரைக்கதையுடன் நகர்ந்து கொண்டிருக்கிறது அரசியல் களம்.

7 நாள்களுக்குள் தீர்வு சொல்வேன் என்று கடந்த 4ஆம் திகதி அரச தலைவர் கூறி இன்றுடன் 5 நாள்களாகிவிட்டன. ஒன்றையும் காணோம். இன்னும் இரண்டு நாள்களில் அவரும் எந்தத் திருப்பத்தையும் இந்தக் கதைக்குள் கொண்டுவரும் வல்லமையுள்ளவராகத் தெரியவில்லை. எனவே இன்னும் சில நாள்களுக்கு அரசியல் களம் தொடர்ந்தும் தேங்கியே கிடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# ஆட்டம் ஆரம்பம்!



பிரவீன் ராம்

இலங்கை வரலாற்றில் தனக்கெனத் தனியான முத்திரை பதித்துக் கொண்டவர் மகிந்த ராஜபக்ச. தமிழ் மக்களின் மறக்க முடியாத எதிரியாகவும், சிங்கள மக்களின் மறக்க முடியாத கதாநாயகனாகவும் கருதப்படத்தக்கவர். மகாவம்சம் என்கிற சிங்களவர்களின் வரலாற்றுச் சரிதத்தில் இடம்பிடிக்கும் அளவுக்கு மகிந்தவின் புகழ் சிங்களச் சமூகத்தில் கொடி கட்டிப் பறக்கிறது. ஆனால், பெரும்பான்மைச் சமூகத்துக்குள் இருக்கின்ற இரண்டாவது பெரிய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியாலும் சிறுபான்மைக் கட்சிகளின் தயவாலும் மகிந்தவின் பலம் குறைக்கப்பட்டுள்ளது.

பெருமெடுப்புடன் அரசியலில் கொடி கட்டிப் பறந்த மகிந்த அதில் இருந்து ஒதுங்கி ஒரு மூலையில் குந்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது வரலாற்றுச் சேகம். அதற்கு மூல காரணமும் மகிந்த மாத்திரமே. அவர் நம்பியிருந்த சோதிடமே முழுக் காரணமாகியது.

### ரணில் எதிர்ப்பால் அரியணையில் அமர்ந்த மகிந்த

தலைமை அமைச்சராக இருந்து வந்த மகிந்த அரச தலைவரான விடயத்தில் சிறியளவு அதிஷ்டம் இருக்கவே செய்தது. அதாவது அவர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முனைந்த சமயத்தில், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ரணில் விக்கிரம சிங்கவும் அந்தப் போட்டியில் போட்டியாளராகக் களமிறங்கினார். மகிந்தவைத் தங்களுக்கு ஏற்றதான எதிரியாகக் கருதிய புலிகள், ரணிலின் நயவஞ்சகத்தால் தாங்கள் இடையூறுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை உணர்ந்து ரணிலுக்கு எதிர்ப்பைக் காட்டியிருந்தனர். தமிழ் மக்களால் ரணில் நிராகரிக்கப்பட்டதும் ஏகோபித்த சிங்கள மக்களின் செல்வாக்குடன் மகிந்தவால் ஆட்சியமைக்க முடிந்தது. அதாவது தமிழ் மக்களின் ஆதரவற்ற ரணிலுக்குச் சிங்கள மக்கள் மத்தியிலிருந்த ஆதரவுத்தளமானது மகிந்தவின் ஆதரவுத் தளத்தைக் காட்டிலும் குறைவானது. புலிகளைத் தோற்கடித்த காரணத்தால் மகிந்தவைத் தமிழ் மக்கள் தொடர்ந்து புறமொதுக்கி வருவதும், அதனால், புலிகளால் அன்று நிராகரிக்கப்பட்ட ரணில் தொடர்ந்தும் வலுப்பெற்று வருவதும் தனிக்கதை.

### சோதிடரின் பேச்சால் ஏமாந்த மகிந்த

புலிகளின் ரணிலை ஒதுக்கிய யுக்தியால், அரச பீடத்தைப் பிடித்துக் கொண்ட மகிந்த புலிகளை அழித்த பின்னர் சிங்களச் சமூகத்தில் கணிசமான ஆதரவைக் கொண்டிருந்தார். தனக்குள்ள அப்போதைய பெரு ஆதரவுத்தளத்தால், தன்னுடைய இரண்டாவது தடவையிலான அரச தலைவர் பதவிக்கும் ஆசை வித்தை இட்டுக் கொண்டார். தன்னுடைய குடும்பச் சோதிடர் ஒருவரின் கணிப்புடன் தகுந்த காலத்தில் தான் அரச தலைவர் தேர்தலில் குதிக்கவும் நாள் குறித்தார். முதல் தடவையாக அரச தலைவராகப் பதவி வகித்து வந்த நிலையில், அந்தப் பதவிக் காலம் முடிவடைவதற்கிடையில் இரண்டாம் தடவையும் தான் அரச தலைவராகப் பதவி வகிப்பதற்கான முயற்சிகளை தன்னுடைய ஆட்சிக் காலத்தின் இடைநடுவிலேயே தேர்தலில் குதித்தார். இறுதியில் நட்டாற்றில் விடப்பட்டார்.

### மறுபடியும் மகிந்த

தன்னுடைய சோதிடம் மீதான அதீத நம்பிக்கை காரணமாக என்னவோ, இரண்டு தடவைகள் மாத்திரமே இலங்கையின் அரச தலைவராகப் பதவி வகிக்கலாம் என்றிருந்த சட்ட நடைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த பிரயத்தனங்களைச் செய்தார் மகிந்த. மூன்றாவது தடவையாகவும் தான் அரச தலைவராகுவதற்குரிய வேலைப்பாடுகளைச் சமநேரத்தில் செய்து வந்தார்.


ஆனால், பரிதாபகரமாக இறுதியில் நடந்ததோ அவருடைய அதிகாரத்திலிருந்த அரச தலைவர் பதவியும் பறிபோனதுடன், ஒட்டுமொத்த அரசியல் வாழ்வும் அஸ்தமனமாகியதுதான். ஆனாலும் மகிந்த ஓய்ந்துவிடவில்லை என்பதைக் காலம் நமக்கு உணர்த்தியுள்ளது. அவர் இப்போதும் மந்திரக் கோலுடனும், மாணிக்கங்கள், அதிஷ்டக் கல்லுகள் பதித்த மோதிரங்கள் சகிதமாகவும் திரிவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. மகிந்தவின் அதிஷ்டம் இனிவரும் காலங்களில் எப்படியிருக்கப்போகின்றது என்பதை அறிந்து கொள்வதற்கான ஆர்வம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகவே தெரிகிறது.

மகிந்தவின் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டதாகவும் பலர் கதைக்கிறார்கள். ஆனாலும் மகிந்த தோல்விக்கு மேலே தோல்வியைச் சந்திப்பதே வழக்கமாகியிருக்கிறது. மகிந்தவின் கையிலுள்ள மந்திரக் கோலின் சக்தி எப்படிச் செயலாற்றுகிறது என்று இனிவரும் காலங்களிலும் பொறுத்திருந்துதான் பார்ப்போமே.

# கல் அல்ல கட்சி!

ந.லோகதயாளன்

கிளிநொச்சி மாவட்டத்தின் முத்து என வர்ணிக்கப்படுவது இரணைமடுக் குளம். அந்த மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் தேசிய வருமானத்துக்கும் பெரிதும் உதவுவதோடு, அந்த மாவட்டத்தின் பசுமைக்கும் காரணகர்த்தாவாக இருந்து வருகிறது இந்த இரணைமடுக் குளம். 1906ஆம் ஆண்டு முதன் முதலாக இந்தக் குளத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 1922ஆம் ஆண்டு நீர்ப்பாசனத்துக்காகத் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் குளத்தை அமைக்கின்ற பணியானது முழுமையாக மனித வலுவாலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 1922ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தபோது, இந்தக் குளமானது 22அடியாக அதன் கொள்ளளவு மட்டம் இருந்துள்ளது. அதன் பின்னர் 1951ஆம் ஆண்டு குளத்தில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் கொள்ளவு மட்டம் 30 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மீண்டும் 1954ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டுவரை சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 32 அடியாக கொள்ளவு மட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சீரமைப்புப் பணிகளின் நிறைவில் அப்போதைய தலைமை அமைச்சர் டி.எஸ்.சேனாநாயக்கா இரணைமடுக்குளத்துக்கு வருகை தந்து நினைவுக் கல் ஒன்றையும் திறந்து வைத்தார்.



**புலிகளின் ஆளுகைக்குள் இருந்தபோது சீரமைப்புக் கோரப்பட்ட குளம் இது**

அன்றைக்கு டட்லி சேனாநாயக்காவால் திறந்து வைக்கப்பட்ட நினைவுக் கல்லானது இத்தனை ஆண்டு காலம் இடம்பெற்ற போரின்போதுகூட இந்த இடத்தில் நிலையாகவே இருந்து வந்துள்ளது. புலிகளாலும் அதன் வரலாறு கருதி அது பேணப்பட்டது. 2000ஆம் ஆண்டளவில் விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குள் இருந்த இரணைமடுக் குளமானது புலிகளின் முயற்சியால் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒதுக்கப்பட்ட நிதிமூலத்திலிருந்து சீரமைப்புச் செய்யப்பட்டது. தற்போது அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனாவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2 ஆயிரத்து 130 மில்லியன் ரூபா செலவில் 2016ஆம் ஆண்டு ஆரம்பமான இதன் அபிவிருத்திப்பணிகள் 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவுற்றன. இவ்வாறு இடம்பெற்ற அபிவிருத்திப் பணியின் மூலமே 34அடி கொள்ளளவுடையதாகக் காணப்பட்ட இரணைமடுக் குளமானது 36 அடியாகத் தன்னுடைய கொள்ளளவு மட்டத்தை உயர்த்தியுள்ளது.

**இரணைமடுச் சீரமைப்பு ஒப்பந்தமும் தாமதங்களும்**

2000ஆம் ஆண்டு முதன் முதல் கோரிக்கை விடப்பட்டு சமாதான காலத்தில் இரணைமடுக்குள அபிவிருத்தியானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி குடிநீர்த்திட்டம், யாழ்ப்பாண மாநகர சபைப் பிரதேச பாதாள சாக்கடைத் திட்டம் என ஒருங்கிணைந்த 3 திட்டங்களாகச் செயல்படுத்துவதற்கான ஆரம்ப மதிப்பீடுகள், திட்ட முன்மொழிவுகள், மாதிரிப் படத் தயாரிப்புக்கள் என இடம்பெற்றிருந்தன. போர் ஆரம்பித்த காரணத்தால் இந்தத் திட்டம் தாமதப்பட்டது. தற்போது அபிவிருத்தி செய்யப்பட்ட இரணைமடுக் குளத்தின் சீரமைப்புக்காக, 2007 0713 அன்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தான போதும் போரால் அது தொடர்ந்து முன்னெடுக்கப்பட வில்லை. பின்னர் போர் முடிவுற்ற நிலையில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முற்பட்ட நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி குடிநீர்த் திட்டம் தொடர்பில் எதிர்ப்பு எழுந்தது. இருந்தும் இரணைமடுவின் அபிவிருத்தி மட்டும் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட சீரமைப்பின் முடிவிலேயே இரணைமடுக் குளத்தைத் திறந்து வைப்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா கடந்த 20181207 அன்று கிளிநொச்சிக்கு வருகை தந்தார். அவ்வாறு வருகை தந்த அவர் வரலாற்றுப் பதிவொன்றை அழித்துவிட்டுச் சென்றுள்ளார். இனத்தையே அழித்தவர்களிற்கு வரலாற்றை அழிப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல என்பது இதன் பின்னரான விடயமறிந்த தமிழ் மக்களின் முணு முணுப்பாக இருக்கிறது.



**நன்மைகள் பல பயக்கின்ற இரணைமடு**

வடக்கு மாகாணத்திலேயே மிகப்பெரும் சொத்தாகக் காணப்படும் இந்த இரணைமடுக் குளத்தின் மூலமான வாழ்வாதாரத்தை நம்பியவர்களாக ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பலர் கிளிநொச்சியில் சென்று குடியேறிய வரலாறுகளும் உண்டு. இதேநேரம் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 65ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் உள்ளபோதிலும் தற்போது 21 ஆயிரத்து 800 ஏக்கர் நிலப்பகுதிகளுக்கே நீர் பாய்ச்சும் வாய்க்கால் வழிப் பாதைகளும், சட்ட பூர்வமான பதிவுகளும் உண்டு. பல ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும் வசதி இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதேநேரம் இரணைமடுக் குளத்தின் கீழ் 1965 ஆம் ஆண்டு முதன் முதலாகத் திருவையாறுக் கிராமத்துக்கு ஏற்று நீர்ப்பாசனம் வழங்கப்பட்டது. இதன் பின்னர் 1977ஆம் ஆண்டு அது விரிவுபடுத்தப்பட்டு ஆயிரத்து 200 ஏக்கர் மேட்டு நிலப் பயிர் செய்கைக்கும் நீர் வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்டு வந்த ஏற்று நீர்ப்பாசனம் 2ஆம் கட்ட ஈழப்போருடன் முழுமையாக அழிவடைந்தது. அவ்வாறு அழிவடைந்த ஏற்று நீர்ப்பாசனமும் தற்போது சீரமைக்கப்பட்டு சுமார் 600 ஏக்கர் நிலத்துக்கு நீர் பாய்ச்சும் வசதி ஏற்படுத்தப்படுகின்றது. இரணை மடுக் குளத்தில் நன்னீர் மீன் பிடிச் சங்கங்கங்கள் இரண்டின் ஊடாக சுமார் 180 மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இவை அனைத்துக்கும் அப்பால் தற்போது இரண்டு பெரிய நீர்த்தாங்கிகள் கட்டப்பட்டு குடிநீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுவருகின்றது. இவ்வாறு மாவட்டத்தின் பல தேவைகளை நிறைவேற்றுவதால், கிளிநொச்சியின் அமைத்துள்ள முத்து என்று இரணைமடுக் குளத்தைக் குறிப்பிடுவதில் தவறேதுவும் இருக்க முடியாது.

**டட்லி நிறுவிய கல்லை அகற்றி மைத்திரி புதிய கல்**

1954ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்தபோது அன்று குளத்தைத் திறந்து வைத்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டட்லி சேனாநாயக்க அன்றைய நாளில் இங்கு நினைவுக்கல்லையும் திறந்து வைத்தார். அன்று அவரால், திறந்து வைக்கப்பட்ட கல் மைத்திரிபால சிறிசேனாவின் தற்போதைய திறந்து வைக்கும் நிகழ்வுக்காக இரவோடு இரவாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த இடத்தில் மைத்திரி புதிய கல்லை நாட்டித் தனது பெயரைப் பொறித்துத் திறந்து வைத்துவிட்டுச் சென்றுள்ளார். இந்த விடயம் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் அதிகம் சிலாகிக்கப்படுகின்றது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரச தலைவராகி, ஆட்சியமைத்த மைத்திரிபால சிறிசேன தற்போது அதன் தலைவர் ரணிலுடன் முரண்போக்குடன் திகழ்வதால் மைத்திரி தற்போது அகற்றிய கல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒப்பானது என்றும், அதை அகற்றி விட்டு மைத்திரி புதிய கல்லை நிறுவிய செயல் ஐக்கிய தேசியக் கட்சியை மைத்திரி அப்பால் தள்ளி வைத்திருப்பதையுமே வெளிக்காட்டுவதாக அரசியலவதானிகள் கருதமுனைகின்றனர்.

---

## ஆசிரியருக்கான கடிதம்

# பண்ணைக் கடற்கரை வீதியில் பாதுகாப்புத் தேவை

மாலைநேரமானால், தற்போதெல்லாம் பண்ணைக் கடற்கரை வீதியில் அதிக மக்களைக் காண முடிகின்றது. ஆடம்பர வசதிகள், இருக்கை அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு பண்ணைக் கடற்கரை வீதி இளைப்பாறும் பகுதியாகவும், பொழுது போக்கும் பகுதியாகவும் இருக்கிறது. இப்போதெல்லாம் அதிக மக்கள் அங்கு கூடுவதைக் காண முடிகின்றது. மக்கள் அதிகளவில் கூடுவதால் தீவுப்பகுதிகளுக்கான முக்கிய போக்குவரத்து மார்க்கமாகவுள்ள அந்த இடத்தை ஊடறுக்கின்ற முதன்மை வீதியில் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதுடன், அந்த வீதி வழியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களுக்கு அவர்களின் நடமாட்டம் இடையூறு அளிப்பதாக இருக்கிறது.

தகுந்த இடத்தில் பொழுபோக்கு மையங்களை அமைப்பதும், அத்தகைய மையங்களால் ஏனைய தரப்புக்கள் பாதிக்கப்படாது இருப்பதைக் கவனிப்பதுமே ஆரோக்கியமானது.


இந்தப் பண்ணைக் கடற்கரை வீதியிலும் அதிகரித்து வருகின்ற மக்கள் நடமாட்டம் போக்குவரத்துக்கு இடையூறளிக்காமல் பார்த்துக்கொள்வதும் சிறந்தது. உரியவர்கள் இதுவிடயத்தில் கரிசனை கொள்வார்களா?


**சாதுரியன் – புங்குடுதீவு**

---

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகை யால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.


அபான்ஸ்
பிரம்மாண்ட
நத்தார்
சேல்
LG
Life's Good
குளிரூட்டிகள் மற்றும் சலவை இயந்திரங்களுக்கு
7kg
T2107VSAGP
ரு.83,900
வட்டியில்லா 18 மாதங்கள் வரையான கொடுப்பனவு
12kg
T2312VSAM
ரு.94,900
வட்டியில்லா 12 மாதங்கள் வரையான கொடுப்பனவு
SMART INVERTER MOTOR 10 YEAR WARRANTY
7Kg
F1207NMTW
ரு.137,900
வட்டியில்லா 12 கொடுப்பனவு
F1450H2E
ரு.217,900
190L
GL-B205ALLB
ரு.57,900
வட்டியில்லா 18 கொடுப்பனவு
205L
GN-B222SQBB
ரு.79,900
வட்டியில்லா 15 மாதங்கள் வரையான கொடுப்பனவு
258L
GL-B272SLTL
ரு.89,900
வட்டியில்லா 18 மாதங்கள் வரையான கொடுப்பனவு
SMART INVERTER COMPRESSOR 10 YEAR WARRANTY
*நிபந்தனைகள் உண்டு.
Sampath HSBC DFCC BANK PAN ASIA BANK HNB
Abans
011 5 999 000
us at www.facebook.com/abans
நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் ஏக முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்


hp acer Lenovo Haier DELL
பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அதி நவீன தொழில்நுட்பம், தனிப்பட்ட மற்றும் மதிப்புமிக்க அனுகூலங்களோடும் பிரத்தியேக மடிக்கணனிகள் அபான்ஸிடமிருந்து மட்டுமே
eஸ்கோலே
மாணவர்களுக்கான சிறந்த மடிக்கணினிகள்
Upto 3 Year EXTENDED Warranty
ACER 576G i3 Win
i3 4GB RAM | 1TB HDD Windows 10 | 15.6" Display
ரு.98,790 யிலிருந்து
HP 15 DA0002 i3
i3 4GB RAM | 1TB HDD Windows 10 | 15.6" Display
ரு. 82,590 யிலிருந்து
HP 15 DA0028 i5
i5 8th Gen 4GB RAM | 1TB HDD Windows 10 | 15.6" Display
ரு.119,690 யிலிருந்து
ACER 576G i5
i5 8th Gen | 1TB HDD | 2GB VGA 15.6" Display | Windows 10
ரு.129,790 யிலிருந்து
Printer or DVD Writer
ACER A6-A3
AMD A6 9220 4GB RAM | 1TB HDD Linux | 15.6" Display
ரு. 68,290 யிலிருந்து
HP 15 DA0019 DC
Intel Celeron Dual Core 4GB RAM | 500GB HDD Windows 10 | 15.6" Display Intel UHD 600 Graphics
ரு. 66,990 யிலிருந்து
LENOVO IP330
AMD A9 9425 8GB RAM | 1TB HDD | 2GB VGA Windows 10 | 15.6" Display
ரு. 97,790 யிலிருந்து
ACER Nitro 5
Intel Core i7 16GB OPTANE MEMORY 4GB RAM | 1TB HDD GTX 1050 4GB VGA | Windows 10
ரு. 209,090 யிலிருந்து
FREE 2 Years Warranty
Warranty - Up to 3 Years
FREE 3 Years Warranty
FREE GIFTS
Virus Guard
50|50 50GB FREE
SLT Fibre | 4G LTE | Megaline
ஆகியவற்றின் புதிய இணைப்புகளுக்கு 50% வரையிலான விலைக்கழிவு
SLT 4G MEGALINE
ஆகியவற்றின் புதிய இணைப்புகளுக்கு இலவசம்
எல்லா புதிய இணைப்புகளுடன் இலவசம்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
For Credit card Holders
Upto 16% Off
HSBC PAN ASIA BANK HNB Sampath Nations TrustBank DFCC BANK
0115886655 (MON - SAT)
/abansit
Abans

**வீடு வாடகைக்கு**

கொக்குவிலில் சகல வசதிகளுடன் கூடிய
வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை - 12000 (CS 21630)(14.17)

**077 007 1488**

## ICT வகுப்புக்கள்

**A/L, O/L ICT** வகுப்புக்கள்
தனிப்பட்ட வகுப்புகளாகவோ.
குழு வகுப்புகளாகவோ கொடுக்கப்படும்.

ஆசிரியர்: **திரு.S.சத்தியன்** (BSc) PGDE
இடம்: யாழ்நகர்,சாவகச்சேரி 077 271 8498

## மணமகள் தேவை

யாழ்.புலோலி. 33 வயது. சைவ. கௌரவ
குடும்பத்தைச் சேர்ந்த கனடா ரொரன்டோ
வில் சட்டத்தரணியாகத் தொழில்புரியும்
குடியுரிமையுள்ள மணமகனுக்குப் படித்த
குடும்பப் பெண்ணை
எதிர்பார்க்கின்றோம். ஜாதகக் குறிப்புடன்
thillaivan51@gmail.com அல்லது
**071 757 8267, 077 929 1890** (AVA/437(11,17)

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 02 . 01 . 1976

மறைவு 11 . 11 . 2018

கடந்த 11.11.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

### திருமதி ஜெயந்திமாலா (ஜெயந்தி) ஜீவராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 11.12.2018 செவ்வாய்க்கிழமை
அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம்
தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

**தர்மபுரம்**
**480 - 11 ஆம் யுனிற், முல்லைவீதி,**
**கிளிநொச்சி.**

(CS 0021660)(14,17)

**குடும்பத்தினர்.**
**ச.ஜீவராஜா (கணவர்)**
**கரைச்சி பிரதேசசபை உறுப்பினர்.**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## MASSIVE VEHICLES AUCTION SALE

All Types Of Vehicles Including Two Wheel Tractors, Four Wheel Tractors, Harvesters, Motor Bikes, Trucks, Three Wheelers In Excellent Condition

**11th of December**

LOLC Vehicle Facility Centre
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,

**VAVUNIYA**

**Thimothi - 0766 58 23 29**
**Nelum - 0245 11 81 81**

**On View - 08th, 09th & 10th December**

(Please refer the Udayan On 06th of December 2018
For the Full List Of Vehicles)

LOLC FINANCE

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 126 Years of Service Excellence.*


D.ads

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585408.
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## Megadeals



Sri Lanka Telecom

புதிய இணைப்புகளுக்கு
**50% வரை விலைக்கழிவு**

அப்கிரேட்களுக்கு
**50% விலைக்கழிவு**

**MEGALINE**

டிசெம்பர் 31 வரை

1212 | www.slt.lk

## நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி




**Discount**
**5,000/= to 50,000/=**

We Accepted
MasterCard VISA

நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட
மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால்
அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு
இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**





உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் ,
மாசுக்கள் , கிருமிகளை முற்றாக அழித்து
பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை
வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Water Softener System**

Tiles , Bathroom Fittings , Washing Machine களில்
படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**





வீடு , தொழிற்சாலை ,
உல்லாச விடுதிகளின்
கழிவுநீர் சுத்திகரிப்பு
முறைமையை நிறுவியும்
பராமரித்தும் தரப்படும்.

**நீச்சல் தடாக வடிவமைப்பு**



உங்கள் தேவைக்கேற்ற வகையில்
வடிவமைத்து , நிறுவி ,
பராமரித்துத் தரப்படும்.

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

Jaffna: No.341, K.K.S Road, Jaffna. Tel: 021 222 6888 | 077 362 6230 Kilinochchi: 677, A9 Road, Kilinochchi, Tel: 021 228 4888 | 075 3313302


Hero
ஹீரோ வழங்கும் பண்டிகைக்கால தள்ளுபடிகள்
ஹீரோ மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்களுக்கு
ரூ.15,000/- வரை விசேட தள்ளுபடி!
5
WARRANTY*
BS IV STANDARD
Pleasure
MAESTRO EDGE
HF Deluxe
100cc
விசேட விலை
ரூ. 230,000/-
ரூ. 15,000/- தள்ளுபடி
110cc
விசேட விலை
ரூ. 245,000/-
ரூ. 15,000/- தள்ளுபடி
100cc
விசேட விலை
ரூ. 219,500/-
ரூ. 10,000/- தள்ளுபடி
இந்த சிறப்பு விலைகள் குறுகிய காலத்திற்கானது.
*நிபந்தனைகள் உண்டு. விலைகள் முன்னறிவித்தலின்றி மாறலாம்.
Abans AUTO
☎:011 5 777 000
நாடளாவிய அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.


www.emami.com
emami
emami
FAIR AND TEENS
டீன் ஏஜ் பருவத்தின் மிருதுவான சருமத்திற்காகவே
தயாரிக்கப்பட்ட விசேடமான பெயானர்ச் கிரீம்
04 வாரங்களில் உங்கள் மிருதுவான சருமத்திற்கு பொழிவினை பெற்றுத்தரும்.
பாதிப்பினை ஏற்படுத்தும் சூரிய கதிர்களிலிருந்து சருமத்தினை பாதுகாக்கும்.
சருமத்தின் எண்ணைய்த்தன்மையை கட்டுப்படுத்துவதன் மூலம் முகப்பருக்கள் ஏற்படுவதை குறைக்கும்.
கற்றாளை, சந்தனம் மற்றும் குங்குமம், உட்பட இயற்கை மூலிகைகளின் குணநலன்கள் சருமத்திற்கு மென்மையையும், பிராகாசத்தினையும் பெற்றுத்தரும்.
சருமத்தின் இயற்கையான ஈரலிப்பினை பாதுகாத்து சருமத்திற்கு போஷணையளிக்கும்.
12 - 21 வயது வரையான பெண்களுக்கு மிகவும் பொருத்தமானது.
அனைத்து சரும வகைகளுக்கும் பூச முடியும்.
emami
With Actiogen Corp., USA
FAIRNESS CREAM FOR TEENAGERS
FAIR AND TEENS
POLYPEPTIDE WITH HERBS FOR DELICATE TEEN SKIN
25ml - Rs.150/-


Chandanalepa®
WHITENING CREAM
வயிட்னிங் கிறீம்
பிளீச்சிங் இன்றி
சிவப்பழகை பெற்றுக்கொள்வோம்
பாதரசம் அற்றது பரபன் அற்றது
ஒரேன்ஜ் பீல் உடன் ஹயிட்ரோக்வீனொன் அற்றது
100% இயற்கை எண்ணெய் உள்ளடங்குகின்றது
பிளீச்சிங் அற்றது
Chandanalepa
WHITENING CREAM
NO BLEACHING
பிளீச்சிங் அற்ற சிவப்பழகின் இரகசியம்


www.emami.com
emami
emami GOLD
டர்மரிக் ஸ்கின் கிறீம்
24 கரட் தங்கத்துடன்
கண்களை மயக்கும் பொலிவான, சிகப்பழகான சருமத்திற்கு
தங்கத்துகள்கள்
சருமச்சுருக்கத்தினை குறைத்து தங்கநிறப் பொலிவினை பெற்றுத்தருகின்றது.
மஞ்சள்
சருமத்தினை சுத்தம் செய்து கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகளை நீக்குகின்றது.
சந்தனம்
முகப்பருக்கள் ஏற்படுவதை தடுக்கின்றது.
குங்குமம்
மிருதுவான சருமத்தினை பெற்றுத்தருகின்றது.
அதிமதுரம்
சருமத்தின் பொலிவு மற்றும் பிரகாசத்தினை அதிகரிக்கின்றது.
NEW
emami GOLD
Turmeric Skin Cream
with 24k Gold
NET 1.01 FL.OZ (30ml e)
தங்கநிறப் பொலிவும் பிரகாசமான தோற்றமும்
30ml - Rs.300/-



# அவிழ்க்கப்படாத முடிச்சுகள்

கட்டுரை
சந்திரசேகர ஆசாத்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு இறங்கு துறைக்கு அண்மையிலுள்ள காவலரண் ஒன்றில் இரண்டு பொலிசார் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். அந்தப் பொலிசாரில் ஒருவர் தமிழர், ஒருவர் சிங்களவர். ஒருவர் நெஞ்சிலும் தலையிலும் ஏற்பட்ட காயங்கள் காரணமாகவும், மற்றவர் தலையில் மட்டும் ஏற்பட்ட காயம் காரணமாகவும் சாவடைந்துள்ளதாக இறப்பு விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் எதைக் காட்டுகின்றது என்றால், கொல்லப்பட்டவர்கள் ஓடித்தப்பவோ, எதிர்ப்பைக் காட்டவோ முற்படாத நிலையில், அவர்கள் குறி தவறாமல் சுடப்பட்டிருக்கக் கூடும் என்பதையே. மிகவும் அமைதியான முறையில் எவ்வித பதற்றமுமின்றி நிதானமாகவே இந்தக் கொலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் எனவும் கருதுவதற்கு இடமுண்டு...

(அடுத்த பக்கம்)

**சரணடைந்த முன்னாள் போராளி**

வவுணதீவில் கொலையாகியிருந்த இரண்டு பொலிசாரும் இரவு வேளையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். காலையிலேயே இந்தச் சம்பவம் தெரியவந்திருக்கிறது. இந்த நிலையில் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டு கிளிநொச்சி - வட்டக்கச்சியில் வசித்து வரும் முன்னாள் போராளி ஒருவர் இந்தக் கொலை இடம்பெற்ற மறு நாள் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். பின்பு அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர் மாவீரர் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகக் கடந்த மாதம் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார் எனவும் மாவீரர் நாள் ஏற்பாடுகளை அவரும் அவருடைய நண்பர்களும் மேற்கொண்டிருந்தபோது பொலிஸாருக்கும் அவருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அத்தோடு மாவீரர் தின ஏற்பாட்டின் பின்னர் அவருடைய கைபேசி உரையாடல்கள் செவிமடுக்கப்பட்டு சந்தேகத்தின்பேரில் அவரை அணுக முற்பட்டபோது அவரே தானாக முன் வந்து சரணடைந்ததாகவும் தகவல்கள் பரிவியுள்ளன. மட்டக்களப்பிலுள்ள இவருடைய நண்பர் ஒருவர் மாவீரர் தின ஏற்பாடுகளைச் செய்திருந்ததாகவும், அவருடன் இவர் தொடர்பிலிருந்ததாகவும், பொலிஸாரின் சந்தேகம் இவர் பக்கம் திரும்புவது தெரிந்ததும் அவர் தானாகவே கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றதாகவும், அப்போது கைது செய்யப்பட்டதாகவும் என்றும் கதைகள் உலாவுகின்றன. பின்னர், இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸாரால் பலர் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் முன்னாள் போராளிகள் என்றும் தெரிய வந்துள்ளது.



**பொட்டம்மானைத் தொடர்புபடுத்தினர் கருணா**

இந்தக் கொலைகளுடன் தொடர்புபட்டவராகக் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனைச் சிலர் குற்றஞ் சாட்டியிருந்தனர். அவர் உடனடியாகவே அதை மறுத்ததுடன் விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் இன்னமும் உயிருடன் இருப்பதாகவும், அவர் நோர்வேயில் வசிப்பதாகவும் அவரின் ஏற்பாட்டில் இந்தக் கொலை இடம்பெற்றதெனவும் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். பொலிசார் கொல்லப்பட்ட விடயத்தில் முன்னாள் போராளிகள் கைதாகியிருப்பதும், கருணா அம்மானால், விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் தொடர்புபடுத்தப்பட்டதும் பல சக்திகளும் இந்த விடயத்தை வேறு திசையில் அணுக முற்பட்டன. அவ்வகையில், உதயன்கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோர் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டதற்கும் இந்தக் கொலைச் சம்பவத்துக்கும் முடிச்சுப் போட்டுப் புலிகள் மீள் எழுச்சி பெறுகின்றனர் என்ற பரப்புரையைக் கட்டவிழ்த்து விட்டனர்.



**முன்னாள் போராளிகளைக் குறிவைத்துள்ள பொலிசார்**

இப்படியான சமயம்பார்த்து வெளிவருகின்ற மேற் கூறிய இனவாதப் பரப்புரைகள் பரவ விடப்படும் அதேவேளையில் இன்னொரு புறம் பொலிசாரின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பாக முன்னாள் போராளிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுவருவது, மேலும் சிலர் தேடப்படுவது என்பன மக்களிடம் குறிப்பாக முன்னாள் போராளிகள் மத்தியிலும், போராளிகள் குடும்பங்கள் மத்தியிலும் பெரும் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளன. அப்படியான ஓர் அச்ச நிலைக்கு வெளிப்படையில் இவை காரணங்களாக இருந்தபோதும் ஏற்கனவே இடம்பெற்ற சில சம்பவங்களும், வெளிவந்த தகவல்களும் இவையெல்லாம் உள்நோக்கத்துடன் கூடிய திட்டமிட்ட விடயங்களோ என எண்ணுவதற்கு வழி சமைக்கின்றன.

**நாமல்குமார வெளியிட்ட தகவல்களில் கவனம்வேண்டும்**

ஊழலுக்கெதிரான அமைப்பின் தலைவர் எனக் கூறப்படும் நாமல்குமார என்பவர் ஓர் ஊடாக சந்திப்பின்போது அதிர்ச்சி தரும் தகவல்களை வெளியிட்டிருந்தார். அதாவது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவையும் கொலை செய்யச் சதி நடப்பதாகவும் அது பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள நாலந்த டிசில்வா தலைமையில் திட்டமிடப்படுவதாகவும் தெரிவித்தார். அவர் வெளியிட்ட தகவல்களில் முக்கியமாக நாம் அவதானிக்க வேண்டிய விடயம் அரச தலைவர் கிழக்கு மாகாணத்துக்குச் செல்லும்போது அங்கு வைத்து அவரைக் கொலை செய்து விட்டு, அந்தப் பழியை ஒரு முன்னாள் போராளியின் தலையில் போட்டு அவரைக் கைது செய்யவுள்ளதாக நாமல் குமார தெரிவித்திருந்ததுவே. இந்தக் கைதைப் பயங்கரவாதத் தடைப்பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் செய்யும்போது அவர் ஏற்கனவே அதற்கான ஆதாரங்களைத் தயார் செய்து வைத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அதையிட்டு முன்னாள் போராளிகள் பலர் வேட்டையாடப்படவும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளவும் கூடும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வவுணதீவுக் கொலையும் அது தொடர்பாக முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டமையும் இப்படியான ஒரு சதி நடவடிக்கையாக இருக்குமோ எனத் தமிழ் மக்கள் அச்சப்படுவதில் ஆச்சரியப்பட எதுவமில்லை.

**புலிகளின் போர்வையில் நடக்கின்ற சதிகள்**

மாவீரர்தின நிகழ்வுகளைப் பொலிசார் குழப்புவதற்கு முயற்சித்தமையும் அதையடுத்த இடம்பெற்ற கொலைகளும் மேற்படி அச்சத்தை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன. சில மாதங்களுக்கு முன்பு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டிசுட்டானில் வைத்து விடுதலைப்புலிகளின் சீருடைகளுடனும், புலி முத்திரை பதிக்கப்பட்ட ஆயுதங்களுடனும் மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். அதில் ஒருவர் முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய போராளியெனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணைகளில் அந்த நபர் இராணுவப் புலனாய்வுப் பிரிவால் மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டுப் பணிக்கு அமர்த்தப்பட்டவர் எனவும் அவர் புலிகளின் இயக்கத்துக்குள் ஊடுருவிப் புலனாய்வுப் பணிகளை மேற்கொண்டவர் என்பது தெரிய வந்தது.

அதாவது இந்தச் சம்பவம் புலிகள் மீளெழுச்சி பெறுகின்றனர் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முன்னாள் போராளிகள்ளக் கைது செய்யவும் மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் சதியே. பொலிஸாரின் கைது நடவடிக்கைகள் காரணமாகத் தற்செயலாக வெளிப்பட்டு விட்டது.

**கமால் குணரத்தின வெளியிட்ட கண்டனம்**


இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட 153ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இறுதிப் போரில் பணியாற்றியவரும், நந்திக் கடலுக்கான பாதை என்ற நூலை எழுதியவருமான கமால் குணரத்தின, "பொலிஸாரின் முட்டாள்தனமான நடவடிக்கையால், இராணுவப் புலனாய்வுப் பிரிசினரின் பணிகள் சீர் குலைக்கப்படுகின்றன" எனக் கண்டனம் வெளியிட்டிருந்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், பயங்கரவாதத்தடுப்புப்பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சில உள்நோக்கங்களின் அடிப்படையில் சில பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு அவற்றை முன்னாள் போராளிகள் மேற்கொண்டதாகக் காண்பிக்கும் வகையில் செயற்பட்டுள்ளனர் என்பது ஏற்கனவே தெரிய வந்துள்ளது. இப்படியான நிலையில் வவுணதீவில் பொலிஸார் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இவர்களின் சதி வேலைகள் ஏதாவது இருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் எழுவது தவிர்க்கப்பட முடியாததாகும்.

மாவீரர் நாள் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்படுவதை அரச தரப்போ, அரச படைகளோ விரும்புவ தில்லை. ஒவ்வொரு வருடமும் அதைத் தடுப்பதற்குப் பல முயற்சிகளை இந்தத் தரப்பினர் முன்னெடுப்பதுண்டு. 2013ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாளன்று சுடரேற்றியமைக்காக மூன்று மாணவர்கள் கைது செய்ப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு மறுவாழ்வு அனுப்பப்பட்டமை உட்படத் தொடர்ந்து பல சம்பவங்கள் இடம்பெற்று வந்தன. இந்த முறையும் மாவீரர் நிகழ்வுகளைத் தடுப்பதற்குப் பொலிஸார் நீதி மன்றங்களை நாடியிருந்தனர். எனவே இப்படியான சம்பவங்களின் தொடர்ச்சியாக இந்தக் கொலை நடவடிக்கைகளும் இருக்கலமோ என்ற அச்சப்பாடுகள் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளமையே அதவானிக்க முடிகிறது. இப்படியான நடவடிக்கைகள் தொடர்பாக நேர்மையான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு முடிச்சுகள் அவிழ்க்கப்படாதவரை தமிழ் மக்கள் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ்வது சாத்தியக் குறைவானதே.

"

மாவீரர்தின நிகழ்வுகளைப் பொலிசார் குழப்புவதற்கு முயற்சித்தமையும் அதையடுத்த இடம்பெற்ற கொலைகளும் மேற்படி அச்சத்தை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன. சில மாதங்களின் முன்பு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டிசுட்டானில் வைத்து விடுதலைப்புலிகளின் சீருடைகளுடனும், புலி முத்திரை பதிக்கப்பட்ட ஆயுதங்களுடனும் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அதில் ஒருவர் முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய போராளியெனவும் தெரிவிக்கப்பட்டது.



கட்டுரை

த.செல்வராசா

# ரணில் - மைத்திரி முரண்நிலையின் ஒரு பக்கம்

2015ஆம் ஆண்டில் சற்றும் எதிர்பாராத வகையில் தனது தாய்க் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து, அரச தலைவரானார் மைத்திரிபால சிறிசேன. ஒரு சாதாரண ஆளைக்கூட அரச தலைவராக ஆக்கமுடியும் என்ற ஜனநாயகத்தின் கையாலாகத்தனத்தை இதன் மூலம் இலங்கையில் காண முடிந்தது. இது ஏறத்தாழ பொருந்தாத ஒரு திருமணத்தைத் தரகர்கள் பொருத்தியதற்கு ஒப்பானது. அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டு மகிந்தவை வீழ்த்த முடியாது என்பதையும், மக்கள் ஆதரவு தனக்கில்லை என்பதையும் திட்ட வட்டமாக முடிவெடுத்த பின்னரே ரணில் விக்கிரமசிங்க மிக இரகசியமாக அரச தலைவர் ஆசனத்துக்கு மைத்திரியைத் தெரிவு செய்திருக்கிறார்.

மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்தவர். தான் கட்சியிலிருந்து வெளியேறப்போகிறேன் என்ற எந்த அறிவிப்பும் இல்லாது அரச தலைவர் தேர்தல் காலத்தில் அதிக வேலைப் பளுக்கள் இருக்கும்போது, மகிந்தவுடன் கூடியிருந்து அப்பம் உண்டு விட்டு மறுநாள் ஐக்கிய தேசியக் கட்சியின் வசமாகியவர்.

## சந்திரிகாவின் எண்ணமும் ஈடேறியது

ரணில் விக்கிரமசிங்க மற்றும் சந்திரிகா ஆகிய இருவரும் சிங்களச் சமூகத்தில் உயர் குலாத்தைச் சேர்ந்த, படித்த பணக்காரக் குடும்பத்தைவர்கள். அரசியல் ரீதியில் மிகவும் பலவீனமாக இருந்தார்கள். சந்திரிகாவின் தேவையாக இருந்தது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மகிந்த பெற்றிருந்த தனியுரிமையை இல்லாது செய்வதாகும். ஐக்கிய தேசியக் கட்சி அப்போது 42 நாடாளுமன்ற உறுப்பினர்களையே கொண்டிருந்தது. அதை வைத்துக் கொண்டு அரச தலைவராகவிருந்த மகிந்தவை வீழ்த்திவிட முடியாது. மகிந்த பதவியில் தொடர்ந்தும் நீடித்தால், அவர்களின் நிலமை மேலும் மோசமாகிவிடும். எனவே மகிந்தவைப் பதிவியிலிருந்து நீக்குவதற்கு அந்தக் கட்சிக்குள் இருந்து மைத்திரியைப் பிரித்தெடுத்து மகிந்தவுக்கு எதிராக நிறுத்துவதே இவர்களுக்கு முன்னாலிருந்த ஒரே ஒரு தீர்வு. இந்தத் தீர்மானங்கள் எதிலும் மைத்திரி தனது கருத்தைத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கவில்லைப்போலும்.

## மைத்திரியின் அரசியல் வாழ்வு

பொலநறுவை என்பது சிங்களக் கலாசாரத்தின் வன்னிப் பகுதியாகும். அங்கிருந்து ஒரு கிராம அலுவலராக அரசியலில் ஈடுபட்டு அதி உயர்ந்த அமைச்சுப் பதவிகளை வகித்து வந்தவர்தான் மைத்திரிபால சிறிசேன. வேளான்மை, அரிசி ஆலைகள் எனப் பொலநறுவைக்குள் தமது நிலைகளைப் பலப்படுத்தியிருந்த மைத்திரியின் குடும்பம் அரசியலில் பெரும் செல்வாக்குடையதன்று. ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்குள்ளோ, சந்திரிகாவின் வீட்டுக்குள்ளோ போய் இருந்து பேசும் அளவுக்குச் சமூக மதிப்பு அற்றவராகவே மைத்திரி இருந்தார். அத்தோடு தகக்குப் பணிந்து போகும் ஒருவரான மைத்திரியை அம்பாக எய்து அதன் மூலம், நன்மை பெற நினைத்த ரணில் தொடர்ந்தும் மைத்திரியை ஒரு பொம்மை அரச தலைவராக வைத்திருக்கவே விரும்பினார். இந்த இடத்தில் கையொப்பம் இட்டால் போதும் என்பதே ரணிலின் எதிர்பார்ப்பாக இருந்தது.

## மனதளவால் பாதிக்கப்பட்டார் மைத்திரி

ரணில் தனது குலப்பெருமையாலும், கல்வி பாராம்பரியாத்தாலும் மற்றவர்களுக்கு வழங்குகின்ற மதிப்பளித்தலின் அளவுக்குறைவு, நாட்டின் அதிகாரமிக்க அரச தலைவர் பதவிலியிருந்த மைத்திரியை மனதளவில் பாதித்திருக்கலாம். சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் செயலராகவும் அமைச்சராகவும் இருந்த அனுபவத்தில் மைத்திரிபால சிறிசேன சில அரசியல் நடைமுறைகளை விளங்கிக் கொண்டவராக இருந்தார். அதன் அடிப்படையிலேயே மத்திய வங்கி மோசடி விடயத்தில் ரணிலை எதிர்க்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

**மிக அதிகாரமுள்ள அரச தலைவர் என்ற நிலையில் இருந்த அரசதலைவர் அதிகாரத்தை 19ஆவது திருத்தத்தின் மூலம் சில மாற்றங்களைச் செய்து குறைத்தது மைத்திரியை இலகுவாகக் கையாளுவதற்காக ரணில் செய்த முன்னெடுப்பே. இதன் மூலம் தலைமை அமைச்சராகத் தான் இருந்தாலே எல்லாவற்றையும் சாதிக்கலாம், அந்த நிலைகொள்ளல் போதுமானது என்ற முடிவுக்கு ரணில் தன்னை மட்டுப் படுத்திக் கொண்டார்.**



## அதிகாரத்தைக்குறைத்து மைத்திரியைக் கையாண்ட உத்தி

மிக அதிகாரமுள்ள அரச தலைவர் என்ற நிலையில் இருந்த அரசதலைவர் அதிகாரத்தை 19ஆவது திருத்தத்தின் மூலம் சில மாற்றங்களைச் செய்து குறைத்தது மைத்திரியை இலகுவாகக் கையாளுவதற்காக ரணில் செய்த முன்னெடுப்பே. இதன் மூலம் தலைமை அமைச்சராகத் தான் இருந்தாலே எல்லாவற்றையும் சாதிக்கலாம், அந்த நிலைகொள்ளல் போதுமானது என்ற முடிவுக்கு ரணில் தன்னை மட்டுப் படுத்திக் கொண்டார். இல்லாவிடில் தனது மாமனரான ஜே.ஆரால், 1978ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தில் மாற்றம் கொண்டு வரும் எண்ணம் ரணிலுக்கு இருந்திருக்காது. அதேவேளை மகிந்த குடும்பத்தினரைக் கட்டுக்குள் வைத்திருக்கவும் இந்த யுக்தி கையாளப்பட்டிருக்கலாம்.

## மைத்திரியின் பின்னணி பலமற்றது

மைத்திரிபாலவை ரணில் அரச தலைவராக்கியதற்கு இன்னொரு காரணம் மைத்திரியின் குடும்பத்திலிருந்து குடும்ப அரசியல் என்ற விடயம் எழுவதற்கு வாய்ப்பில்லை என்ற நம்பிக்கையே. ஆனால் மகிந்தவின் நிலை இதற்கு நேர் எதிரானது. அவரது சகோரதரர்கள் மற்றும் பிள்ளைகள் என ஒரு பட்டாளமே அரசியல் நுழைவுக்காகா மகிந்த குடும்பத்தில் உள்ளது. மகிந்தவை ஓரம் கட்டுவது மட்டுமல்லாது மைத்திரியிடமிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை மையைமாக வைத்துச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்துவதும் ரணிலின் இன்னோர் தேவையாக இருந்தது. இந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டதாலேயே மகிந்த குழுவினர் தாமைரை மொட்டுச் சின்னத்தில் பொதுஜன பெரமுன என்ற மற்றொரு கட்சியை உருவாக்கினர்.

## ரணில் முன்னெடுத்த உத்தியும் மைத்திரியின் பயமும்

கூட்டரசின் ஆட்சிக் காலத்தில் ரணில் தனது கட்சியைப் பலப்படுத்தியதுடன், அதை வளர்ப்பதற்கான பணத்தைத் தேடுவதிலும் தீவிரமாக இறங்கியிருந்தார். அதேவேளை மகிந்தவையும் மைத்திரியையும் ஒருபோதும் இணைய விடாது, பல சதி முயற்சிகளைச் செய்தும் வந்திருந்தார். ரணில் தன்னை ஏமாற்றி விட்டார், தான் ஒரு பொம்மை அரச தலைரவாக ஆக்கப்பட்டுவிட்டேன் எனத் தெரிந்தபோதிலும் அதைச் சகித்துக் கொண்டு மூன்றரை வருடங்களை மைத்திரி இழுத்திருந்தார். இதைவிடக் கூட்டைமப்பினுடனான ரணிலின் உறவு காரணமாக எதிர்காலத்தில் வடக்குக் கிழக்கைப் பிரித்து ஓர் அரசியல் ஏற்பாட்டை மேற்குலகத்துடன் சேர்ந்து ரணில் செய்துவிடக் கூடும் என்ற பயமும் மைத்திரிக்கு இருந்தது. இந்த முன்னெடுப்பைச் சிங்களவர்களுக்குச் சாதாகமாக நின்று தடுப்பதற்கு ஏற்ற நபராக மகிந்தவே உள்ளார் என அடையாளம் கண்டு ஒக் 26ஆம் திகதி மிக இரகசியமாக மகிந்தவை தலைமை அமைச்சராக்கினார் மைத்திரி. அதுவரை மகிந்தவால் பேணப்பட்டு வந்த சிங்கள-பௌத்த போக்கையே சரியான வழியாக மைத்திரி தெரிவு செய்தார். இதன் மூலம் ரணிலுக்கு எதிரான பெரிய அரண் ஒன்றை மகிந்த குழுவை வைத்து உருவாக்கிக் கொண்டார். அடுத்த அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் தான் ஒரு பொது வேட்பாளராக அனுமதிக்கப்படப் போவதில்லை என்பதும் மைத்திரியின் ஊகமாக இருந்திருக்கலாம்.

## மைத்திரியின் எதிர் பார்ப்பு

மகிந்தவைப் பொறுத்தவரை அவருடைய சகோதரர்களான கோத்தபாயவையோ, பசிலையோ, அரச தலைவர் வேட்பாளரக 2020ஆம் ஆண்டில் களமிறக்கினாலும் அடுத்து வரும் 10 ஆண்டுகளுக்குத் தனது மகனான நாமலை அரச தலைவரக்க முடியாத, சூழல் இருக்கின்றது. மகிந்த அணியினரின் ஆதரவுடன் இரண்டாவது தடவையும் அரச தலைராக ஆகும் அரிய வாய்ப்பை இழக்க மைத்திரி தயாராக இல்லை.

ரணிலைத்தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என 225நாடாளுமன்ற உறுப்பினர்களும் கேட்டால்கூட அவ்வாறு நியமிக்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் மைத்திரி. மைத்திரியின் இந்தத் தீர்மானமானது பௌத்த சிங்களத்துக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தும். வடகிழக்குக்கு அரசியல் தீர்வொன்று முன்வைக்கத் தேவையில்லை என்ற உள்நோக்கத்தைக் கொண்டுள்ளது.

எது எப்படியிருப்பினும் நீதிமன்ற நடைமுறைகள், ஏனைய அழுத்தங்கள் காரணமாக ரணிலை மீண்டும் தலைமை அமைச்சராக நியமிக்கும் நிலை ஏற்பட்டால் இனிவரும் இரண்டு வருட காலப்பகுதியை அமைதியான முறையில் நகர்த்திச் செல்லும் வாய்ப்பு இலங்கையில் இருக்கப்போவதில்லை.

# தன் மூக்கை அறுத்தேனும்...!

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி



செ.மகேஷ்

பொது நலம் கருதாத சுயநலத்தால் நாடு நாறிக் கிடக்கிறது!" என்றார் சிவபாதத்தார்.

அவர் சொல்லவந்தது என்ன என்பதைச் செல்லத்தம்பியர். புரிந்து கொண்டார். எங்கெங்கோ எல்லாம் இருந்து யார் யாரோ சுமந்து வந்து தனது வீட்டு வாசலிலே கொட்டிக் குவித்த குப்பைகளைப் பலதடவைகள் செல்லத்தம்பியர் பார்த்திருக்கிறார். அவற்றையெல்லாம் நாடு நாறுவது அறியாதார் செய்த கொடுமையாக எண்ணி மௌனமாகவே துப்பரவு செய்திருக்கிறார்.

குப்பைகள் நமது வீட்டு வாசலில் கிடந்தாலென்ன? அயல்வீட்டு வாசலில் கிடந்தாலென்ன? நாற்றம் எமக்குத்தான் என்பதை உணராதாரின் செய்கைகளே இவை! ஆத்திரம் மேலெழுந்தது.

தமது வீட்டு முற்றம் சுத்தமாக இருந்தாற் போதும் என்று எண்ணுவோர் நாடுபற்றிச் சிந்திப்பதில்லையோ! இதுதானே குறுகிய சுயநலத்தின் வெளிப்பாடு! எங்கும் எதிலுமே பொதுநலம் கருதாது பதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பலரிடமும் இந்தச் சுயநலம் காணப்படுகிறதே. செல்லத்தம்பியர் எண்ணினார் அவரது மனிதமனம் வெட்கி உடல் குறுகிப்போனார்.

++++

இலவசமாக வழங்கப்படும் கல்வியைக் கற்றுக் கொண்டோம். பட்டங்களும் சான்றிதழ்களும் பெற்றுக் கொண்டோம் என்ற பெருமையோடு உயர்ந்திருக்கும் கூட்டத்தினர் நாம்! சுயநலத்தோடு எம்முடன் வாழும் பலரையும் சுயநலத்தோடு பாராட்டிப் பாராட்டியே எம்மீது பகட்டாடை போர்த்திக் கொண்டு தினம்தினம் ஊர்வலங்களும் நடத்துகிறோம். இவ்வாறு பாராட் டுக்குரியோர் பலர் எங்கள் மத்தியில் இருக்கும்போது நாடு ஏன் நாறியது?

செல்லத்தம்பியரின் சிந்தனை இவ்வாறு சிறகசைத்தது.

+++++

கல்வியை முன்னெடுப்பதிலும், தொழில் வாய்ப்பளிப்பதிலும் தமது ஆதரவாளர்களையே ஆட்சியாளர்கள் தெரிவு செய்துவிடுகிறார்கள்.

சுயநலம் கருதி அவர்களின் வாக்குக்களைத் தமதாக்கும் நோக்குடையதான நியமனங்களாகவே பலவும் அமைவதைப் பார்க்கின்றோம்.

> இப்பொழுது ஆட்சியாளர்களின் கூட்டத்தைக் குலைக்கும் சுயநலம் என்பது, நாட்டைச் சிதைக்கும் ஒரு பயங்கரமான நோய் அது தன்னுடைய மூக்கை அறுத்தேனும் அயலவனின் சகுனப்பிழைக்கு வழிவகுப்பதை விரும்புவதாகவே அமைந்து விடுகிறது.



பரீட்சை ஒன்றில் சித்திபெற்றுச் சான்றிதழ் வைத்திருக்கும் சிற்றூழியர் தொடங்கி அந்தந்தத் துறைசார் நிர்வாகிகள் வரையிலானோர் பலர் அந்தந்தத் தொழிலுக்குத் தகுதியற்றவர்களாகக் காலத்தைக் கடத்திச் செல்லக் காரணம் என்ன? பரீட்சைச் சான்றிதழ் மாத்திரம் ஒருவருக்கு ஒரு பதவியை வழங்கப் போதுமானதல்ல!

அவர்களது நல்லொழுக்க நடத்தைகளும் அவதானிக்கப்பட வேண்டாமோ? இருப்பினும் அவர்களின் பதவித் தகுதியை மேம்படுத்த ஒவ்வொரு துறையும் தொழில்சார் திறமைகளை வளர்க்கும் ஊக்கப்படுத்தும் விழிப்புணர்வுச் செயலமர்வுகளை நடத்துகின்றன. அங்கேயும் சுயநலம் மேலெழுந்து நிற்கிறது. செயலமர்வுக்கென ஒரு தொகைப்பணம் செலவிடப்படுகின்றது. செயலமர்வின் நோக்கம் கருதாது. அந்தப் பெருநிதியைச் சுயநல ஆசையோடு தாமும் தம்மவர்களும் கணக்கிட்டுப் பெற்றுக்கொள்ளும் வகையில் திட்டமிட்டுப் பெயரளவிலான செயலமர்வை நடத்தி விடுகிறார்கள். அனுபவம் மிக்க ஆற்றலிற் சிறந்த வளவாளர்களை இவர்கள் ஓரம் கட்டிவிடுகிறார்கள். இதனால் நோக்கம் சிதைவுறுகிறது.

இவ்வாறே எம்மைச் சுற்றி ஆட்சி செய்யும் நிர்வாகம் அனைத்திலுமே பொதுநலம் கருதாத பொருத்தமற்ற செயல்களே மிகுந்திருப்பதாகச் செல்லத்தம்பியருக்குத் தெரிந்தன.

+++++

நல்லன சிந்தித்துச் சுயநலமற்ற பொதுநலந்தரும் செய்கைகளை முன்னெடுக்காமையாலேயே நாடு நாறிக் கிடக்கிறது. சுயநலம் மிக்கவர்களாகக் கற்றபடி ஒழுகாதோர் பலரும் பெருகிவிட்டமையை நினைந்து வருந்தினார். இங்கே அதிக வாக்குகளைப் பெற்றோர் தொகுதிகளின் அங்கத்தவர்களாகி நாட்டை ஆள்வோர் ஆகிவிடலாம் அதற்கும் மேலாக அவர்களிடம் இருக்கவேண்டிய பொதுநலம் பெருகும் செயற்பாடுகள் மலிய வேண்டாமோ!

பொய்யை மெய்யாக்க முயல்வோரும் மெய்யைப் பொய்யாக்க முயல்வோரும் தமது சுயநலத்துக்காகவே ஊரைக் கூட்டி ஊர்வலம் போகிறார்கள். பொதுநலம் கருதுவோர் எவரையும் அங்கே காணவில்லை. இருந்திருந்தால் அங்கே விட்டுக்கொடுப்புகளும் வெகுண்டெழுந்து சண்டையிடாது நட்புரிமையுடன் கூடிய மனிதநேயமும் இருந்திருக்கத்தானே வேண்டும். இப்பொழுது ஆட்சியாளர்களின் கூட்டத்தைக் குலைக்கும் சுயநலம் என்பது, நாட்டைச் சிதைக்கும் ஒரு பயங்கரமான நோய் அது தன்னுடைய மூக்கை அறுத்தேனும் அயலவனின் சகுனப்பிழைக்கு வழிவகுப்பதை விரும்புவதாகவே அமைந்து விடுகிறது.

தனது மதிப்பை உலகறியப் புதைத்தே னும் வெற்றி பெறத் துடிக்கிறது. இதனாலேயே சுயநலம் மிக்க ஆட்சியாளர்கள் சட்டங்களையும் உண்மைகளையும் மதிக்காமல் செயலாற்றுகிறார்கள்.

+++++

தமக்குச் சாதகமான அதாவது சுயநலமான சிந்தனைகளாலும் செயல்களாலும் பொதுநலத்தைச் சிதைக்கிறார்கள். நன்மைகளால் பெருக வேண்டிய செயல்களில் ஈடுபடாமல கோடிக்கணக்காகப் பொது மக்களின் பணத்தைச் செலவு செய்து இவர்கள் சுயநலம் தேடிக் கூத்தடிக்கிறார்கள்.

செல்லத்தம்பியர் மாத்திரமல்ல இப்பொழுது பொது மக்களும் இவற்றை அறிந்தவர்களாகி மௌனமாக இருப்பதாகவே தெரிகிறது.

நாற்றம் சொல்லித் தெரிவதல்லவே! நாற்றம் மிகுந்தெழும்பொழுது அது தானாகவே எமது மூக்கைத் சூழ்ந்து எமது நுகர்ச்சியில் நுழைந்து வெறுப்பையும் அருவருப்பையும் காட்டவே செய்யும். தமது பல்லைக் குற்றி மூக்கில் வைப்பவர்களுக்கு நாற்றம் தெரியாமல் போய்விடுமா? நாடு நாறாதிருப்பதற்கு நாம்தானே சுயநல மற்றோரைத் தெரிவு செய்ய வேண்டும். செல்லத்தம்பியர் சிந்தித்தார் ஆனால் மௌனமானார்.

---

## செல்லப்பாவும் மாரிமுத்துவும்

# சிரிக்க சிந்திக்க சில வரிகள்



மு.மாசிலாமணி

‘சின்னத்தம்பியும் ‘செல்லத்தம்பியும் இணை பிரியாத கூட்டாளிகள்’ எனத் தொடங்கும் சிங்கள பொப்பாடகர் எம்.எஸ். பெறான்டோ பாடிய கொச்சைத் தமிழ் பொப் பாடல் அந்தக் காலத்தில் மிகவும் பிரபல்ய மடைந்த பாடலாக மிளிர்ந்தது.

அதேபோல் செல்லப்பாவும் மாரிமுத்துவும் இணை பிரியாத கூட்டாளிகளாக இருந்து வருகிறார்கள் என்பது உதயன் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். பல நாள்களாக இருவரும் பிரிந்தே இருந்தனர். காரணம் செல்லப்பா தனது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக கனடா தேசம் சென்று விட்டார். மீண்டும் அவர்கள் செல்லப்பா வீட்டில் ஒன்று கூடினர். ஏறோப்பிளேனில் ஏறாத மாரிமுத்து ஏறோப்பிளேனை எட்டியும் பார்த்ததில்லை. அவரது கேள்விக் கணைகளெல்லாம் ஏறோப்பிளேனைப் பற்றியதாகும்.

அண்ணை ஏறோப்பிளேனிலை ஏறிப்போகப் பயமொண்டும் இல்லையோ?" என ஆவலாகக் கேட்டார். அதற்குச் செல்லப்பா, "பொதுப் போக்குவரத்து வாகனங்களிலை ஆகாய விமானம்தானம் பாதுகாப்பானதாக இருக்குது" எனச்சொல்ல, மாரிமுத்து மறுத்து, சும்மா சொல்லாதே அண்ணை ஆகாய வானூர்திகள் அடிக்கடி கடலிலிலும் தரையிலும் விழுவதாகப் பத்திரிகைகளிலும் றேடியோவிலும் செய்தி வருகுது" எனச் சொல்ல, "ஆயிரத்தில் ஒருக்கால் அதுவும் நடக்குதுதான். ஆனால் ஆயிரக்கணக்கான பிளேனுகள் உலகத்தைச் சுத்திப் பறந்தபடிதான் இருக்குதுகள்" எனச் சொல்ல மாரிமுத்து கேட்டார். அது ஏன் வானத்திலை ஒன்றுடன் ஒன்று அடிபட்டதாகச் செய்தி ஒண்டும் வருவதில்லை" என அதற்குச் செல்லப்பா "ஒவ்வொரு பிளேனுக்கும் தனிப்பாதை. அதாவது பறக்கும் உயரம் திசை என ஒதுக்கீடு செய்திருக்கினம். அதை விட பறக்கும் பிளேனுக்கும் உதவியாகத் தரையில் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு மையம் வழிகாட்டும் எனச் சொல்லி முடிக்க முதலில முந்திக் கொண்டு மாரிமுத்து கேட்டார் "கேட்கிறன் எண்டு குறை நினைக்காதை அண்ணை! பிரயாணிகள் ஒண்டுக்கு ரெண்டுக்கு போறதெல்லாம் என்ன மாதிரி?" எனக் கேட்டார். "அதெல்லாம் பிளேன் தரையிறங்கினப் பிறகு மிசினாலை அகற்றுவினம்" என்றார். இறுதியாக மில்லியன் டொலர் கேள்வி ஒன்றை மாரிமுத்து கேட்டார். என்ன கேள்வி என வாசகர்கள் அறிய வேண்டாமா? அதுதான். "பிளேன் றைவருக்கு என்ன சம்பளம்" என்பது சற்றுத் தடுமாறிப் போனாலும் செல்லப்பா சொன்னார் அவர்கள் எவ்வளவு மணி நேரம் வானூர்தியை இயக்குகிறார்கள் என்பதைப் பொறுத்தது பல லட்சம் டொலராக இருக்கும் என்று முடித்தார்.

வாரம் ஒரு நாடு

(சென்றவாரத் தொடர்ச்சி)

# கிரிக்கெட்டில் கலக்கும் ஜமேக்கா

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்



றெகே இசை, டாக்டர் பறவை போன்றவைஇந்தநாட்டின் தனித்துவங்களாக இருப்பதுபோல, கரீபியன் பிராந்தியத்தில் பல ஜாம்பவான்களைக் கிரிக்கெட் துறையில் அறிமுகப்படுத்திய பெருமை ஜமேக்காவையே சார்கிறது. கனவான்கள் விளையாட்டாகப் பிரித்தானியர்கள் கொண்டு வந்த விளையாட்டு இது. காலங்காலமாக இந்தவிளையாட்டுஇங்கு 'கனவான்கள்', 'பிளேயேர்ஸ்' என்று இரு அணிகளாகப் பிரிக்கப்பட்டு விளையாடப்பட்டு வந்துள்ளது. கரீபியன்பிராந்தியத்தில்உள்ளமிகப் பெரிய கிரிக்கெட் மைதானங்களுள் ஒன்றான சபீனா பார்க் மைதானம், தலைநகரான கிங்ஸ்டனில் உள்ளது. ஒரேதடவையில் 12ஆயிரம் பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடியது.

1975, 1979ஆம் ஆண்டுகளில் உலக வெற்றிக்கிண்ணத்தைமேற்கிந்தியத்தீவு அணி கைப்பற்றியபோது, சிறப்பாக விளையாடியிருந்தபந்துவீச்சாளர்களான வால்ஷ், மைக்கல் ஹோல்டிங், அதிரடி ஆட்டக்காரரான கிரிஸ் கெயில் ஆகியோர் ஜமேக்கா நாட்டவர்களே!

**விளையாட்டும் ஜமேக்காவும்**

மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரர்களை மாத்திரமே இந்த நாடுதந்ததுஎன்றுசொல்லிவிட முடியாது. மின்னல்வேகஓட்ட வீரரான உசைன் போல்ட் இந்த நாட்டவர்தான். உலகின் அதிசிறந்த ஓட்டவீரரெனக் கணிக்கப்படும்இவர்ஒலிம்பிக் விளையாட்டில் 8 தங்கப் பதக்கங்களைவென்றசாதனையாளர். இளம் வயதில் இவரும் ஒருவேகப்பந்துவீச்சாளராகக் கிரிக்கெட்விளையாடியுள்ளார். பவெல் என்பவரும் உலகப் புகழ்பெற்ற ஒரு ஜமேக்கா நாட்டு ஓட்ட வீரர். ஜமேக்காவின் கால் பந்தாட்ட அணியும் பலமானது. கரீபியன்வெற்றிக் கிண்ணத்தை ஐந்து தடவைகள் ஜமேக்கா வென்றுள்ளது. பெண்களின் வலைப் பந்தாட்ட அணியும் இங்கு பிரபல்யமானஒன்று. 'சண்ஷைன்கேர்ல்ஸ்' என்ற இவர்களது அணி வருடாவருடம் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்று வருகின்றது. ஒலிம்பிக் பதக்கங்களை வென்றெடுத்த நாடுகளில் அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்ததாக ஜமேக்காதான் அதிக பதக்க்ங்களை வென்றுள்ள நாடாகத்திகழ்கின்றது.

இந்தஅரசிடம், விளையாட்டுவீரர்களுக்கு கொடுக்க வேண்டிய அளவு ஊதியம் கொடுக்கும் பணபலம் இல்லாமையால், பணக்கார நாடுகளான பிரிட்டனும், அமெரிக்காவும் சன்யா றிச்சார்ட்ஸ், லின்பார்ட் கிறிஸ்டிஆகியஜமேக்காநாட்டுஓட்டக்காரர்களுக்குக்குடியுரிமைகொடுத்து வைத்திருக்கின்றன. தரையில் வளரும் மரவள்ளிக் கிழங்கை அதிகமாக உண்பதால்,ஜமேக்கர்கள்வேகமாக ஓடுகிறார்கள்என்றுகூடஒருகாரணம் சொல்லப்படுகின்றது. இதுவேடிக்கையான காரணமாக இருந்தாலும் கிராமப்புறங்களில்ஏராளமாகவிளையும் மரவள்ளிக் கிழங்கைச் சாப்பிடும் காரணத்தைக்சொல்லிகிராமப்புறத்திலிருந்து வந்த உசைன் போல்ட்டை உதாரணமாகக் காட்டுகிறார்கள்.

**பல இனங்கள் ஒரு மனிதன்**

'பல இனத்தவர்களுள் ஒரு மனிதன்' என்பதுஇந்தநாட்டின்முக்கியநோக்கைக் குறிக்கும் நீதி வாக்கியம். இங்கு வந்தேறு குடிகள் பலர். இங்கு வாழ்பவர்களில் அதிகமானவர்கள் ஆபிரிக்கர்களாகவோ அல்லது பகுதி ஆபிரிக்கர்களாகவோ இருக்கிறார்கள். இங்குள்ளவர்கள்தமதுமூதாதையர்கள் மேற்கு, மத்திய ஆபிரிக்க நாடுகளான கமரூன், கானா ஆகியவற்றிலிருந்தும், ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களிலிருந்துவந்தவர்களாகவும்இருக்கிறார்கள். ஆபிரிக்க ஜமேக்கர்களை அடுத்து இங்கு அதிகமாகஇருப்பவர்கள்ஆசியஜமேக்கர்கள். இதற்குள் இந்தோனேசிய ஜமேக்கர்களும், சீன ஜமேக்கர்களும் உள்ளடங்குகிறார்கள். அனேகமானவர்கள் பிரித்தா னியர்களால், தொழிலாளர் பற்றாக்குறைகாரணமாக 'இறக்குமதி' செய்யப்பட்டவர்கள்தான்! காரணம் 1838ஆம் ஆண்டில் அடிமை முறை ஒழிக்கப்பட்டு விட்டதால், தொழிலாளிகள் பஞ்சம்அப்பொழுதுஉருவாகிஇருந்தது. 7ஆயிரம் வரையிலான அமெரிக்கர்கள் இங்கு வாழ்கிறார்கள். 20ஆயிரம் இலத்தீன் அமெரிக்கர்களும் இங்கிருக்கிறார்கள். அண்மைக் காலங்களில் சீனா, ஹெய்ட்டி, கியூபா, கொலம்பியா ஆகிய நாடுகளிலிருந்து வருபவர்களின் தொகை அதிகரித்திருப்பதாகப்புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. லெபனான்பரம்பரையைக்கொண்ட 20ஆயிரம் பேர் வரையிலான ஜமேக்கர்களும் இங்கு வாழ்கிறார்கள். இதன் அலுவலக மொழி ஆங்கிலம்.



**பல இனத்தவர்களுள் ஒரு மனிதன்' என்பது இந்த நாட்டின் முக்கிய நோக்கைக் குறிக்கும் நீதி வாக்கியம். இங்கு வந்தேறு குடிகள் பலர். இங்கு வாழ்பவர்களில் அதிகமானவர்கள் ஆபிரிக்கர்களாகவோ அல்லது பகுதி ஆபிரிக்கர்களாகவோ இருக்கிறார்கள்.**

**உல்லாசப் பயணிகளால் உயர்வடையும் பொருளாதாரம்**

விவசாயம், சுரங்கத் தொழில், நிதி, காப்புறுதிச் சேவை, உல்லாசப் பயணத்துறை போன்றவை இவர்களின் பொருளாதாரத்துக்குவலுச்சேர்க்கின்றன. அந்நியச்செலவாணியைச் சம்பாதிப்பதில், உல்லாசப் பயணத்துறையும், சுரங்கத் தொழிலும் முன்னிற்கின்றன. வேறெந்தக் கர பியன் தீவிலும்இல்லாதவாறுஇங்குபலதரப்பட்ட கனிமங்கள் உள்ளன. தங்கம், சிலிக்கா மணல், சுண்ணாம்புக் கற்கள், பவுக்ஸைட் என்பன இவற்றுள் சில! நாட்டின் 10வீத அந்நியச் செலவாணியை இவை ஈட்டித் தருகின்றன. உச்சக்கட்ட குற்றச் செயல்களுக்கு பெயர்போன நாடுகளுள் ஒன்றாக ஜமேக்கா இருப்பினும், உல்லாசப்பயணத் துறை, கோடி கோடியாக வருவாயைஅள்ளிவழங்குகின்றது. பிரச்சினைக்குரியஇடங்களுக்கு உல்லாசப் பயணிகளை அரசு செல்ல அனுமதிக்காதது இதற்குக் காரணமாக இருக்கலாம். 1892ஆம் ஆண்டில் இவர்கள் தமது முதல் உலாசப் பயணிகளுக்கான விடுதியைக் கட்டியுள்ளார்கள். ஒவ்வொருவருடமும்1.3மில்லியன்உல்லாசப்பயணிகள்இங்குவந்துபோகிறார்களாம்.

அலுமினிய உற்பத்திக்குத் தேவை யூான பவுக்ஸைட் கனிமங்களை அகழ்ந்தெடுத்துஏற்றுமதிசெய்வதில், உலகநாடுகளிடையே ஐந்தாவது இடத்தை ஜமேக்கா பிடித்துள்ளது. உல்லாசப் பயணத்துறையும், இந்தக் கற்களின் ஏற்றுமதியும் இந்த நாட்டுக்கு அதிகளவு வருவாயை ஈட்டிக் கொடுக்கின்றன. விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளஇந்தநாட்டின்ஏற்றுமதிஉணவுப் பொருள்களாகச் சீனி, வாழைப்பழம், கோப்பி, றம்என்றகுடிபானம், மரவள்ளிக் கிழங்கு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**'கொல்லும் பிசாசான' றம்**

இந்த நாட்டை நினைவுக்குக் கொண்டுவருவதற்கு 'றம்' என்று அழைக்கப்படும் மதுவும் உதவிக்கு வருகின்றது. இன்று இது ஜமேக்காவின் அடையாளமாகத் திகழ்ந்தாலும்,நொதிக்கவைக்கப்பட்டகரும்புச் சீனியிலிருந்து மதுபானம் உற்பத்தி செய்வதைப் பிரித்தானியர்கள்தான் அறிமுகம் செய்திருக்கிறார்கள். 1620ஆம் ஆண்டுகளில் இன்னொரு கரீபியன் தீவான பார்படோஸில், கருப்பஞ்சாற்று மது அறிமுகமாகி இருக்கின்றது. கொல்லும் பிசாசு என்று ஒரு காலத்தில் அறியப்பட்ட இந்த றம் என்ற மது, அப்போதைய அமெரிக்கக்குடியேற்றநாடுகள்கொண்டு வரும் கருவாடு, பன்றி இறைச்சி, மரப் பலகை,கால்நடைகள்போன்றவைவற்றுக் குப்பண்ட மாற்றாகக் கைமாறியிருக்கின்றது. காலப்போக்கில்இந்தறம்மிகப்பிரபல்யமாகியிருக்கிறது. பார்படோஸின் மிகப் பழைய றம் உற்பத்தி நிறுவனமொன்று மேம்படுத்தப்பட்டதொழில்நுட்பங்களுடன் இதை உற்பத்தி செய்துள்ளது.

இது 1703ஆம் ஆண்டில் சம்பவித்தது. 1749ஆம் ஆண்டில் ஜமேக்காவின் 'அப்பிள்ரன் ஜமேக்கா ' என்ற றம் அறிமுகமானது. 1893ஆம் ஆண்டில் 148 மது வடிசாலைகள் ஜமேக்காவில் இருந்துள்ளன. இவை காலப்போக்கில் ஐந்தாக வீழ்ச்சி கண்டிருப்பினும், மதுஉற்பத்தித்தொழில் நுட்பம் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இன்று பலரகமான றம் மதுவை உற்பத்தி செய்வதில் பிரபல்யமாகி இருப்பது ஜமேக்கா! ஆண்டுக்கு 50 மில்லியன் லீற்றர்றம்உற்பத்திசெய்கிறார்கள். 70க்கு மேற்பட்ட உலகநாடுகளுக்குஇதைஏற்றுமதியும் செய்கிறார்கள். 250 வருடப் பழமை வாய்ந்த றம் கூட ஜமேக்காவில் விற்பனைக்கு உண்டு. குடிவகையாக இருந்தாலும் குடிமக்களுக்கு அந்நியச் செலவாணியைத் தேடித் தருவதால், மது இங்கே உயர்ந்து நிற்கிறது!



# குப்பை ஆட்சி...!

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

"நீங்கள் எதை விளங்கினாலும் சரி.. விளங்காமல் விட்டாலும் சரி. எங்கடை நாட்டு நடப்புகள் ஒண்டும் சரியானதாயில்லை. எல்லா இடங்களிலையும் குப்பையள்தான் ஆட்சி நடத்துதுகள்..." இப்படியாக என்ரை வாயைக் கிளறாமலுக்கு விடுகிறதில்லை எண்டமாதிரி ரெண்டாந்தரமும் இதையே சொன்னார் செல்லக் கண்டர். அவற்றை கதையின்ர தொனி என்னவெண்டது விளங்குதே?

அவருக்குப் பெஞ்சாதி ரெண்டெண்டதாலை மட்டுமில்லை. அவற்றை கதையளும் அப்பிடித்தான். அதாலைதான் அவரை டபிள்க் கண்டர் எண்டுறது பாருங்கோ! அவர் என்னத்தைச் சொல்லுகிறாரெண்டதை விளங்கிக்கொள்ள சரியான அனுபவம் இருக்கவேணும்.

ராசலிங்கத்தார், "ஓஓ.. எல்லாமே குப்பையள்தான்... குடும்பப் பிரச்சினையளும், அழுகுணியளும்தானே நாடகம் முழுக்க, ச்சீய் பாக்கவே வெறுக்குது. முழுக் குப்பையள்..." எண்டு இழுக்கத் தொடங்க, "ராசலிங்கத்துக்கு ரீவீயை விட்டால் வேறையொண்டும் தெரியாது..." எண்டு குறுக்கை பூந்த மணியம், "அரசியல் குப்பையள் இருக்கல்லே அதையல்லே கண்டர் சொல்லுகிறார். இல்லையே கண்டு?"

"எல்லாந்தான். எல்லாமே குப்பையாத்தான் கிடக்குது? றோட்டிலை குப்பை, கடைத் தெருவிலை, பள்ளிக்கூடங்களிலை, குப்பையளைச் சரியா அப்புறப்படுத்த வேண்டின பிரதேச சபையளிலை, ஆஸ்பத்திரியளிலை குப்பைதானே குவிஞ்சும் சிதறியும் கிடக்கு" எண்டு கண்டர் சொல்லுறதுக்குள்ள கன குப்பையள் கிடக்குது எண்டுதான் நான் நினைக்கிறன். நீங்கள் அப்பிடி நினைக்கேல்லையோ?

✦ ✦ ✦ ✦ ✦

"இதுகளும் இல்லையெண்டால் எப்பிடிக் கலகலப்பா இருக்கும்? இதுகளும் இருக்கத்தான் வேணும். ஒண்டுமே இல்லையெண்டால், பொழுது போகக் கதைக்கிறதுக்கும் ஒண்டுமில்லாமலுக்கல்லே போகுடும்" எண்டு கவலைப்படுகிற ஒரே ஆள் எங்கடை அண்ணாமலையர் தான்.

"நீ.. கதிரேசு கதைச்சுப் புலம்புறதுக்கு ஏதும் ஏப்பிடுமோ சொல்லு பாப்பம்?" வாய் பாத்துக் கொண்டிருந்த என்னை வம்புக்கிழுத்துது மனிசன்.

அந்தாள் சொல்லுறதிலையும் உண்மை இருக்குத்தான்.



றோட்டுக் குப்பையளைப் பற்றி எவ்வளவுதான் சொல்லியும் அது கூடுதே தவிர ஒரிடமும் குறையிறமாதிரி இல்லைத்தானே? கதைக்காமலுக்கு என்ன செய்யிறது? அரசியலும் குப்பையாத்தான் கிடக்குது. ஆனால், என்ன இப்ப கொஞ்ச நாளாய் மாறிமாறிக் கிளறுகிற போட்டியளாலை கொஞ்சம் ஓவராய் நாறுது.

"கிண்டிச் சேறெடுக்கிற தம்பியவை ஊரிலை இல்லைப்போலை. சத்தப்பொறுதியைக் காணேல்லை. எல்லா இடங்களிலையும் நாங்களாக் கொண்டு வந்து பாவிக்கிற சாமானுகளாலைதான் பெரிய பிரச்சினை..." எண்டு கண்டர் புதுசாய் ஒரு கதையைத் தொடக்கினார். இப்ப ராசலிங்கத்தார் அலேட்டாகி, "ஓஓஓ சும்மா கிடந்த கம்பியை வளைச்சுச் சூலமாக்கினால் அது கோழியைக் கொண்டா ஆட்டைக் கொண்டா எண்டு கேட்ட கதைதானே.. என்ன கண்டண்ணை? வெளியிலை நிண்டு, வெள்ளை வெளேரெண்ட உடுப்போடை நிண்டு காலத்துக்கெற்ற மாதிரி வாய் ஆடாமல் அறிக்கை விட்டுக் கூப்பிடுகிற இடங்களிலை போடுகிற மாலைக்கும் குடிக்கிற சோடாவுக்கும் வைக்கிற மைக்குகளுக்கும் ஏற்றமாதிரி பேசினாச் சரி எண்டு வந்த ஐயாவின்ர கூத்தைச் சொல்லுறியோ?" எண்டார்.

கனகருக்கு உந்தக்கதை பிடிக்கேல்லைப் போலை, "குப்பையைக் கிண்டித்தானே அள்ளவேணும்.. அது பிழையெண்டோ நினைக்கிறாய் ராசலிங்கம்?" எண்டு குறுக்கே புகுந்தார்.

"கிண்டினாலும் சரி கிண்டாட்டியும் சரி அதுகளை அள்ளவேணும் எண்டுறதைப்பற்றி ஆராவது யோசிக்கினமோ?" எண்டு வழிமடக்கினார் சம்பர். சம்பர் சரியான யதார்த்த வாதிதான். எண்டாலும் சில வேளையளிலை நடைமுறைச்சாத்தியங்களை மறந்து பேசுகிறது வழக்கம் எண்டுறது என்னுடைய அவதானம்.



"இப்ப சம்பர் கேக்கிறது நியாயந்தான். அள்ள வேணும் எண்டில்லை தானாய் உக்கிப் போகுந்தானே எண்டாவது யோசிச்சிருக்கலாமில்லே? ஆனாலொண்டு புதிசுபுதிசாய் உக்காமலுக்குக் கிடந்து நாறுகிற குப்பையளைப் போடாமலுக்காவது இருக்கலாமல்லோ? நாறுமெண்டு தெரிஞ்சும் பொதுவிலை உதுகளைக் கண்டபடிக்குப் போடுகிறது ஆர்? சீனனும் இந்தியனும் அமெரிக்கனுமே? நாங்கள்தானே போடுகிறம், கூட்டியெடுத்து ஒரேயிடமாகக் குவிச்சுவைக்கிறது ஆர்? அதுவும் நாங்கள்தான். இல்லையண்டு சொல்லுங்கோ பாப்பம்? அவளைத் தொடுவானேன் அவலப் படுவானேன். முழுக் குப்பையளும் எங்கடைதானே... போடுகிறதும் நாங்கள்தானே.?

> "நாறுமெண்டு தெரிஞ்சும் பொதுவிலை உதுகளைக் கண்டபடிக்குப் போடுகிறது ஆர்? சீனனும் இந்தியனும் அமெரிக்கனுமே? நாங்கள்தானே போடுகிறம், கூட்டியெடுத்து ஒரேயிடமாகக் குவிச்சுவைக்கிறது ஆர்? அதுவும் நாங்கள்தான்.

> "எல்லாமே குப்பையாத்தான் கிடக்குது? றோட்டிலை குப்பை கடைத் தெருவிலை, பள்ளிக்கூடங்களிலை குப்பையளைச் சரியா அப்புறப்படுத்த வேண்டின பிரதேச சபையளிலை, ஆஸ்பத்திரியளிலை குப்பைதானே குவிஞ்சும் சிதறியும் கிடக்கு" எண்டு கண்டர் சொல்லுறதுக்குள்ள கன குப்பையள் கிடக்குது எண்டுதான் நான் நினைக்கிறன். நீங்கள் அப்பிடி நினைக் கேல்லையோ?

---

# பெண் என்பதால்...

கவிதை

ஆர்த்திகா சுவேந்திரன்

மெய்யது இங்கே
பொய்யாய்த் தோன்றிட
தவறு ஒன்றும்
தரணியில் செய்யாமல்
தண்டனை அதனை
தானே அனுபவித்திடும்
தள்ளாடும் வாழ்விது
தையல் நான் என்பதால்....

தலை குனிந்து
தரையில் சென்றாலும்
தலை நிமிர்ந்து
தக்க பதில் சொன்னாலும்
தறிகெட்டவள் இவளென
தள்ளி வைத்திடுவர்
தலைவிதி இதுதானோ?
தையல் நான் என்பதால்....'

வாயோரம் சிறு
புன்னகைதான் இருந்தாலும்
வாய் விட்டு நான்கு
வார்த்தை எடுத்துரைத்தாலும்
வாயாடி இவளென
வசைபாடுவர் இங்கே
வழியில்லை எனக்கு
வாழ்வுதனை இரசிக்க
வண்ணமகள் நான்
என்பதால்....


வஞ்சனைகள் பல
'வரம்பற்றுக் கிடக்க
வருடிடும் தென்றலாய்
வந்திடும் நினைவுகள்
வாய்விட்டு வெளிவர
வழிதேடும் கனவுகள்
பேசிட இங்கே
பாதையில்லை எனக்கு
பெண் நான் என்பதால்....

மனம் தன்னில் இதயமாய்
மலர்ந்திடும் எண்ணங்கள்
மானென ஓடி உள்ளே
மறைந்திடும் இன்பங்கள்
மதில் மேல் பூனையாய்
மாறிடும் காலம் தன்னில்
மதி கெட்டவள் ஆகிறேன்
மங்கை நான் என்பதால்....

பெண்ணடிமை வாழ்வு
புவிதனில்
இன்னுமுண்டு
அன்று வெளிப்படையாய்
இன்று உள்நோக்கமாய்
நிமிர்ந்த நன்னடை எங்கே?
நேர்கொண்ட பார்வை
தான் போனது எங்கே?
நின்றிட முடியவில்லை
நிஜ உலகம் தனில்
நங்கை நான் என்பதால்....


பார்க்காமல் இருந்தாலும்
பார்த்தேன் என்பார்கள்
பேசாமல் சென்றாலும்
போகுது நடிப்பென்பார்கள்
பெரும் பாவம் செய்து
பிறந்து விட்டேன் இங்கு
பெண்ணாய் நானுமே...

வரும் அனைத்தும்
விதியென எண்ணி
வருந்த வேண்டுமேன
எனக்கு
வந்தது சாபம் நன்றாய்
வாழ்வுகளை வெறுத்து
வலிகளைச் சுமந்து
வண்ணமதை
தொலைத்து
வசந்மதை மறந்து
வாழ்க நாயகியே! என
வளர்ந்திடும் கோஷங்கள்
வந்த நான் பெண்
என்பதால்.......



தொகுப்பு
பிரகாஸ்





## ரவுண்ட் த வேர்ள்ட்

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் எச் டபிள்யு புஷ்ஷின் இறுதிச் சடங்குகள் இந்த வாரம் நடைபெற்றன. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது.



## கடனை செலுத்தத் தயார்; மல்லையா திடீர் அறிவிப்பு

இந்திய வங்கிகளில் 9 ஆயிரம் கோடி (இந்திய மதிப்பில்) ரூபாவை கடனாகப் பெற்று அவற்றைத் திருப்பிச் செலுத்தாமல் தப்பிச் சென்று இங்கிலாந்தில் வசித்துவரும் விஜய் மல்லையா, தனது கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தயார் என்று தெரிவித்தார்.

விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு நாடுகடத்த வேண்டும் என்று இங்கிலாந்தில் இந்திய அரசின் சார்பாகத் தொடரப்பட்ட வழக்கு எதிர் வரும் 10ஆம் திகதி லண்டன் வெப்மினிஸ்டர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் நிலையில் விஜய் மல்லையா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

*'9 ஆயிரம் கோடி! எத்தனை பூச்சியங்களோ!!!'*


## அமெரிக்காவுக்கு பணியாது ரஷ்யா

அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை மீறி அமெரிக்கா ஆயுதம் தயாரித்தால் நாங்களும் ஆயுதம் தயாரிப்போம் என்று ரஷ்ய அதிபர் புடின் மிரட்டல் விடுத்துள்ளார்.

இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனிக்கு எதிராக அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்று சேர்ந்து போரில் ஈடுபட்டன. ஆனால், போர் முடிவுக்கு வந்தபிறகு அமெரிக்கா- ரஷ்யா இடையே நீ பெரியவனா? நான் பெரியவனா? என்ற போட்டி ஏற்பட்டது. இதனால் இரு நாடுகளும் ஆயுதங்களைக் குவித்தன. குறிப்பாக அணுகுண்டு தயாரிப்பிலும், அவற்றை ஏவும் ஏவுகணைத் தயாரிப்பிலும் தீவிரம் காட்டின. எந்த நேரத்திலும் இருநாடுகளும் மோதிக் கொள்ளலாம் என்று சூழ்நிலை நிலவியது. இந்த நிலையில் ரஷ்ய அதிபராக இருந்த கோர்பசேவ் சற்று இறங்கி வந்தார். இதன் காரணமாக 1987ஆம் ஆண்டு அமெரிக்கா - ரஷ்யா இடையே அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி குறுகிய மற்றும் நடுநிலை அணு ஆயுத ஏவுகணைகளை தயாரிப்பதை நிறுத்துவது. ஏற்கனவே தயாரித்த பலபல ஆயுதங்களை அழிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து இரு நாடுகளுமே பெரும்பாலான அணு ஆயுதங்களை அழித்தன. புதிய ஆயுதங்களும் முன்பு போல் தயாரிக்கப்படவில்லை. ஆனால், இந்த ஒப்பந்தத்தை மீறி ரஷ்யா செயற்பட்டு வருவதாகவும், எனவே, ஒப்பந்தத்தில் இருந்து வெளியேற போவதாகவும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார். இதற்குப் பதிலடியாகவே ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறி அமெரிக்கா அணுவாயுதங்களைத் தயாரித்தால் நாமும் தயாரிப்போம் என்றுள்ளார் புடின்.

*'வடகொரியாவைப் போலல்ல ரஷ்யா...'*

## அமெரிக்காவின் மிரட்டல்களுக்கு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை



ஈரான் மிரட்டல் தொனி

ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா முழுமையாகத் தடை விதித்துள்ள நிலையில், அவ்வாறு தம்மிடம் இருந்து கச்சா இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா தடை விதித்தால் வளைகுடாவில் உள்ள வேறு எந்த நாடும் கச்சாவை ஏற்றுமதி செய்வதைத் தடுப்போம் என்று தெரிவித்துள்ளார் ஈரானின் அதிபர் ரவுகானி.

ஈரானுடன் செய்துகொண்ட அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியதன் பின்னர் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக மோதல் போக்கு அதிகரித்து வருகிறது. ஈரான் அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபடுகிறது என்று குறிப்பிட்டுள்ள அமரிக்கா, அந்த நாட்டைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் கடந்த ஆறு மாதங்களாகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஈரானை கச்சா ஒப்பந்தத்தில் இருந்து விரட்டியடித்தால் ஏற்படக்கூடிய கச்சா பற்றாக்குறையை சவூதியை வைத்து நிவர்த்தி செய்யவும் அமெரிக்கா திட்ட மிட்டுள்ளது.

இவ்வாறான காய் நகர்த்தல்களின் பின்னணியிலேயே கச்சா ஒப்பந்தத்தில் இருந்து தம்மை நீக்கினால் வளைகுடாவில் இருந்து கச்சா ஏற்றுமதியாவதைத் தடுப்போம் என்றுள்ளார் ரவுகானி.

*'உலகுக்கு அமெரிக்கா என்றால் வளைகுடாவுக்கு ஈரான்தானே...'*



## உலகின் சக்தி வாய்ந்த பெண்ணாக ஏஞ்சலா மெர்க்கல்

போர்ப்ஸ் பத்திரிகையால் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பெண்ணாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார் ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல்.

போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் உலகின் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. வர்த்தகம், தொழில்நுட்பம், ஊடகம், கேளிக்கைத்துறை, அரசியல் மற்றும் கொடையாளர்கள் என மொத்தம் 6 பிரிவுகளில் 100 பேர் இந்தப் பட்டியலில் இடம்பெறு வார்கள். கடந்த 7 ஆண்டுகளாக முதலிடத்தில் இருந்துவந்த மெர்க்கல் 8ஆவது ஆண்டாக இந்த வருடமும் முதலிடத்தைப் பிடித்தார்.

*'அசைக்க முடியாத பெண்சக்தி மெர்க்கல்...'*

சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்



# ஆடு பாம்பே! சுழன்றாடு பாம்பே!



நேரம் இரவு பத்துமணியை நெருங்கிக்கொண்டிருந்தது. காரிருளைக் கிழித்துக் கொண்டு காற்றாக விரைந்தது அந்த பஸ் வண்டி.

"எப்பிடியும் ஏழெட்டு மணித்தியாலத்துக்குள்ளை கொழும்புக்குப் போயிடலாம். புறக்கோட்டையில் இறங்கி ஒரு லொட்ஜிலை ஆறிக் கீறி உடுப்புகளை மாத்தி நிம்மதியாய்ப் போறதுக்கு நேரம் தாராளமாய்க் காணும். பத்து மணிக்குத்தானே 'இன்ரெர் வியூ'! மெல்லப்போகலாம். அல்லது இதே பஸ்சிலை ஒரேயடியாய்ப் போனால் வெள்ளவத்தைக்குப் போய்க் கமலேசன்ரை ரூமிலும் தங்கலாம்தான். வேண்டாம்! அங்கை போனால் அவனுக்கும் சிரமம் தானே!

மனம் கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருக்க பஸ்ஸும் தன்பாட்டுக்கு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. என்னுடைய மனமும் ஒரு நிலைக்கு வராது 'றொட்' கழன்றுவிட்ட வாகனம்போல் தாறுமாறாக ஓடிக்கொண்டிருந்தது.

✦ ✦ ✦

"எட! உந்த ட்றைவரின்ரை ஓட்டத்தைப் பாத்தால் அஞ்சாறு மணித்தியாலத்துக்குள்ளை கொழும்புக்குப் போயிடுவான் போலயெல்லோ கிடக்குது! எங்களைக் கொழும்பிலை தான் இறக்கப்போறானோ! இல்லை நேராய்க் கொண்டுபோய் சிவலோகத்திலை தான் இறக்கப்போறானோ! கடவுளுக்குத்தான் தெரியும்"

பஸ்சுக்குள் அதிக இருக்கைகள் வெறுமையாகக் காணப்பட்டன. சற்றுத் தள்ளிப்போய் வேறு ஒரு சீற்றில் அமர்ந்துகொண்டேன்.

தக்காளிப்பழ நிறத்தில் தக தகமேனி!

பஸ்சின் யன்னலை ஊடறுத்து வந்த காற்றில் கலந்து கூந்தலிலும் ஒரு விதமான கவர்ச்சி இழையோடியிருந்தது. பார்வைக்கு ஒரு கன்னிப் பெண் போன்றிருந்தாள். கன்னிப் பெண்ணோ? வன்னிப் பெண்ணோ? யாராயிருந்தால் எனக்கென்ன! கொழும்பு போகும் வரைக்கும் அவளினிந்த அழகைச் சும்மா இரசித்துக் கொண்டிருந்தால் போதும்.

என்னதான் அழகாயிருந்தாலும் அதை எவ்வளவு நேரம் தான் பார்ப்பது! எவ்வளவு நேரம் தான் இரசிப்பது! மனத்தில் ஒரு வித சலிப்பு! பஸ்சுக்குள் ஓடிக்கொண்டிருந்த ரீ.வியில் கவனம் செலுத்தலாமென்றால்...! அதில் சத்தம் வருவதாகத் தெரியவில்லை. வெறும் வெளிச்சம் மட்டும் ஒளிந்து ஒளிந்து வந்து போய்க்கொண்டிருந்தது. யாரோ ஓர் அழகி மரங்களைச் சுற்றிச் சுற்றி ஓட அவளைப் பின்தொடர்ந்து அந்த வாலிபனும் சுற்றிச் சுற்றி ஓட கடைசியில் ஏதோ ஓர் ஆற்றில் வீழ்ந்தெழுந்து குளிரால் நடுநடுங்கி ஒருவரையொருவர் கட்டியணைத்து.... அடக் கடவுளே! சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் பார்த்த ஊமைச் சுகாதாரப் படம் போன்றேயிருந்தது. ஓர் இழவும் புரியவில்லை. அதைப் பார்த்து என்ன! பார்க்காமல் விட்டென்ன!

✦ ✦ ✦ ✦

எதிர்ப்புற இருக்கையில் ஐம்பதுக்குக் குறையாத வயதைக் கொண்ட வயோதிபர்! கையில் ஒரு பத்திரிகையை மடித்து வைத்திருந்தபடி கோழித்தூக்கத்தில் காணப்பட்டார். பென்னம் பெரிய வாயைத் திறந்து வைத்திருந்தார். அந்தக் காலத்து 'வக் ஷோல்' காரின் 'போனட்' திறந்து விடப்பட்டிருந்தது போன்று அது காணப்பட்டது. வாயிலிருந்து 'உஷ்'என்னும் பயங்கர ஓசை முற்றிக் குறுத்த புடையன் பாம்பின் ஞாபகத்தை உண்டாக்கியது. இடையிடையே அந்தப் பெரிய வாயிலிருந்து ஏதோ ஒருவகைத் திரவம் வெளியே வந்து தலை காட்டுவதும், போவதுமாயிருந்தது. எது எப்படியோ! அந்த மனிதர் தன்னை மறந்த தூக்கத்தில் இலயித்திருப்பது மட்டும் உண்மை. அவரின் கையில் கிடந்த பத்திரிகையை அவரையறியாமலே எடுத்துவிட்டேன். முதற்பக்கத்தில் ஏதோதோ அரசியல் செய்திகள்! அத்தனையும் சபைக்குதவாத குப்பைகள், பார்க்கப்பிடிக்கவில்லை. பக்கத்தைப் புரட்டினால்.... ஐயோ கடவுளே! மிகப்பெரிய தொரு நாகபாம்பின் படம். படமாக இருந்தாலும் அத்தனை தத்ரூபமாக அது பயம் காட்டியது. வேண்டாம். பாம்பென்ற வார்த்தையைக் கேட்டாலே காத தூரம் ஓடிப்போய் ஒளிந்து கொள்வேன். அத்தனை பயம்: ஆறாம் வகுப்புப் படித்த காலத்தில், "நாகர்முடி மேலிருக்கும் நல்ல பாம்பே! உனக்கு நல்ல பெயர்வைத்தது யார் சொல்லு பாம்பே!" இந்த வரிகளைப் படித்துக்காட்டும்படி பண்டிதர் பரமசிவம் வாத்தியார் என்னை எப்படியெல்லாம் பாடு படுத்தினார். முடியவே முடியாது என்றேன். பாம்பென்னும் வார்த்தையை மட்டும் பயன்படுத்தாது, நாகர் முடிமேலிருக்கும் அந்தச் சாமானே! உனக்கு நல்ல பெயர் வைத்தது யார் அந்தச்சாமானே!" என்று அரைகுறையாகப் பாடினேன். அப்போது மட்டுமல்ல எப்போதுமே நான் பாம்பென்றவார்த்தையை உச்சரித்ததே கிடையாது. அத்தனை பயம்! அப்படிப்பட்ட எனக்கு அந்தப் பாம்பின்படம் உடலைக் கூசச் செய்தது.

✦ ✦ ✦ ✦

பஸ்சுக்குள் மின்விளக்குகள் அணைக்கப்பட்டு எங்கும் இருள்மயம். சரி நானும் மற்றவர்களைப்போல் சற்று உறங்குவோம் எனச் சீற்றைச் சரிசெய்து ஒரு கண் உறங்கலாமென்றால்...!

"இதென்னடா இது ! காலுக்கை ஏதோ நளு நொளுக்குது! காலுக்கை பாம்போ! சே! இந்தப்பெரிய கொழும்பு பஸ்சுக்கை பாம்பெங்காலை! இப்ப பேப்பரிலை பாம்பின்ரை படத்தைப் பார்த்தாப்போலை.... அந்த நினைவிலைஏதோ!.. சரி படுப்பம். இதென்ன அரியண்டமாய்க் கிடக்குது! காலுக்கைஎன்ன ஏதோ சுரண்டுமாப்போலை கிடக்குது. ஓகோ! உது ஒண்டுமில்லை. முன் சீற்றிலை இருக்கிற அந்தப் பெட்டையின்ரை வேலைதான். என்னைப்போலை வடிவான பெடியங்களைக் கண்டால் கால் விளையாட்டுக் காட்டுறா போலை! சரி நடக்கட்டும்! கரும்பு தின்னக்கூலியே வேணும். ஆனா ஒண்டு! இனியும் உவ சுரண்டினா எண்டால், அம்மாவாணை நானும் விடமாட்டன். அவ காலாலை சுரண்டினால் நான் கீழை குனிஞ்சு கையாலை சுரண்டுவன். சும்மாயில்லை நான் ஓர் ஆம்பிளைப்பிள்ளையெல்லே! விடேலுமே!"

பஸ் முழுவழும் இருள்மயம். எனக்கோ சிவமயம்.

✦ ✦ ✦ ✦

"பார்! பங்கை பார்! பேந்தும் பேந்தும் தடவுறாள். தளதளவெண்டு என்ன இதமாய்க் கிடக்கு! விடக்குடாது இனியும்"

என்னுடைய இருக்கைக் கீழே குனிந்து கையைக் கொண்டுபோக.... இதென்ன அவளுடைய காலா! அல்லது ஏதோ ஒரு வாலா! பளபள வென மின்னிக்கொண்டிருப்பது அவளுடைய காலா! நிச்சயமாக இல்லை.

"ஐயோ! பா....ம்....பூ.... பாம்.. பு!"

வெட்கத்தைக் கக்கத்துக்குள் வைத்துவிட்டு இருக்கையில் ஏறி நின்று அலறியடித்தேன்.

"ஏய் உனக்கென்ன விசரே! பஸ்சுக்கை என்னண்டு பாம்பு வாறது! பேப்பரிலை பாம்புப் படத்தைப் பார்த்துப் பயந்து அந்த நினைவிலை சும்மா கத்தி விசராடாதை. பேசாமல் படு"

யாரோ ஒருவர் சொன்னார். ஒருவேளை அதுவும் உண்மையாயிருக்கலாம். இப்போது நான் 'கப்சிப்'.

"ஐயோ பாம்பு!.... காலுக்கை பாம்பு"

எனது வரிசையின் முற்பகுதியில் யாரோ ஒரு பெண்மணி அவலக்குரலெடுத்து இருக்கையை விட்டெழுந்து குச்சுப்புடி ஆடிக்கொண்டிருந்தாள். ஏனையவர்கள் பாம்பைக் காணாமலே பேய் பிடித்தவர்கள் போன்று பயப்பீதியில் கத்திக் குளறியபடி பஸ்செங்கும் ஓடித்திருந்தனர். சாரதியோ பஸ்சை நிறுத்துவதா யில்லை. அவன் பாவி எல்லோரையும் விடப் பயந்த நிலையில், தன்னுடைய ஆசனத்தில் ஏறி நின்றான். இன்னும் சிலர் முன்வாயில் பின்வாயில்கள் வழியாக வெளியே குதித்தனர். குதிக்கப் பயந்தவர்கள் பஸ்சுக்குள்ளே மிதிபட்டுக் கொண்டிருந்தனர்.

"எடக் கடவுளே! பிளேன் எண்டால் 'பரசூட்'டாவது இருக்கும் - இதுக்குள் ஒரு பொரியுமில்லையே!"

யாரோ ஒருவர் தனக்குள் புலம்பினார்.

"என்ரை பிள்ளையாரே! நாளைக்குக் கொழும்பிலை என்ரை பெரியம்மா வீட்டுக் கலியாண வீட்டுக்கெண்டு வெளிக்கிட்டு..." பெண்மணி ஒருத்தி கதறி அழுதாள்.

✦ ✦ ✦ ✦

பஸ் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால் சாரதி பஸ்சை நிறுத்தவில்லை. அது வீதியோரத்தில் நின்ற பாலை மரத்தின்மீது டமார் என மோதி விட்டுத் தன்பாட்டுக்கு நின்றுவிட்டது. கதறிக் கொண்டிருந்த பெண்மணியின் பொன் மூக்குடைந்து முகமெல்லாம் சிவப்புச் சமாச்சாரம்.

நடுத்தர வயதுக்காரன் ஒருவரின் நெற்றிப்பரப்புக் கிழிந்து அங்குச் சிவப்புச் சமாச்சாரம் சொட்டிக்கொண்டிருந்தது. சிறுகாயங்கள், பெருங்காயங்கள், கடுங்காயங்களென்று ஒரே ரணகளமாயிருந்தது. எனக்கும் நாரிப் பூட்டு விலகிவிட்டது போன்ற வலியும் வேதனையும். "ராஜா! ராஜா எங்கேடா போயிற்றாய்" இதுவரை எதுவும் தெரியாத நிலையில் அசந்து தூங்கிக் கொண்டிருந்த பாம்பாட்டி ஒருவன் கையில் பாம்புக் கூடையுடனும் மகுடியுடனும் தனது பாம்பைத் தேடிக் கொண்டிருந்தான். பாம்பைக் காணவில்லை. தனது மகுடியை எடுத்து ஊதினான்.

"ஆடு பாம்பே! சுழன்றாடு பாம்பே!"

மகுடி ஒலி கேட்டுச் சீற்றுக்குக் கீழே சுருண்டிருந்த பற்கள் பிடுங்கப்பட்ட அந்த ஐந்தடிக் கருநாகம் மெல்ல எழுந்து படத்தை விரித்தபடி பஸ்சுக்குள் ஆடத் தொடங்கியது. இப்போது தான் எல்லோருக்கும் விடயம் புரிந்தது. ■



# மறு தயாரிப்பாக 'லயன் கிங்'

அடுத்த ஆண்டு ஜூலை மாதம் திரைக்கு வரவிருக்கிறது இந்தப் புதிய 'லயன் கிங்'. கடந்த வாரங்களில் வெளியாகியிருந்த இதன் முன்னோட்டக் காணொலி ஒரே நாளில் 22.46 கோடி பார்வைகளை எட்டி சாதனை படைத்துள்ளது. இதனால் 'தி ஜங்கிள் புக்' ரீமேக்கை விட மிகப்பெரிய வெற்றியை 'லயன் கிங்' ரீமேக் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


1994ஆம் ஆண்டு வெளியாகியிருந்த டிஸ்னி நிறுவனத்தின் அனிமேஷன் திரைப்படம் தான் லயன் கிங். றோஹெர் அலெர்ஸ், றொப் மிங்ஹொவ் ஆகிய இரண்டு இயக்குநர்கள் இயக்கியிருந்தார்கள். ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் கதையைத் தழுவி எடுக்கப்பட்டது. கார்ட்டூன் எனப்படுகிற இரண்டு பரிமாணங்களைக் கொண்ட அனிமேஷன் படமாக வெளியாகியிருந்தது. அந்த வருடம் வெளியான படங்களில் அதிக வசூல் செய்த படம் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தது. அதுமட்டுமன்றி 2 ஒஸ்கார் விருதுகளையும் வென்றிருந்தது. இதன் நாயகன் சிம்பாவின் நண்பர்கள் டிமொன், பும்பா இருவருக்குமான தனி இரசிகர் பட்டாளம் ஒன்று உருவானது. 90களில் 'லயன் கிங்' பார்த்து வளர்ந்த சிறார்கள் மத்தியில் பிரபலமானது. இன்றையகால அனிமேஷனில் எவ்வளவு முன்னேற்றங்கள், தொழில்நுட்பங்கள் வந்துவிட்டாலும், பாரம்பரிய அனிமேஷன் முறையான இரு பரிமாண அனிமேஷனில் உருவான 'லயன் கிங்' படமே ஆகச்சிறந்த அனிமேஷன் படம் என்று சொல்பவர்களும் உள்ளனர்.




**மறு ஆக்கம் செய்யப்பட்டு புது வடிவமாக லயன் கிங்**

1994ஆம் ஆண்டில் வெளியாகியிருந்த 'லயன் கிங்' படத்துக்கு திரையுலக வரலாற்றில் எப்பொதுமே சிறந்த ஓர் இடமுண்டு. 'லயன் கிங்' மட்டுமல்ல, டிஸ்னியின் 'சிண்ட்ரெல்லா', 'பியூட்டி அண்ட் த பீஸ்ட்', 'ஜங்கிள் புக்' என இருபரிமாண அனிமேஷன் படங்கள் பலவற்றுக்கு இரசிகர்கள் மத்தியில் என்றுமே வரவேற்புண்டு.

இந்தப் படங்களை, தனது பிரபல திரைப்படங்களை டிஸ்னி தொடர்ந்து இந்தக் காலத்துக்கு ஏற்றால் போல தொழில்நுட்பத்தில் நவீனப்படுத்தி மறுதயாரிப்புச் செய்து வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் 2016ஆம் ஆண்டில் வெளியான 'ஜங்கிள் புக்' படத்தின் மாபெரும் வெற்றி டிஸ்னிக்கு அதிக உற்சா கத்தைக் கொடுத்திருந்தது. தற்போது அதே இயக்குநர், ஜான் வ்பேவரூவை வைத்து 'லயன் கிங்' படத்தையும் மறு தயாரிப்புச் செய்திருக்கிறார்கள்.



**முன்னொட்டக் காணொலி அசத்துகிறது**

மறு தயாரிப்புக்கு உட்பட்டிருக்கின்ற 'லயன் கிங்'கின் முன்னொட்டக் காணொலி சில வாரங்களுக்கு முன்பு வெளியாகியிருந்தது. அது பரவலாக அனைவராலும் பார்க்கபட்டு அதிக பேசுபொருளாகியிருக்கிறது. 1994ஆம் ஆண்டில் வெளியாகியிருந்த படம் இரு பரிமாண அனிமேஷன் என்றால், புதிய 'லயன் கிங்', போட்டோ ரியலிஸ்டிக் அனிமேஷன் என்ற முறையில் உருவாகிறது. 'ஜங்கிள் புக்' படத்தில் மோக்லி கதாபாத்திரத்தைத் தவிர மற்ற அனைத்து விலங்குகளின் கதாபாத்தி ரங்களும் இந்த முறையில் தான் உருவாக்கப்பட்டு தத்துரூபமாக திரைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. 'லயன் கிங்' படத்தில் முழுக்க முழுக்க மிருகங்களே கதாபாத்திரங்கள் என்பதால் படம் முழுதும் இந்த முறையில்தான் எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காட்சியிலும் அனிமேஷனில் இருக்கும் துல்லியம் முன்னோட்டக் காணொலியில் கண்கூடாகத் தெரிகிறது. அசல் 'லயன் கிங்' படத்தின் பிரபலமான காட்சிகள் அனைத்தும் இந்த மறு தயாரிப்பில் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் சில காட்சிகள் தற்பொது வெளியாகியுள்ள முன்னோட்டக் காணொலியிலும் இடம் பெற்றுள்ளன. இந்த மறு தயாரிப்புப் படத்துக்கும் முன்னைய படத்துக்கு 1994ஆம் ஆண்டில் இசையமைத்திருந்த அதே ஹான்ஸ் ஸிம்மர் தான் இசையமைத்திருக்கிறார்.






## 'பென்ராஸ்ரிக் பீற்ஸ் க்ரைம்ஸ் ஒவ் க்றின்ட்லிவால்ட்'

**கதை**

முதல் பாகத்தின் முடிவில் கைது செய்யப்பட்ட க்ரிண்டல் வோல்ட், சிறையிலிருந்து தப்பித்துக்கொள்கிறார். பின்னர் தனக்கான ஓர் இரகசியப் படையை உருவாக்குகிறார். இதற்கிடையில் முதல் பாகத்தில் வரும் கிரெடன்ஸ் என்ற இளைஞனைத் தன் பக்கம் இழுக்கும் முயற்சியில் இருக்கிறார் க்ரிண்டல் வோல்ட். தான் யார், தன் தாய் யார் என்ற விடை தேடி அலையும் கிரெடன்ஸ் ஒரு கட்டத்தில் க்ரிண்டல் வோல்டைச் சந்திக்கிறார். க்ரிண்டல் வோல்ட் ஏன் கிரெடன்ஸைச் சந்திக்க விரும்பினார்? அவர் மூலம் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டாரா? என்பதே 'பென்ராஸ்ரிக் பீற்ஸ் க்ரைம்ஸ் ஒவ் க்றின்ட்லிவால்ட்'

2016ஆம் ஆண்டு வெளியான 'பென்ராஸ்ரிக் பீற்ஸ் அன்ட் வேயர் ரூ வ்பைன்ட் தெம்' படத்தின் இரண்டாம் பாகம் இந்தப் படம். ஹாரி பாட்டர் காலகட்டத்துக்கு 70 வருடம் முந்தைய கதை. எனவே படம் பார்க்க நினைப்பவர்கள் ஒருமுறை ஹாரி பாட்டர் படங்களைப் பற்றித் தெரிந்து கொண்டு செல்வது நல்லது.


**பாத்திரங்கள்**

க்ரிண்டல் வோல்டாக ஜானி டெப், இளம் வயது டம்புள்டோராக ஜூட் லா, நாயகன் நியூட் ஸ்கமண்டராக எட்டி ரெட்மெய்ன். தொய்வாகச் செல்லும் திரைக்கதையைப் பெரும்பாலும் காப்பாற்றுவது இவர்கள் தான்.

**பலம் பலவீனம்**

க்ரிண்டல் வோல்ட் சிறையிலிருந்து தப்பிக்கும் காட்சியிலிருந்து படம் தொடங்குகிறது. வழக்கமான 'ஹாரி பாட்டர்' படங்களைப் போன்ற கதைக்களம்தான். கிராபிக்ஸ் காட்சிகள், இசை, சிறப்பாக இருக்கின்றன. மற்றபடி படத்தில் வசனங்களின் ஆக்கிரமிப்பே அதிகமாக இருக்கிறது. புத்தகங்கள் முதல் படங்கள் வரை அனைத்தையும் கரைத்துக் குடித்த ஹாரி பாட்டர் இரசிகர்களுக்கு மட்டுமே இந்தப் படம் பிடிக்கும். முதல் பாகத்தில் இருந்த சுவாரஸ்யமும் நகைச்சுவைக் காட்சிகளும் இந்தப் படத்தில் குறைவு. மார்வெல், டிசி கொமிக்ஸ் படங்களைக் கொமிக்ஸ் இரசிகர்கள் மட்டுமின்றி அனைத்து இரசிகர்கள் ரசிக்க முடியும். ஆனால் இந்தப் படம் முழுக்க முழுக்க ஹாரி பாட்டர் இரசிகர்களுக்காகவே எடுக்கப்பட்ட படமாக இருப்பதால் கிராபிக்ஸுக்காகவும், விறுவிறு திரைக்கதையை எதிர்பார்த்து வந்தவர்கள் கொட்டாவி விடுவது தவிர்க்க முடியாதது.






தொடர்

தாஸ் மாஸ்ரர்

இலங்கைப் பொலிஸ் பிரிவிலுள்ள பெரும்பாலான விசாரணையாளருக்குத் தமிழ் தெரியாது. அவர்களில் பெரும்பாலானவர்கள் தமது புயங்களை நம்பித்தான் விசாரணைகளில் ஈடுபடுவார்கள். கைது செய்யப்பட்டவர் புலிகள் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தவர் என்பதாக விசாரணையை முழுமையாக முடித்து வைப்பது அவர்களுடைய துன்புறுத்தலும் வற்புறுத்தலுமாகும். இலங்கையின் புலனாய்வுப் பிரிவுகளில் முதன்மை வகிப்பது தேசிய புலனாய்வு மையமாகும். (National Investiogation Beorow NIB) இதன் தலைமையகம் கொழும்பில் இருந்தது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைத் தவிர ஏனைய எல்லாப் பொலிஸ் நிலையங்களுடனும் நேரடியான தொடர்பைக் கொண்டிருக்கும். எல்லாப் பொலிஸ் நிலையங்களிலும் பயங்கரவாத குற்றப் புலனாய்வு தொடர்பான ஒரு பிரிவு உண்டு. அது சி.எஸ்.யு. என அழைக்கப்படுகிறது. புலி என்று சந்தேகப்பட்டு ஒருவர் கைது செய்யப்படும்போது இந்தப்




# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

பிரிவில் வைத்து அடிப்படை விசாரணையை முடித்தபின் தேசிய புலனாய்வு மையத்துடன் அந்தப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் தொடர்பு கொண்டு தாம் வைத்திருக்கும் நபர் பற்றிய தகவல்கள் ஏற்கனவே அவர்களிடம் உண்டா என்பது பற்றித் தேடுகின்றனர். (கைது செய்யப்பட்டவரின் ஒளிப்படம் உடனடியாகவே சகல பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்). பொதுவாகவே எந்தப் பொலிஸ் பிரிவிலாவது ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை ஒளிப்படம் எடுக்கும் நிலையம் அதைச் சகல புலனாய்வுப் பிரிவுக்கும் அனுப்பி வைக்கும்.

• • • •

நான் கண்டி சிறப்பு விசாரணைப் பிரிவுப் பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது நூற்றுக்கணக்கான ஒளிப் படங்களை எனக்குக் காட்டினார்கள். அதில் ஒன்று விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் தலைவர் பொட்டு அம்மானுடையது. சாறத்துடன் அவர் ஓரிடத்தில் குந்தி இருக்கின்ற படம் அது. அதைக் காட்டி இது இயக்கத்தில் முக்கிய நபர் ஒருவரின் படம். யார் என்று சொல்லு என்றார்கள். 'தெரியாது' என்றேன். பின்னர் அவர்களாகவே அந்தப் படத்தின் பின்புறத்தில் பொட்டு அம்மான் என்று எழுதியிருப்பதைக் காட்டினார்கள். தலைவர் பிரபாகரனின் படத்தைக் காட்டி 'இவரைத் தெரியுமா'? என்று கேட்க நான் சொன்னேன் 'இது பிரபாகரன்' என்று. 'பார்த்தாயா உனக்கு இதைக் காட்டியவுடன் யாரென்று தெரிகிறது. அது நீ அவரைச் சந்தித்தபடியால் தானே' என்றார். நான் கூறினேன் 'பத்திரிகை பார்க்கும் எல்லோருக்கும் இந்தப் படம் நன்கு தெரியும். இதில் அதிசயப்பட என்ன இருக்கிறது?" என்று.

இவ்வாறான தேடுதல் முறையால் சந்தேகத்தின் பேரில் கைதாகின்ற விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட பலர் தாம் கைது செய்யப்பட்ட விடயத்தில் அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் முக்கிய வழக்குகளில் மாட்டிக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அதேவேளை புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலர் சந்தேகத்தின் பேரில் கைதாகி ஏனைய புலனாய்வு மையங்களால் உறுதிப்படுத்த முடியாது பொலிஸ் நிலையத்தி லிருந்து மிகச் சாதாரணமாக விடுதலை யாகி விடுகின்றனர். பின்னர் ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம் கழிந்துதான் இவ்வாறு ஒரு முக்கிய நபர் தப்பிப்போயுள்ளார் என்பது அவர்களுக்குத் தெரியவருகிறது. கேள்விப்பட்டதும் பொலிசாருக்கு அது ஒரு தலைகுனிவான விடயமாகப் போய்விடுகிறது. இவ்வாறான அனுபவங்களின் அடிப்படையில் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தால்கூட வேண்டும் என்றே பல நாள்கள் வைத்திருந்து அவரது படத்தை எல்லாப் புலனாய்வுப் பிரிவுகளுக்கும் அனுப்பி உறுதிப்படுத்துகின்றனர். இவ்வாறான அனுபவங்களின் பின்புதான் இலங்கையின் புலனாய்வுத் துறையினரால் புலிச் சந்தேக நபராக ஒருவர் கைது செய்யப்படும் போது தடுப்புக்காவல் உத்தரவை (டிற்றென்சன் ஓடர்) நீதிபதியிடம் பெற்றுக் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களாவது அந்த நபரைத் தடுத்து வைத்து விசாரணை நடத்துகின்றனர். உண்மையில் அவர் புலி உறுப்பினராகவோ புலிகளுடன் தொடர்புபட்டவராகவோ இருந்தால், அவரை அடையாளம் கண்டுகொள்வதற்கு இந்தக் கால அவகாசம் போதுமானதாக இருக்கும்.

• • • •

ஒரு நபரைப் பயங்கரவாதத் தடைச்சட்டம் அல்லது அவசரகாலதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யும்போது குறைந்தபட்சம் ஓர் உதவிப் பொலிஸ் அலுவலர் (சப் இன்ஸ்பெக்டர்) அந்தக் குழுவுக்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்பதும் ஒருவரைக் கைது செய்யும்போது அதற்கான பிடியாணையை வீட்டில் உள்ளவர்களிடம் காட்டவேண்டும் அல்லது கொடுக்கவேண்டும் என்பதும் இலங்கைச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள போதும் இந்த நடைமுறை சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய எல்லா இடங்களிலும் இராணுத்தால் கைது செய்யப்பட்ட பலரைக் கடுமையான சித்திரவதைகளுக்குள் உட்படுத்திவிட்டு இராணுவம் பொலிஸாருடன் இணைந்து செயற்பட்ட, விடுதலைப் புலிகளால் புறமொதுக்கப்பட்ட தமிழ் இயக்கங்கள் சார்ந்து புலனாய்வு வேலைகளில் ஈடுபடுபவர்களிடம் கையளித்துத் துன்புறுத்தப்படுகின்றனர். பின்னர் இறுதியாக அருகிலுள்ள பொலிஸார் அல்லது கொழும்பு ரிஐடி பிரிவினரிடம் (பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களம்) ஒப்படைக்கப்படுகின்றனர்.

பலரது எழுமாற்றான கைதுகள் பற்றி இலகுவில் வெளித்தெரிவதில்லை. மனித உரிமைக் குழு, பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றுக்குத் தகவல் வழங்கி, அவர்களின் உதவியுடன் கைது செய்யப்பட்டவர்கள் குறித்துக் கேள்வி எழுப்பினால், குறிப்பிட்ட பொலிஸ் அல்லது இராணுவப் பிரிவுகள் அவ்வாறான எவரும் தம்மிடம் இல்லை என்று கூறுவதுமுண்டு. இதைவிட வவுனியாவிலோ, மட்டக்களப்பிலோ விடுதலைப் புலிகளால் புறமொதுக்கப்பட்ட தமிழ் இயக்கங்களால் நடாத்தப்பட்ட சித்திரவதை முகாம்களில் இருப்பவர்கள் பற்றி மனித உரிமைக் குழுவுக்கோ, பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கோ தெரிந்திருப்பதில்லை. அது சட்டபூர்வமற்ற தடுப்புமையமாக இருப்பதால் தமக்குத் தெரியாது எனக் குறிப்பிட்ட நபரை உள்ளே வைத்துக்கொண்டே அந்த அமைப்புக்களாலும் சொல்லிவிட முடியும். இவ்வாறான சித்திரவதை முகாம்களில் உள்ள கைதிகளை மனித உரிமைக் குழுவிடமோ, பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்திடமோ காட்ட முடியாத அளவுக்குச் சித்திரவதையின் போது உடற் சிதைவுகளுக்கு உட்படுத்தியிருப்பார்கள்.

இவ்வாறான கோலத்தில் தடுத்து வைத்திருப்பவர்கள் காட்டப்பட்டால் சித்திரவதைப் படுத்தியவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும் என்ற பயம் அவர்களுக்கு உண்டு. அதேவேளை ஒருவரைத் தங்களிடம் இருக்கிறார் என ஒத்துக்கொண்டு, பின்னரான சித்திரவதைகளுக்கும் திட்டமிட்டு இருப்பதால், அப்போது அந்தக் குறிப்பிட்ட நபர் இறந்துவிட்டால் நிலமை இன்னும் மோசமாகிவிடும்.

யாருக்கும் தெரியாமல் தடுத்து வைத்து சித்திரவதை செய்து இறந்துவிட்டால் அப்பிணத்தை எரித்து விடுவதோ புதைத்து விடுவதோ இலகுவானது. இவ்வாறு அடையாளமின்றிப் போனவர்கள் தான் இன்றைய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலை நிரப்பிக்கொண்டி ருப்பவர்களில் பலர்.

> ஒரு நபரைப் பயங்கர வாதத் தடைச்சட்டம் அல்லது அவசரகாலதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யும்போது குறைந்தபட்சம் ஓர் உதவிப் பொலிஸ் அலுவலர் (சப் இன்ஸ்பெக்டர்) அந்தக் குழுவுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதும் ஒருவரைக் கைது செய்யும்போது அதற்கான பிடியாணையை வீட்டில் உள்ளவர்களிடம் காட்ட வேண்டும் அல்லது கொடுக்க வேண்டும் என்பதும் இலங்கைச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள போதும் இந்த நடை முறை சரியாகப் பின்பற்றப்படுவதில்லை.

புலிகளுக்கு எதிரான குறிப்பிட்டதொரு குழுவைச் சேர்ந்தவரும், கைதுகள் விடயத்தில் மும்முரமாகச் செயற்பட்டவருமான ரமணன் என்பவருடன் மூன்று பேர் 2001ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் நடந்த கரும்புலித் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டிருந்தனர். அந்தச் சம்பவம் நடைபெற்ற பின்பு நான் ஒருதடவை மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தேன். அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் படத்தைச் சிறைச்சாலையின் முக்கியமில்லாத பகுதியொன்றில் ஒட்டியிருந்தார்கள். ஏனெனில் அவர்களால் துன்புறுத்தப்பட்ட பலர் மட்டக்களப்புச் சிறையில் இருந்தார்கள். ' நாங்கள் விடுதலை ஆகாவிட்டாலும் பரவாயில்லை அவங்கள் செத்தது போதும்' என்று அவர்கள் கூறினார்கள். இவ்வாறு கைது செய்யப்பட்டுச் சட்டபூர்வமற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் ஒரு வருடம் கழிந்தபின்புகூட சி.எஸ்.யு பொலிஸ் பிரிவில் கையளிக்கப்பட்டிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படு கின்றனர்.

உண்மையில் அவ்வாறான நபர்களைப் பொறுப்பேற்கும் சட்டபூர்வமான அதிகாரம் 'சி.எஸ்.யு'க்கு இல்லாதபோதிலும், புலனாய்வுத் துறையில் உள்ள பொலிசார் அல்லது இராணுவத்தினர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் 'வரமாகப் பெற்ற' தன்னிச்சையான அதிகாரங்களைப் பயன்படுத்தி இவ்வாறான நடவடிக்கைகளைமேற்கொள்கின்றனர். அவர்களால் கையளிக்கப்பட்டபின்னர், எவரிடம் கையளிக்கப்படு கின்றது என்பதைப் பார்த்தால், 'மீன் கரைந்து குளம்புக்குள் போன நிலைதான்'. இவ்வளவு துன்புறுத்தல்களுக்குப் பிறகு சிங்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கும். அவர்கள் குறிப்பிட்ட சந்தேக நபரை நீதிவான் நீதிமன்றில் முன்னி லைப்படுத்துவர். காலவரையறையற்ற தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் சிறையில் தடுத்துவைப்பர்.

(தொடரும்)

தொகுப்பு

அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## அவரே தீர்மானிக்கட்டும்!




அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகியவற்றின் உறுப்பினர்கள் இணைந்து அண்மையில் கல்முனை எஸ்.எல்.ஆர்.மண்டபத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

தவிர, "இதுவரைகாலம் சபையின் எட்டு அமர்வுகள் இடம்பெற்றுள்ள நிலையில், ஏழு அமர்வுகள் பெரும் களோபரத்துடன் முடிவுறுத்தப்பட்டன. இதற்கு யாருடைய தவறு காரணம்? என்பது குறித்து மாநகர முதல்வர் சுய விமர்சனம் செய்து பார்க்க வேண்டும். சர்வாதிகாரப் போக்கை முதல்வர் கைவிட்டு கட்சி பேதமின்றி சகலரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். அது விதமே எதிர்காலத்தில் அவர் முன்னெடுக்கும் வினைத்திறனான மக்கள் சேவைக்கு ஆதரவளிக்க நாம் தயாராகவே உள்ளோம்." என்றும் கருத்துரைத்துள்ளார்.

"கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வுகளை எதிர்காலத்தில் அமைதியான முறையில் நடத்துவதற்கும், மக்கள் சேவையை பொருத்தமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் மாநகர முதல்வரின் சிறந்த செயற்பாடுகள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். இது குறித்து கல்முனை மாநகர முதல்வர், சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தீர்மானிக்க வேண்டும்." என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரும், ரெலோ அமைப்பின் உப தலைவருமான ஹென்றி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சியாக விளங்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, சாய்ந்தமருது சுயேட்சைக்குழு,

**நாடாளுமன்றத்திலும் குழப்பம், உள்ளூராட்சி மன்றங்களிலும் இணக்கமின்றிய கலக்கம்!**




## சமாதான தினம்

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தால் பன்னாட்டு சமாதான தின நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கல்முனை வலய சமாதானக் கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றசீன் தலைமையில் நிந்தவூர் அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை அஷ்ரப் மண்டபத்தில் முதன்மை நிகழ்வு இடம்பெற்றதுடன், கல்முனை வலயத்திலுள்ள 65 பாடசாலைகள் நிகழ்வில் பங்குகொண்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல், சமாதானக் கல்வியின் முக்கியத்துவங்களை எடுத்து விளக்கியதுடன், சமாதனம் மூலம் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் மலரும் எனத் தெரிவித்தார். நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான மாண்வர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**நாடு இன்று வேண்டி நிற்பது சமாதானமே!**

## என்னதான் இரகசியமோ?

முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகள் இன்றைய அரசியல் குழப்பநிலையில் எடுத்துள்ள திடமான நிலைப்பாடு தொடர்பில் தென்கிழக்கு பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் சிலாகித்துப் பேசப்படுவதுடன், விமர்சனங்களும் மேலோங்கி வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் முதன்மை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குரிய தீர்வு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி உறுதிமொழிகளைப் பெற்றதன் பின்னரே ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையிலே மேற்படி இரு கட்சிகளும் முஸ்லிம்கள் தொடர்பில் அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு உறுதியான முடிவுகளை கண்டுகொண்டதன் பிற்பாடு தான் ரணில் பக்கம் திடமாக நிற்கிறார்களா? என்பதை அறிய முஸ்லிம்கள் விருப்புக் கொண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேட்பாளர் நியமனங்களையும், அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொள்வதே குறித்த இரு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களதும் பிரதானமான நோக்கமாக இருக்கலாமென மற்றோர் தரப்பினர் கருத்துக்களை வெளியிடத் தவறவில்லை. இந்தநிலையிலே குறைந்தது கரையோர மாவட்டத்தையாவது இவர்கள் பெற்றுத் தருவார்களா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் இயல்பாகவே தோன்றி மறைகிறது.



## 100 வீதம் ஆதரவு!

"தன்னிச்சையான போக்கைக் கைவிட்டு வினைத்திறனுள்ள சபையாக கல்முனை மாநகர சபையை முதல்வர் வழிநடத்த முன்வந்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நூறு வீத ஆதரவை வழங்கும்." என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் பொன்.செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் எட்டாவது மாதாந்த சபை அமர்வில் உரையாற்றும் போதே இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், "எம்மை உதறித்தள்ளிவிட்டு அல்லது விலக்கி வைத்துவிட்டு சபையை முன்கொண்டு செல்லமுடியுமா?" எனக், கேள்வி எழுப்பியதோடு, அனைவரும் ஒருமிதமாக இணைந்துகொண்டு மக்களுக்குச் சேவை யாற்றுவதையே விரும்புவதாகவும், அதற்கு ஆதரவு தரத் தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**இப்படிக் கூறியும் ஒற்றுமையீனம் தகுமோ?**

## சேவை மனப்பாங்கு!

"சேவை மனப்பாங்கும், கடமை உணர்வுடன் கூடிய செயற்திறனும் கொண்டவராக நிந்தவூர் சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி தஸ்லீமா பஷீர் திகழ்கின்றார். திணைக்கள உயரதிகாரிகளிடையே ஏனையோருக்கு அவர் முன்னுதாரணமானவர்."

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், மருத்துவருமான ஏ.எல்.அலாவுதீன் தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் பாடசாலைக்கிடையே நடத்தப்பட்ட "டெங்கு அற்ற பாடசாலை" போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கான பரிசளிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக்




கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

**நல்லது செய்வோரை இப்படித் தான் பாராட்ட வேண்டும்!**

## நான் அவனல்ல!

"வெறுமனே அலுவலகக் கதிரைகளில் இருந்து கொண்டு கடதாசிகளில் கையெழுத்திடும் வலயக் கல்விப் பணிப்பாளராக நான் இருக்க மாட்டேன். மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தை வினைத்திறனுள்ள கல்வி வலயமாக மிளிரச் செய்ய அர்ப்பணிப்புடன் பாடுபடுவேன்."

இவ்வாறு மட்டக்களப்பு மத்திய வலயக் கல்வி அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் உமர்மௌலானா கூறுரைத்துள்ளார். தவிர, பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு என்னை விருந்தினராக அழைப்பதானால் முன்னரே சந்தித்து அனுமதி பெறவேண்டும் எனவும், அவ்வாறு அனுமதி பெறாமல் அழைப்பிதழில் பெயர் போடப்படுவதைத் தவிர்க்க வேண்டுமெனவும் கல்வி அதிகாரிகளுக்கு இடித்துரைத்துள்ளார்.

**பெயரும் புகழும் எத்தனை நாள்களுக்கு?**

அந்தத் திருமண மண்டபம் களை கட்டியிருந்தது. ஆனால் அது திருமணத்துக்கான களைகட்டல் அல்ல. பூமி நிறுவனத்தின் கூட்டத்துக்காக. சந்தைப்படுத்தலின் மகிமையை அதிகமானவர்களுக்கு உணர்த்தி அதன் மூலம் கார், பெரிய வீடு, வெளிநாடுகளுக்கான சுற்றுலாப் பயணம் எனச் சிலரை வசதியாக வாழ வைத்துக் கொண்டிருந்தது அந்த நிறுவனம். அந்த நிறுவனத்தின் முதன்மையான சந்தைப்படுத்தல் முகவராக இருந்து பலரைத் தனது சந்தைப்படுத்தல் உத்தியால் மடக்கிப் பெரும்புள்ளியானவன் பாலா. பாலா என்றால் பலருக்கும் அவரைத் தெரியாது. 'பிரமிட் பாலா' என்றால் அனைவருக்கும் அவரை இலகுவாகத் தெரிந்துவிடும். அந்தளவுக்கு அந்த நிறுவனத்தின் மூலம் பலரை ஏமாற்றி, மிதித்து முன்னேறியவர் தான் இந்தப் பாலா.

அவர் ஏமாற்றித்தான் வாழ்கிறார் என்பது பலருக்குத் தெரியும். இருந்தும் ஆசை எவரை விட்டது? ஈசல்களாகப் பாலாவிடம் மாட்டிக் கொள்கிறார்கள். இன்றும் புதிதாகச் சிலரைச் சேர்ப்பதற்காக அந்த வியாபார நிறுவனம் பேராசை பிடித்தவர்களுக்கு ஆசைகளைத் தூண்டும் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தது. அனைவரதும் கவனமும் பாலாவின் வருகையை நோக்கியிருந்தது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் கரனும் சிவாவும் அங்கு வந்திருந்தார்கள். இருவரும் மாணவர்கள். தமது குடும்பத்தின் வறுமையைப் போக்குவதற்காகச் சிறு சிறு வேலைகளைச் செய்து குடும்பத்துக்கு உதவி வருபவர்கள். உழைக்காமல், நோகாமல் பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசை இவர்களையும் பற்றிக் கொண்டது. இல்லை பற்ற வைத்திருந்தார் பாலா. ஏற்கனவே ஆசையை ஊட்டிக் கூட்டத்துக்கு வருகை தர வைத்துப் பலருக்கு முன்னால் அவர்களைச் சேர்த்தால் அவர்களுக்குப் பின்னால் பலர் தம்முடன் சேர்ந்து கொள்வார்கள் என்ற யோசனையுடன் பாலா திட்டமிட்டிருந்தார். கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான ஆயிரத்து 500 ரூபாப் பணத்தைக் கட்டியிருந்தார்கள் சிவாவும் கரனும்.

• • •

திருமண மண்டபத்துக்குள் வெள்ளைநிறச் சொகுசுக் கார் நுழைந்தவுடன் கூட்டத்தில் சலசலப்பு ஏற்படத் தொடங்கியது. பாலா தம் பிடித்து கெத்தாக இறங்கி நடந்து வருவதைப் பார்ப்பதற்கு ஒரு குட்டியானை அசைந்து அசைந்து வருவதைப் போன்றிருந்தது. பிரமிட் நிறுவன முகாமையாளர் மிகுந்த மரியாதையுடன் பாலாவை வரவேற்று, அறிமுகப் படுத்தி வைத்து மேடையில் பேசுவதற்காகப் பாலாவை அழைத்துக் கொண்டார்.

பாலா தான் முன்னைய வாழ்க்கையில் துன்பப்பட்டதையும் தற்பொழுது எப்படி வசதியாக வாழ்கிறார் என்பது பற்றியும் மிகவும் உருக்கமாக உரையாற்றிக் கொண்டிருந்தார். முன்னால் இருந்தவர்களுக்குத் தங்களை இரட்சிக்க வந்த தேவதூதனைப் போன்று நெற்றியில் விபூதிக்குறியுடன் காட்சி தந்தார். தமது நிறுவனம் சந்தைப்படுத்தலை மத்திய தர வர்க்கத்தினரை இலகுவாக மேற்தட்டு பணக்காரராக மாற்றும் வகையிலேயே அமைந்திருக்கிறது என்று உரையாற்றினார் பாலா. உரையாற்றிய வரை இடை நிறுத்திய கரன், "இதனால் உங்களுக்கென்ன இலாபம்?" என்று நேர்றுப் பாலா சொல்லித் தந்தது போல் கேள்வி. கேட்டான். இவ்வளவு நேரமும் மந்திரித்து விட்டவர்களைப்போல் இருந்தவர்கள், "அது தானே இதில் அவர்களுக்கு என்ன இலாபம்?" என்பதைப் போன்ற பார்வையை வீசப் பாலா ஒரு வசீகரச் சிரிப்புடன் "இங்கேதான் எங்களது வியாபாரத் தந்திரமும் மனித நேயமும் இணைந்திருக்கின்றது" என்றவாறு அவர்களைப் பார்த்தார். எல்லோரும் ஆர்வமாகத் தன்னுடைய கதையைக் கேட்பதற்கு இருப்பதையும் ஆசையுடன் கண்கள் மின்னுவதையும் அவதானித்துக் கொண்டார்.

"எங்கள் பொருள்களை சந்தைப்படுத்துவதற்காக விளம்பரம் செய்வதற்கு எமது நிறுவனம் யோசித்தபோது விளம்பரத்துக்காக ஒரு கிரிக்கெட் வீரரையோ, அல்லது ஒரு நடிகை, நடிகரையோ தெரிவு செய்தால், அவர்களுக்கு வழங்க வேண்டிய பணம் மிகப் பெருந்தொகையாக இருக்கும். அந்தப் பணத்தை ஏன் சாதாரண மக்களைப் போகச் செய்ய முடியாது என யோசித்தபோதுதான். இந்தத் திட்டம், பல பொருளாதார வல்லுநர்களால் எங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. எங்களுக்கு வியாபாரமும் ஆகின்றது, உங்களுக்குப் பணமும் கிடைக்கின்றது. இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்டால் அதன் பின் நீங்களும் ஒரு முதலாளிதான். கீழே இருப்பவர்கள் தொழிற்படத் தொழிற்பட உங்களுக்குக் கொமிசன் வந்துகொண்டே இருக்கும். என்னைப் பாருங்கள் ஒரு வருடத்துக்குள் வசதியான

# பிரமிட் பாலா

> பாலா தான் முன்னைய வாழ்க்கையில் துன்பப்பட்டதையும் தற்பொழுது எப்படி வசதியாக வாழ்கிறார் என்பது பற்றியும் மிகவும் உருக்கமாக உரையாற்றிக் கொண்டிருந்தார். முன்னால் இருந்தவர்களுக்குத் தங்களை இரட்சிக்க வந்த தேவதூதனைப் போன்று நெற்றியில் விபூதிக்குறியுடன் காட்சி தந்தார்

சிறுகதை

மானிப்பாய் சுதன்



வீடு, கார், வெளிநாட்டுப் பயணங்கள் என வாழ்க்கை உயர்ந்துள்ளது" பாலாவின் பேச்சு அங்குள்ள எவரொருவரையும் வேறு திசையில் சிந்திக்கவிடாது பாலா சொல்வது தான் சரியென ஏற்றுக் கொள்ள வைத்தது.

"என்னை இந்த அருமையானதிட்டத்துக்குள் அறிமுகப்படுத்தி வைத்தவர் ரமணியம்மா. எல்லோரும் சொல்கிறார்கள் இது சட்டரீதியற்றது என்று ஆனால் ரமணியம்மா அரசில் உயர் பதவியில் இருப்பவர். சட்டரீதியற்றது எனின் அவர் இதில் இருப்பாரா? என் மூலமாக இதில் சேர விருப்பமில்லாதவர்கள், பயப்படுபவர்கள் ரமணியம்மாவினூடு சேருங்கள் ரமணியம்மாவிடம் நீங்கள் சேர்ந்தாலும் ஊரவன் என்ற வகையில் நான் பொறுப்பு. ஏதேனும் பிரச்சினை என்றால் நான் தருவேன் எங்கள் பணத்தை. பணம் இல்லாதவர்கள் உங்கள் பொருள்களை அடகு வைத்து நம்பிச் சேருங்கள். மோட்டார் சைக்கிளை அடகு வைத்தால் நீங்கள் ஒருபோதும் அந்த மோட்டார் சைக்கிளைத் திருப்பி எடுக்கமாட்டீர்கள்.. கார் ஒன்றைத்தான் புதிதாக எடுப்பீர்கள்"

பாலாவின் பேச்சைச் செவிமடுத்துக் கொண்டு கூட்டத்தில் இருந்த கம்பஸ் பெடியன் ஒருத்தன் தனது ஸ்மார்ட் போனில் ஏதோ டி.எம்.ரி. என்ற அப்பிளிக்கேசனைப் பயன்படுத்தி பாலா வைத்திருக்கின்ற சொகுசுக் கார் பாலாவுக்குச் சொந்தமானதல்ல அது வேறு ஒருவருடைய பெயரில் பதிவு செய்யப்பதாக அந்தக் கூட்டத்தாரிடையே கூறினான். கூட்டத்தில் இருந்த ஏனையவர்கள் அவனை ஒரு மாதிரிப் பார்த்தார்கள். "எங்களுக்கு நம்பிக்கையும் தெளிவும் இருக்கு. நீ உன் வேலையைப் பார் என்றார்கள்..." இதனை அவதானித்த பாலாவும் சிரித்தபடி, "படித்து முடித்தபின் வேலைக்காகக் கச்சேரியின் முன்னால் இருக்கும்போதுதான் தம்பிக்கு விளங்கும்" என்று சொல்ல கூடியிருந்த எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

• • •

கரன் தன்னுடைய மோட்டார் சைக்கிளை அடகு வைத்துப் பணத்தைக் கொடுக்கச் சிவா கூலி வேலை செய்து குருவி சேர்த்த மாதிரிச் சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கொடுக்க இருவருக்கும் சனி மாற்றம் தொடங்கியது. ஊரெல்லாம் நடக்கும் கூட்டங்களில் பங்கு கொண்டு புளகாங்கிதம் அடைந்தார்களே தவிர, உழைத்துச் சாப்பிட்ட அவர்களால் மற்றவர்களை வார்த்தைகளால் ஏமாற்றி இந்தத் திட்டத்துக்குள் சேர்க்க முடியவில்லை.

இப்படிப் பல மாதங்கள் சென்ற நிலையில் தாம் ஏமாற்றப்பட்டதை மெல்ல மெல்ல உணரத் தொடங்கினர். பாலாவிடம் இருந்த சொகுசுக் காரும் காணாமல் போயிருந்தது. ஒருநாள் பாலாவிடம் போய்த் தங்களது காசைத் திருப்பித் தரச் சொல்லிக் கேட்டனர்.

"டேய் நீங்கள் என்ன லூசுகளா? நீங்கள் தந்த பணத்துக்குத்தான் அரிக்கன் லாம்பு ஒன்று பற்றுச்சீட்டுடன் நிறுவனம் தந்துவிட்டதே. பிறகெப்படிப் பணத்தைத் திருப்பிக் கேட்பீர்கள்?"

"என்ன அண்ணை சொல்லுறீங்கள்...? நாங்கள் கொடுத்தது அறுபதாயிரம் ரூபா. அரிக்கன் லாம்பு நூற்றைம்பதோ? இரு நூறோ?"

"அதுதானப்பன் வியாபாரம்! நீங்கள் சும்மா யிருந்து பணக்காரன் ஆகலாமென்று யோசிச்சா?"

"அப்ப எங்கடை காசுக்கு நீங்கள் பொறுப்பு எண்டு சொன்னீங்கள்?"

"அது அண்டைக்கு முதல்நாள் இரவு அவங்கள் தந்த சாராயம் பேசியிருக்கும்... நீங்கள் என்னடா முட்டாள் பசங்களாக இருக்கிறீர்கள்? வெறியில பேசுறதுக்கும் சும்மா பேசுறதுக்கும் வித்தியாசம் தெரியாமல்? பேப்பர் படிக்கிறதில்லையே உந்த வியாபாரம் எல்லாம் சட்டரீதியற்றது என்று சட்டரீதியாக உங்களை மாதிரி நடுத்தர வர்க்கத்தால் போகா முடியாதென்றும் போட்டிருக்கிறாங்கள். மத்திய வங்கியாலும் அங்கீகரிக்கப்படாததாம். நல்ல காலம் நான் கொஞ்சக் காசு பார்த்திட்டன்... உங்க கனபேர் அரிக்கன் லாம்போட செம்பு விழுங்கினவை மாதிரித் திரியினம் என்னை ஒருக்காச் சிங்கப்பூருக்குக் கூட்டிக் கொண்டு போனவங்கள். அதிலை கொஞ்சக் காசு செலவழிஞ்சு போட்டுது. அது பரவாயில்லை அதுக்குப் பிறகு சலவாசலிலை ஓர் அரிப்பு வந்தது அதுதான் நாலுமாசமா அப்படியே அரிச்சுக் கொண்டிருக்கு... அதுக்குள் நீங்க வந்து... போங்கடா உதுகளை வெளியில சொன்னா உங்களுக்குத்தான் வெட்கம்"

கரனுக்கும் சிவாவுக்கும் பாலாவின் கதையைக் கேட்கத் தலைசுற்றியது. "இதுதான்டா அன்றைக்கே சொல்லியருக்கிறர் அடைவு வைக்கிற மோட்டார் சைக்கிளைத் திருப்பி எடுக்கமாட்டியள்" என்றபடி கரன் அழத் தொடங்கிவிட்டான்.

"டேய் இதுகளைப் பற்றி என்னைப் பற்றி வெளியில யாரோடையும் கதைத்தால் உங்களைப் பொலிசில் மாட்டி விட்டிடுவன். பேசாம போங்கோ... பால்ச் சங்கத் தலைவரிட்டையும் கதைச்சு உங்களை மாட்டுப் பாலை எடுக்கவிடாமலுக்குப் பண்ணிப்போடுவன்" என்றவாறு லீசிங்கில் எடுத்த 'சுசுக்கி மாதிரி' யில் பறந்தார் பாலா.

• • •

கரனும் சிவாவும் தங்களுடன் இந்தத் திட்டத்தில் சேர்ந்த தெரிந்த சிலரைச் சென்று அவர்களை விசாரிக்கத் தொடங்கினர். "நான் கடைசியில உதிலை சேரவில்லைத் தம்பி" என்று ஏமாற்றத்தை வெளியில் சொல்ல வெட்கப்பட்டுப் பொய் சொன்னவர்களும், "ஓம் தம்பி என்ன செய்யிறது? ஏமாத்திப் போட்டாங்கள்... போனது போகட்டும் பேசமா விடுங்கோ" என்றவர்களும், "உதை வெளியில் சொன்னால் எங்களுக்கு அவமானந்தான் மிஞ்சும்" என்றவர்களும், "என்ன செய்ய வெட்கங்கெட்ட வேலை... கிரகநிலை சரியில்லாமப் போச்சுது..." என்றவர்களும், "ஊர் கெட்டுக்கிடக்கு உவங்கள் தரவழியோட பகைச்சுக் கொண்டு ஏன் வீண் சோழி..." என்றவர்களும், இன்னொருவர் ஒரு படி மேலே போய் "அவங்களுக்குக் கெட்டித்தனம் இருக்கு எங்களுக்கு அந்த வாய் வல்லமை இல்லை" என்றுமாகத் தங்களுடைய ஏமாற்றங்களையும், அவற்றை வெளியே காட்டிக் கொள்ளக்கூடாது என்ற கெட்டித் தனங்களையும் கொட்டித் தீர்த்தனர். கரனும் சிவாவும் பொடிநடையாகக் கூலி வேலைக்குச் சென்றுவரத் தொடங்கிய போது. விடயமறிந்த ஊரார் வாய் மெல்லத் தொடங்கினர்.

# மழைக்காலக் குறிப்புக்கள் ....

கவிதை

வேலணையூர் தாஸ்

1 இந்த மழைக் கால வானத்துக்கு உன் கூந்தலின் கறுப்பு.

2 மழைக்குத் தாயின் கருணை... காதலியின் உடற்சூடு... கடவுளின்தூய்மை... என்றும் கரையாத நீர் வண்ணம்

3 வானிலை அறிவிப்பு ஏதுமின்றிக் கனவினில் பெய்கிறது மழை... ஒளிரும் மின்னலில் விட்டு விட்டுத் தெரிகிறது உன் அழகு... குளிரஞ்சி உன் மூச்சில் காய்கிறேன்... உன்கூந்தலைப் போர்வையெனப் போர்த்துகிறேன்.

4 மழை ஓய்ந்திருக்கிறது. குளக்கரையில் தவளைகளின் சங்கீதம் தொடங்கி விட்டது... அது சரி இது என்ன ராகம்? சுதா ரகுநாதனைக் கேட்க வேண்டும்.

5 மழை வா வெயில் போ... மழை வா வெய்யில் போ..., சொல்லிக்கொண்டிருக்கும்போதே வந்துவிட்டது மழை. இனி என்ன செய்வது? மழைக்குத் தேநீரும் பிஸ்கற்றும் கொடுக்க வேண்டியது தான்.

6 வானிறங்கி மண்தழுவிப் பெய்கிறது மழை... காய்ந்திருந்த வேர் நனைந்து தளைத்தெழுகிறது கோரை... காலைப் பனிநனைந்து களிக்கிறது. நாளைப் பொழுதும் விடியுமென நினைக்கிறது .
அதை வேரோடு கிள்ளியெடுக்கிறான் சித்த வைத்தியன் காய்ச்சல் குடிநீருக்காக.

7 பஞ்சணையில் போர்த்திப் படுப்போர்க்கு மழை இனிது. ஓட்டைக்குடிசையில் வாழ்வோர்க்கு மழை கொடிது.
ம்ம் நீரின்றி வாழாதிவ்வுலகு.


8 திடீரெனப் பெய்கிறது மழை. சூரியனும் அருகில் நின்று பார்க்கிறது. ஒரு குழந்தை நனைந்தபடி ஓடி வருகிறது. நீங்கள் என்றால் ஓடிச்சென்று அதைத் தூக்கியிருப்பீர்கள் நான் இந்தக் கவிதையை எழுதிக்கொண்டிருக்கிறேன்.



# அதி உயர் கொண்டாட்டத்து மேடைகள்

மேடை - 09

தையிட்டி அ.இராசதுரை



"அட நாசங்கட்டு... உத்தப் பிரளுவான்... மறக் காமலுக்கு பேந்துமல்லோ வந்துவிட்டான்" தமது தொங்குபறிவுப் படலையோடு முட்டிய படியே நிற்குமந்த ஜே.பியின் காங்கேசன்து றைச் சிவில் அலுவலகத்து வாகனத்தை இந்த விடியக் காலத்தாலையில் கண்டுவிட்ட பொல்லாத மலாரடியில் வெட்காளிப்பில் கரடியார் இப்படிக் கத்தித் தொலைத்தும் விடுகின்றார்... வீடு போ போ... என்கிறது காடு வா வா... என்கிறது பாணியில்?

"இந்தாரும் கந்தையர் அண்டைக்கிக் கதைச்சதெல்லாம் வடிவா ஞாபகமிருக்குத்தானே... இண்டைக்குப் புதன் கிழமை... நாளண்டைக்கி வெள்ளிக்கிழமை காலமை ஒம் பதரை மணிக்குச் செஞ்சிலுவைக் கப்பல் காங்கேசன்துறை ஹாபறிலையிருந்து இங்கைத்தையில் அடுத்த பாச்சிலாக் களோடை வெளிக்கிடுது... வெள்ளிக்கிழமை எட்டு மணிக் குள்ளை சாமான், சக்கட்டோடை வெளிக்கிட்டு ரெடியா நில்லுங்கோ... உங்களை ஹாபரடிக்குக் கொண்டு வாற துக்குச் செஞ்சிலுவை வாகனம் இஞ்சை வரும்..."

இவ்வளவு அதிமுக்கிய செய்தியையும் படபடவென்று ஒப்பு வித்துவிட்டுக் கரடியாரின் ம்மாமென்ற அடுத்த கதைக்குமி டம் வைக்காத முறையில் ஜே.பி புத்தியாக வாகனத்துக்குள் சட்டுப்பொட்டென்று ஏறிவிட வாகனம் விண்கூவிக் கொண்டே பறந்துவிடுகின்றது.

போன வாகனம் இதுவரையில் அந்த ஸ்பொட்டை அடைந் துமிருக்கும்... கரடியார் இன்னும்தான் அந்த நின்ற இடத் தைவிட்டு ஒரு மகாணியளவு தன்னும் அசையவில்லை, அரக்கவில்லை. எதுவுமே செய்வதறியாது... ஒரேயடியாய் றாண்ஸ்போமர் வெடித்து முழு லைனும் பியூசாகிவிட்ட மின் சாரமாய் ஓர் இருட்டடித்துவிட்ட இருள் சூழ்ந்த நிலையில் நின்று கொண்டிருந்தார்...

◆ ◆ ◆

"ஏனப்பா உனக்கு வாயில்லையே...? உன்ரை வாயிப்ப எங்கையப்பா போட்டுது மெய்யே...?"

மரமும் கொடுகுமிந்த மார்கழி மாதத்துக் குளிரில் அந்தச் சூரிய உதயத்தின் பின்னாலும் கொடுகிக் கொண்டே கூனிக் குறுகிப் போய் நின்று கொண்டிருந்த மனோன்மணியார்... அந்த நேரத்தில் ஜே.பியோடு வாய் திறந்து..."எங்களுக்கிப்ப அங்காலை போக வசதிப்படா" தென்றாவது... இரண்டு சொல்லாவது கதைக்கத் தெரியாமலொரு அம்மமுண்டி கணக்காய் நின்றமைக்காகக் கரடியார்க் கணவரை இப்படி யாய் அதட்டியுருட்டிக் கேள்வி கேட்டும் விடுகின்றார்...

ஒரேயடியாய் ஜே.பியின் கதைகாரியத்தோடு அந்தப் படி யவே மக்கிரித்துப் போய் நட்ட மரமாய் நின்று கொண்டிருந்த கரடியாருக்கு மனைவியாரின் கேள்விக்குண்டு வெடிப்பின் அதிரடி அதிர்வால் அந்த ரைமில் 'வாய்' என்றொரு சொல் லும் சொல்லப்பட்டு விட்டதினால் மாட்டுத் தலைகள், விடயம் தொடர்பாகத் தேவாரக் குருக்கலையாவின் 'வாய்' கட்டுமந் திரத்தின் பழைய ஞாபகம்தான்.. சொல்லாமற் கொள்ளா மல் அவுக்கென்று ஓடி வந்ததும் விடுகிறதே...! பழைய பயக்கெடுதியில் வாயைத்தான், அதெப்படி நல்ல சுகமாகத் தானிருக்கின்றதோ என்ற கணக்காய் இறுக்கித் தடவியும் பார்த்துவிட்டுத் தன்னாரவாரமாய் ஒரு மயின்ற்ரபுள் கேசாய் லாவ் பண்ணியும் விடுகின்றார்.

"அந்த ஜே.பி மடப்பயலோடை ஆரப்பா கதைக்கிறது? அதெல்லாம் அந்த நேரத்துக்கு எனக்கல்லோ தெரியும். நீயலட்டாமல் சும்மா கிட" திடீரட்டியனவாய்ப் பழுதடைந்து போனதொரு நீரிறைக்கும் வூல்ஸிலி இயந்திரம் சிறு ரிப்ப யரோடு பழையபடியும் இரைச்சலோடு பங்ஷன் பண்ணத் தொடங்கிவிட்டாற்போல... கரடியார் கதையோட்டம். ஓடிக் காட்டத் தொடங்கியதும் அந்த நேரம் மனோன்மணியாரின் முகம் போனபோக்கைத்தான் பார்க்க வேண்டுமே...

◆ ◆ ◆

"எங்களைக் காத்துப் போத்து வைக்கிற பிள்ளையாற்ரை காலடியிலை மாட்டுத் தலையளைக் கொண்டேய்ப் போட்ட தும் பிள்ளையாருக்கு விளக்குக் காட்டுற பிராமணனைப் பிடிச்சு அதையாக்கிச் சாப்பிடச் சொல்லிக் கேட்டதும் தண் ணிவிடாயிலை தவிச்சுப் போய் நம்பிவந்த அந்த மாட்டுச் சீவன்களையெல்லாம் இறைச்சி தின்னியளின்ரை கையிலை மனம் வந்து பிடிச்சுக் குடுத்ததும், உனக்கெண்டு அமைஞ்சு போன மனையிலை இன்னொருத்தனுக்குக் கதிரை போடத் துணிஞ்சதும்... இன்னொருத்தனுக்கெண்டு அமைஞ்சுபோன 'மனை'யிலை நீ 'கதிரை'போட்டு இருப்பா கிக் கொண்டதும்...?

இப்படியே ஒரே நீக்கு நிலையில்லாததொரு தொடர் குண்டு வெடிப்பாய்... மனோன்மணி ஒரு சன்னதம் கொண்டவ ளாய் முழங்கித் தள்ளப் பல பாட்டுக் குண்டுவெடித் தாக்கத் தாலும் உடல் பிளந்து, குருதி பாய்ந்து வேதனை வலி யால்... இராட்சதக் கரடியானது கத்திக் கொண்டே பாட்டத்தில் சரிந்தேவிட்டதுபோல் கரடியார் இன்னும் நின்று பிடிக்கவும் முடியாதவராய் வயிற்றையும் அமத்திப் பிடித்தபடியே றொய் லெற் பக்கமாக ஓட்டம் பிடிக்கின்றார்...

அந்த நேரம் பார்த்துத்தான் கோலொன்றும் ஓட்டத்திலே வந்தும் விடுகின்றது.

கோலைச் சட்டுப்பொட்டென்று மனோன்மணியாரே ஓப்பின் பண்ணியும் விடுகின்றார்... சின்னவீடு நாச்சியாரின் துடிப் பான குரல் உயர் பாதுகாப்புக்குள் வந்து எடுப்பாய் இறங்கி எதிர்வரப் போகும் வெள்ளிக்கிழமையிலன்று செஞ்சிலு வைக் கப்பல் பயணத்துக்காகக் கரடியாருக்கும் அவர்தம் மிஸிசிக்கும் தாமே நீற்றாகவும் நேர்த்தியாகவும் டிரஸ் பண்ணிச் சட்டுப் பொட்டென்று அந்த ரைமுக்குச் சுணங்கா மலும் வெளிக்கிடுத்திக் கப்பலுக்குள்ளும் கடலுக்குள் கிட லுக்கள் விழுந்துகிழுந்தும் போகாதபடிக்கு வலும் பக்குவ மாய்த் தூக்கி ஏற்றிவிடத்தான் போவதுபோலவும் சுப்பரான கதையலங்காரத்தில் அப்பராய் விடத் தொடங்கியதும்...

அந்த நேரம் நாச்சியார் 'அந்த'ப் படத்திலே தோன்றிய தையே கண்கொண்டு கண்ராவியாப் பார்த்தும்விட்ட கிழி கோலமாய் மனோன்மணியாரின் முகமானது போய்விட்ட அந்தநேரத்துப் போக்கறுந்துபோன போக்கையிந்தக் கரடி யார் முன்னாலிருந்துதான் கண்டிருப்பாரென்றால் இந்த வீட்டையும்தான் எந்தப் பாகுபாடும் தானில்லாமலுக்கு றொயிலெற்றாக்கியும் போடுவார்...

◆ ◆ ◆

"என்ன கனக்கக் கதைக்கிறாய்? உனக்கிங்கை என்ன பவர் கிடக்குமெய்யே.. உங்களுக்குப் பேசித்தான் சடங்கு செய்து வைச்சவை.. ஆரோடையும் ஓட்டத்திலை ஓடிக்கீடிப் போகே லையே... ஆற்ரையும் புருசன்மாரைப் பிடிக்கேலையே... அவற்ரையோர் உண்மையான பெண்டிலெண்ட அதிகா ரத்தோடடை மிடுக்கோடைதான் கதைக்கிறன் கண்டியோ..."


இந்த இவ்வளவு நாளாகவும்தான் தொகை தொகையாகச் சேர்த்துப் பொறுக்கி வைத்திருந்துவிட்ட இந்தப் பெரிய வீடு கொள்ளாத, இந்த எரிமலை மனம் கொள்ளாத, அந்தளவு சினத்தையும் இந்த ஒரு சில விநாடிகளுக்குள்ளேயே சம லத்தோடு சினநெருப்பாய்... சிவநெருப்பாய் மூட்டிவிட்டு முளாசவிட்டு இந்தப் பிரபஞ்சமே எரிந்து பறந்து பஸ்மீகர மாகி சின்ன வீடும்தான்... ஐயோவென்றாகியே விட்டதோர் சுடுகாட்டுக் கதையாய்... மனோன்மணியார் இனி இந்த வீட்டில் செல்போன் கதைப்புக்கும் ஒரேயடியாய் இருபத்தி நான்கு மணிநேர ஊரடங்கும் போட்டும் விடுகின்றார். ஆனால், அந்த அடங்காச் செல்போன்.. மனோன்மணி யார் இருத்திவைத்துவிட்ட ஒரு ஒளிப்பிடத்திலிருந்து ரியூன்... போட்டுக் கொண்டு தானிருந்தது. பார்க்கப் போன வேலையை ஒப்பேற்றிவிட்டு வீட்டுக்குள் பறந்து வந்துவிட்ட கரடியார் நாச்சியாரின் ரியூன் வாசனையோடு செல்போ னைத் தேடு தேடென்று தேடுதல் போட்டு அதைக் கண்டுபி டித்தும் விட்ட நேரமாய்...

"அட கரடி மனிசா...! இயக்கக் காறங்கள் கோல்போடுறாங் கள்.. தொடாதை வை கீழை" என்று 'படுபொய் சொல்லி' உறுக்கியதும் கரடியார் பயக்கெடுதியில் அப்படியே தம்பிட் டுப் போனர்... சரி சாமநேரம் வெளிச்சக் குண்டுகள் இன் றைக்கென்ன அகோரமாய்ப் போடப்படுகின்றது...? ரைகர் நாய் வாலை இரண்டு பின்னங்கால்களுக்கிடையில் போட் டுக் கொண்டு கத்தித் தொலைக்கின்றது...? பேய் பிசாசோ, ஆரும் காட்டு...? அவசரமாய் ஒண்டுக்கும்... திடீரென்று கட்டுக் கொடியில் நின்ற வெள்ளைத் தங்கச்சி கொடியையும் அறுத்துக் கொண்டோட ரைகர் வீட்டுக்குள்ளோட முற்றம் வரை வந்துவிட்ட '3' மனித உருவங்களும்....?

(தொடரும்)

## முன்னோடிப் பத்திரிகையாளர்

# எஸ்.எம்.கோபாலரத்தினம்






கட்டுரை

கோகுலன்

கோபு, எஸ்.எம்.ஜி என்று ஒரு காலத்தில் தமிழ்ப் பத்திரிகையுலகில் பிரபலமுற்றிருந்த எஸ்.எம்.கோபாலரத்தினம் அமரராகி ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் தமிழ் நாளேடு ஒன்றை வெற்றிகரமாக நடத்தமுடியாது என்றிருந்த நிலமையை மாற்றி அதை ஒரு சவாலாக ஏற்றுப் பணிபுரிந்து வெற்றி கண்டவர்களில் ஒருவர் அமரர் கோபாலரத்தினம். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்து. வளர்ந்து வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்ற அவர் சிறுவயதிலேயே பெற்றாரின் அரவணைப்பை இழந்தமையால் ஆசிரியர் சீனிவாசகத்தின் பெறாமகனாகப் பராமரிக்கப்பட்டார். அவருடைய பெற்றோரின் பூர்வீகம் கிழக்கி லங்கையைச் சார்ந்தது. இளம் வயதிலேயே காதல் வயப்பட்டு. அதில் ஏற்பட்ட தோல்வியால் விரக்தியுற்றுக் கிழக்கிலங்கைக்குச் சென்றார். அங்கும் வெகுகாலம் தரிக்காமல் கொழும்பு சென்றார். கொழும்பில் சில நண்பர்களின் உதவியால் வீரகேசரிப் பத்திரிகையில் ஒப்புநோக்குநரானார். அந்தப் பதவிலிருந்தபடியே தன்னை மேன்மைப்படுத்திக் கொண்டு ஆசிரியர் பீடத்திலும் இடம்பிடித்தார்.

### பத்திரிகைப் பணியில் ஒளிர்ந்தார்

வீரகேசரிப் பத்திரிகையில் அப்போது பணியாற்றிவந்த பட்டதாரிகளும், அனுபவசாலிகளும் பொறாமை கொள்ளும் வகையில் ஆசிரியர் பீடத்தில் தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்தினார் கோபாலரத்தினம். அவரது ஆக்கங்கள் பத்திரிகையைப் பிரகாசமுறச் செய்தன. சமகாலத்தில் அந்தப் பத்திரிகையின் விளையாட்டுத்துறை நிருபராகவிருந்த டி றோஸ் என்பவரின் இளைய சகோதரியைக் காதலித்துக் கைபிடித்தார். மூன்று ஆண்களும். இரண்டு பெண்களுமாக ஐந்து பிள்ளைகளைக் குடும்பவாழ்வின் பயனாகப் பெற்றெடுத்தார்கள். வீரகேசரியில் ஏற்பட்ட தொழிலாளர் பிரச்சினையானது வேலை நிறுத்தமாகவும் கதவடைப்பாகவும் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் கே.சி. தங்கராசா சகோதரர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஈழநாடு பத்திரிகையில் செய்தி ஆசிரியராகக் கோபு வந்து இணைந்தார். முதன்மை நிர்வாக ஆசிரியராகக் கே.பி.ஹரனும் ஆசிரியராக ராஜஅரியரத்தினமும் பொறுப்பேற்றிருந்தார்கள். வீரகேசரியிலிருந்து டி.எம்.முருகையா, எஸ்.பெருமாள். எஸ்.சபாரத்தினம் ஆகியோர் கோபுவுடன் ஆசிரியர் பீடத்தில் இணைந்திருந்தார்கள்.



தமிழ் அரசுக் கட்சியின் உரிமைப் போராட்டம் தீவிரமடைந்து சத்தியாக்கிரகம் போன்ற நிகழ்வுகள் விரிவடைந்தபோது ஈழநாடு பத்திரிகையின் பணிகள் மும்முரமடைந்தன. அதில் கோபுவின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. இரவு பகலாக ஓய்வின்றி உழைத்தார். அதன் காரணமாக வாரப் பத்திரிகையாகவிருந்த ஈழநாடு வாரம் இரண்டு என வெளிவந்து நாளேடாக மட்டுமல்ல தினமும் இரண்டு பதிப்புகள் வெளிவருவதாகவும் பரிணமித்தது.

### ஈழநாடு பத்திரிகையில் கோபு

தமிழ் அரசுக் கட்சியின் உரிமைப் போராட்டம் தீவிரமடைந்து, அறவழி போன்ற நிகழ்வுகள் விரிவடைந்தபோது ஈழநாடு பத்திரிகையின் பணிகள் மும்முரமடைந்தன. அதில் கோபுவின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. இரவு பகலாக ஓய்வின்றி உழைத்தார். அதன் காரணமாக வாரப் பத்திரிகையாகவிருந்த ஈழநாடு வாரம் இரண்டு என வெளிவந்து நாளேடாக மட்டுமல்ல தினமும் இரண்டு பதிப்புகள் வெளிவருவதாகவும் பரிணமித்தது. கோபுவின் வாழ்க்கை பெரும் போராட்டமாகவே ஆரம்பம் முதல் இருந்துள்ளது. அவை பற்றி விரிவாகக் குறிப்பிட இது சந்தர்ப்பமன்று. ஈழநாடு நிர்வாக மாற்றங்களையடுத்து ஏற்பட்ட முரண்பாடுகளால் ஈழநாடுவில் இருந்து கோபு விலக நேர்ந்தது. அதன் பின் பல பத்திரிகைகளில் அவர் பணியாற்றினார்.

### விடுதலைப் புலிகளின் பத்திரிகை ஆசிரியராக

இந்திய இராணுவப் படைகள் இலங்கை வந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் பத்திரிகை ஒன்றில் பொறுப்பாசிரியராகவிருந்தார் கோபு. அந்தப் பத்திரிகையை இந்தியப் படைகள் தடைசெய்து கெடுபிடிகளை முன்னெடுத்தபோது தலைமறைவாகி அந்தப் பத்திரிகையில் சில பதிப்புக்களை வெளியிட்டார். கோபுவின் துணிச்சல் இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் வெளிவந்திருந்தது. இந்தியப் படைகளால் பின்னர் அவர் கைது செய்யப்பட்டு இரண்டு மாத காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். காவலில் இருந்து வெளிவந்ததன் பின்னர் ஈழமண்ணில் இந்தியச் சிறை என்பதாகக் கட்டுரை எழுதி அதை நூலாக வெளியிட்டார்.

### கோபு பத்திரிகையாளர் மாத்திரமல்ல

கோபு வெறும் பத்திரிகையாளராக மட்டும் இருந்துவிடல்லை. சமூக நீதிக்காகவும். பின்தங்கிய சமூகங்களின் முன்னேற்றத்துக்காகவும் பெரிதும் பாடுபட்டார். களத்தில் இறங்கிச் செயற்பட்டார் என்று கூறுவது பொருந்தாது. தான் சார்ந்திருந்த பத்திரிகைகள் மூலம் இந்தப் பணிகளை முன்னெடுத்தார் என்பதே பொருந்தும். கட்டுரைகளாகவும் படங்களாகவும் ஆசிரிய தலையங்களாக்வும் அவருடைய இந்தப் பணி வெளிப்பட்டது. அப்போது செயற்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளிலும் அவருக்கு நெருங்கிய நண்பர்கள் இருந்தார்கள். அதேசமயம் பகைவர்களும் இருந்தார்கள். பொதுநிலை பத்திரிகையாளர்கள் அனைவருமே எதிர்கொள்ளும் ஒரு நிலமைதான் இது. கோபாலரத்தினத்தின் தனிப்பட்ட வாழ்க்கையானது எவருக்கும் முன்மாதிரியாக இருந்தது என்று சொல்வது சரியாக இருக்கும் என்று கொள்ள முடியாது. ஆனால் பத்திரிகைத் துறையில் அவர் பயணித்த கரடுமுரடான பாதை வளரும் பத்திரிகையாளர்களுக்கு நல்ல முன்மாதிரியாகவே இருந்துள்ளது. அவரால் பயிற்றுவிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் பலர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஊடகத் துறைகளில் பணியாற்றிவருகின்றார்கள்.

வீரகேசரிப் பத்திரிகையில் அப்போது பணியாற்றி வந்த பட்டதாரிகளும், அனுபவசாலிகளும் பொறாமை கொள்ளும் வகையில் ஆசிரியர் பீடத்தில் தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்தினார் கோபாலரத்தினம். அவ ரது ஆக்கங்கள் பத்திரிகையைப் பிரகாச முறச் செய்தன.

## இதயத்து மொழிகள்...

கவிதை

வேலணையூர்தனு

விலாசம் தொலைத்த
வெற்றுக் காகிதமாய்
வேடிக்கை உலகில்
வேடம் ஒன்று
ஆங்கே...
வாசிக்கத் தவறிய
வாழ்க்கைப் பாடங்களுள்
வந்து போயிருந்தன
வலிகளின் நகல்கள்

எண்ணங்கள் ஏவிடும்
எதிர்பார்ப்புகள் இடையே
வண்ணங்கள் பூசிய
வஞ்சனை சில
கூடவே வட்டமிட்டு வரவேற்கும்
வேதனைகள் பல

நிமிடத்துள் நிறம்மாறும்
மனிதர்கள் நடுவே
நித்தியமான நம்பிக்கை
கொண்டதுதான் தவறோ
இல்லை...
உண்மை நெறிக்குள்ளே
உறைந்து கிடப்பதனால்
உதாசீனங்கள் தான்
இன்றைய பரிசோ?

கலப்படமான
நொடிகளுக்குள்ளே
கலந்து திழைக்கும்
உணர்வுகளுக்குள்
கசப்பாய்
கதகதப்பாய்
காத்துக்
கிடக்கின்றன- என்
இதயத்து மொழிகள்
இன்னமும் கொஞ்சம்
ஈரலிப்பாய்....





## பரிகாரம்

விஞ்ஞானமும் நவீனமும்
வக்கிரம் கொண்டு
விஸ்வரூபம் எடுத்ததால்
வனத்தாய் அவள்
விதவை ஆனால்...
வாருங்கள் அவளுக்கு
வாழ்க்கை கொடுப்போம்

இயற்கைக்கு எரிச்சலூட்டி
செயற்கை மெருகூட்டி
பசுமைச் சூழலின்
சுயமதிப்பைச் சுரண்டியவர்கள்
நாங்களே...
இதற்குப் பிராயசித்தம் தேடுவோம்
இன்றே மரங்களை நாட்டுவோம்

அடுக்கங்கள் அமைத்து
எடுப்பாக வாழ்வதற்கு
பூமாதேவியின் மேனியை
முழு நிர்வானமாக்கினோம்
பத்தினி அவள் பழி தீர்க்க முன்
பசுமை ஆடை கட்டி
பரிகாரம் தேடுவோம்...

கவிதை

செ.சதீஸ்குமார்

விளையாட்டு

பிரகாஷ்

# சென்னையில் யுவராஜ்?

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடரில் யுவராஜ் சிங் சென்னை சுப்பர்கிங்ஸுக்காகவிளையாடுவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.
கடந்தவருடம்பஞ்சாப்அணிக்காக யுவராஜ் விளை யாடினார். அதன் பின்னர் அவரை பஞ்சாப் அணி விடுவித்தது. இதனால்இந்தவருடம் நடைபெறவுள்ள ஏலத்தில் யுவராஜின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது. அவரின் அடிப்படை விலையாக ஒரு கோடிரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பெரும்பாலும் யுவராஜை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாங்குவதற்கு வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது. ஏனெனில் யுவராஜ் சுழல்பந்து வீச்சும் செய்யக்கூடியவர். அதுவும் டோனிக்கு ஏற்ற பாணியில் வீசுவதில் கைதேர்ந்தவர். இதனால்அவரைசென்னை அணி ஒப்பந்தம் செய்ய வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது.
சென்னையிடம் 8 கோடி ரூபாமட்டுமேகையிருப்பில் உள்ளது. 2 வீரர்களை மட்டுமே கொள்வனவு செய்யலாம்.








# மோட்ரிச் என்றும் 'வயதான' இளசு!

காற்பந்தாட்ட உலகில் இந்த வருடம் ஆகச் சிறந்த ஆதிக்கம் செலுத்திய வீரர் என்றால் அது குரோசிய அணியின் தலைவர் 36 வயதானலூக்காமோட்ரிச்தான்.
ரஷ்யாவில் இந்த வருடம் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரில் வரலாற்றில் என்றுமே இல்லாத அளவுக்கு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது குரோசியா. அந்த அணியின் தலைவர் மோட்ரிச் குரோசிய அணியின் பேரெழுச்சிக்கு முக்கிய காரணம். இந்தத் தொடரில் குரோசிய அணி இறுதியாட்டம் வரைக்கும் முன்னேறியது. பிரான்ஸிடம் அந்த அணி கிண்ணத்தைத் தவற விட்டாலும் குரோசிய அணியின் பேரெழுச்சி பெரியளவில் பேசப்பட்டது. கிட்டத்தட்ட உலகக்கிண்ணத்தை வென்றதற்கு நிகரான புகழ் அந்த அணிக்குக் கிடைத்தது.
உலகக்கிண்ணத் தொடரின்பின்னரும்மோட்ரிச்சின் ஆதிக்கமும் வளர்ச்சியும் நீண்டு நிலைபெற்றது. ஏகப்பட்ட விருதுகளை அவர் குவித்தார். கால்பந்தாட்ட உலகில் தனிநபர் பெறுபேற்றின் அடிப்படையில் மூன்று விருதுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று, பன்னாட்டுக் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருது. இரண்டாவது, ஐரோப்பியக் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருது. மூன்றாவது 'பலூன் டி ஓர்' என்று சொல்லப்படும் தங்கப்பந்து விருது. இந்த மூன்று விருதுகளையும் இந்த வருடத்தில் அள்ளினார் மோட்ரிச். அது மட்டுமல்ல கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தில்'தங்கப்பந்து' விருதும்மோட்ரிச்சுக்கே கிடைத்தது.
சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக கால்பந்தாட்ட வீரராக இருந்துவரும் மோட்ரிச் தனது 36ஆவது வயதில் ஆகச் சிறந்த முறையில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளார். எனின் மோட்ரிச் ஒரு 'வயதான' இளசுதானே.




# பின்ஞ்சை சாடுகிறார் பொண்டிங்



இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இசாந் சர்மாவின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தமைக்காக பின்ஞ்சை சாடுகிறார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங்.
முதல் பந்துப்பரிமாற்றத்தின் மூன்றாவது பந்திலேயே பின்ஞ் போல்ட் முறையில் வெளியேறினார். இசாந் சர்மா வீசிய உட்திரும்பல் பந்தில் கவர் ட்ரைவ் ஆடமுயன்றபோது பின்ஞ் போல்ட் முறையில் ஆட்டமிழுந்தார். இதையடுத்தே பொண்டிங் பின்ஞ்சை விளாசித் தள்ளியுள்ளார். "ஆரம்பத் துடுப்பாட்ட வீரரொருவர் உட்திரும்பல் பந்தில்கனவிலும்நினைக்கமுடியாதவகையில் பின்ஞ் விளையாட முனைந்தார். அதுவும்ஆட்டத்தின்முதல்பந்துப்பரிமாற்றத்தில் இவ்வாறான தெரிவுகளை மேற்கொள்வது பொறுப்பற்ற வீரர் செய்யும் செயலேயன்றி வேறொன்றும்இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார் பொண்டிங்.

# சச்சினின் மற்றொரு சாதனையை முறியடிக்க கோக்லிக்கு வாய்ப்பு



இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லிக்கு சச்சினின் மற்றொரு சாதனையை முறியடிக்க வாய்ப்புஏற்பட்டுள்ளது.
ஆஸ்திரேலியாவில் வைத்து இதுவரை நான்கு டெஸ்ட் சதங்களைப்பதிவுசெய்துள்ளார் கோக்லி. ஆறு டெஸ்ட் சதங்களை சச்சின் பதிவு செய்தமையே இந்திய வீரர் ஒருவரின் உச்சக் கட்டப் பெறுபேறாக உள்ளது. இதனால் இன்னும் இரண்டு சதங்க ளைப் பெற்றால் சச்சினின் மற்றொரு சாதனையை கோக்லிதகர்த்தெறிவார்.

## நற்பண்புகளை வளர்ப்போம்

- நற்பண்புகளே நல்லவர்களின் அடையாளம். நூல்களை வாசிப்பதன் மூலமாகவும், சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்வதாலும், நற்பண்புள்ளவர்களின் நடத்தையைக் கவனிப்பதாலும் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும்.

- எந்தப் பொருளையும் அதற்குரிய இடத்தில் வைக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதால் இருட்டிலும் கூட அந்தப் பொருளை சிரமமின்றி எடுக்க முடியும். பொருள்களை வேறெங்கோ வைத்து விட்டு அவற்றை தேடுவதில் செலவிடும் நேரத்தை இதனால் மீதப்படுத்திக் கொள்ள முடிகிறது.

- வகுப்பறையிலோ, நூலகத்திலோ அல்லது முக்கியமான விடயமாக முக்கியமான ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே தும்முவதும் கொட்டாவிவிடுவதும் கண்ணியமற்ற செயல்கள். அப்படி அடக்க முடியாமல் கொட்டாவியோ தும்மலோ வருமாயின் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் கைக்குட்டையினால் முகத்தை மறைத்துக் கொள்ள வேண்டும்.

- எம்மோடு ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் பேசிய விடயத்தை முடிக்குமுன் நாம் இடையிட்டுப் பேசக் கூடாது. தொடர்ச்சியாக நாம் பேசிக் கொண்டிருக்கவும் கூடாது. எம்முடன் பேசுபவரின் கருத்துக்களையும் நிதானமாகக் கேட்டுப் பின் பேச வேண்டும்.

- இருவர்பேசிக்கொண்டிருக்கையில் மூன்றாம் நபராக நாம் இடையே புகுந்து பேசக் கூடாது. அப்படி அவசரமாகப் பேச வேண்டுமானால் இருவரிடமும் மன்னியுங்கள் என்று கூறிவிட்டு அவர்கள் அனுமதித்தால் மட்டும் பேசவேண்டும்.


- எம்மிடம் நெருங்கிப் பழகியவர்களாக இருந்தாலும் பெரியவர்களிடம் பேசும் பொழுது மரியாதைக் குறைவாகப் பேசக் கூடாது. அதிக உரிமை எடுத்துக் கொள்ளாமல் அவர்களை மிகவும் மரியாதையாக நடத்த வேண்டும்.

- ஒருவரது குறைகளை சுட்டிக்காட்டி அவர்களுக்குப் பின்னால் புறங்கூறக் கூடாது. பிறரைப் பற்றி இன்னொருவரிடம் குறை கூறுவதோ அல்லது அவரைப் பற்றிய அந்தரங்க விடயங்களையோ தெரிந்து கொள்ள முயற்சிக்கக் கூடாது.

- புகைப்பிடித்தல், மது அருந்துதல், போதைப் பொருள்களை உட்கொள்ளுதல்என அத்தனை பழக்க வழக்கங்களும் ஒருவருடைய உடல், உள ஆரோக்கியத்தைக் குறைத்து விடுகின்றன. இவற்றை முற்றிலுமாக தவிர்த்துவிட வேண்டும்.

- எண்ணங்களே ஒருவரை உருவாக்குகின்றன. ஆதலால் காலத்தால் போற்றப்படுகின்ற நல்ல பெரிய மனிதர்களின் வாழ்க்கை முறைகளையும், போதனைகளையும், செயல்களையும், உயர்ந்த எண்ணங்களையும் முதலில் தெரிந்து கொள்வது எம்மிடையே நம்பிக்கையும் ஊக்கத்தையும் சிறந்த முறையில் வளர்த்து விடுகின்றன.

## எம்மிடம் குறைகளை வைத்துக் கொண்டு மற்றவர்களிடம் குறையைக் காணாதீர்கள்



புதிதாகக் கல்யாணமான ஒரு கணவனும் மனைவியும் நகரத்தில் குடியேறினார்கள். அடுத்த நாள் காலையில் இருவரும் ஹாலில் அமர்ந்து தேநீர் குடிக்கும் போது, பக்கத்துக்கு வீட்டு பெண் துணிகளை துவைத்து காயப்போட்டுக்கொண்டிருப்பது ஜன்னல் வழியாக தெரிந்தது. அதை பார்த்த மனைவி கணவனிடம் "அங்க பாருங்கோ, அந்தப் பொண்ணுக்கு துவைக்கவே தெரியவில்லை. துணியெல்லாம் கறுப்புப் புள்ளிகள் இருக்கின்றன" என்று சொன்னார்.

ஜன்னல் வழியே பார்த்த கணவன் ஒன்றும் சொல்லவில்லை.பக்கத் துக்கு வீட்டு பொண்ணு ஆடைகளைத் துவைத்துக் காயப் போடுகின்ற செயற்பாடும், அதை ஜன்னல் வழியாகப் பார்த்து மனைவி துவைக்கத் தெரியவில்லை என்று சொல்வதும், கணவன் அதற்கு ஒன்றுமே சொல்லாமல் இருப்பதும் நிறைய நாள்களாக நடைபெற்றுக் கொண்டி ருந்தது. ஒரு நாள் மனைவி ஆச்சரியமாகத் தனது கணவனை அழைத்து "இங்க பாருங்கோ! எங்கள் பக்கத்து வீட்டு பொண்ணு எப்படித் துணி துவைக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டாள்.இன்றைய தினம் துணிகளைச் சுத்தமாகத் துவைத்துள்ளாள்" என்றார். அதற்கு அந்தக் கணவன் "அது வேறு ஒன்றும் இல்லை. இண்டைக்கு காலையில எழுந்து எங்கள் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை எல்லாம் நான் துடைச்சேன்" என்று சொல்லிட்டு தேநீர் குடிக்க ஆரம்பித்தார்.

அடுத்தவர்களின் குறைகளாக நாம் நினைப்பது சில நேரங்களில் எங்களுடைய பார்வைப் பிரச்சினையாகக் கூட இருக்கலாம்.

## சின்னச் சின்ன பாலர் நாங்கள்

சின்னச் சின்னப் பாலர் நாங்கள்
சிங்காரமாய்ச் சேர்ந்திடுவோம்
வண்ணப்பூ வெடுத்து
வந்து நாங்கள் சேர்ந்திடுவோம்

மல்லிகையின் மலரெடுத்து
மாலை நாங்கள் கட்டிடுவோம்
நல்ல ரோசா மலர் எடுத்து
நடுவிலே நாம் சேர்த்திடுவோம்

புள்ளிமானைப் போல நாங்கள்
புதுமையாகச் சென்றிடுவோம்
துள்ளி விளையாடி நாங்கள்
துரிதமாகச் சென்றிடுவோம்

காவடிகள் கொண்டு நாங்கள்
கோவிலுக்குச் சென்றிடுவோம்
சேவடியைத் தொழுதிடுவோம்
சேர்ந்து வீதி சுற்றிடுவோம்

பால் கொண்டு சென்றிடுவோம்
பக்தியொடு ஊற்றிடுவோம்
வேல் கொண்ட முருகனிடம்
வேண்டும் வரம் பெற்றிடுவோம்


அமைதியாக அங்கு நின்று
அன்புடன் வணங்கிடுவோம்
எமது நல்ல செயலைக் கண்டு
இறைவனருளைத் தந்திடுவார்

தேர் கண்டு மகிழ்ந்திடுவோம்
தெய்வபக்தி அங்கு ஓங்கும்
சீர் கொண்டு திரும்பிடுவோம்
சீக்கிரமாய் வீடு செல்வோம்.




## வழிகாட்டிடுவோம்





## உலகிலேயே மிகப் பெரிய பறவை

உலகிலேயே மிகப் பெரிய பறவை யானைப் பறவை ஆகும்.
இது தற்போது உலகத்தில் வசிக்கவில்லை என்ற தகவலை இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள். பழங்கால உயிரினமான யானைப் பறவையின் எலும்புகளை ஆராய்ச்சி செய்ததில், இது சுமார் 860 கிலோ எடை கொண்டதாக இருந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். முழுமையாக வளர்ச்சியடைந்த ஒட்டகச்சிவிங்கியின் எடை சுமார் 860 கிலோ. அப்படியென்றால் யானைப் பறவையின் உடல் அளவைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். எடை அதிகம் கொண்ட யானைப் பறவை, பறக்க இயலாத பறவைகளில் ஒன்று.



# பேட்ட படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ரஜினிகாந்த், விஜய்சேதுபதி பங்கேற்பு




கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் இயக்கத்தில் உருவாகி இருக்கும் பேட்ட படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ரஜினிகாந்த், விஜய் சேதுபதி இருவரும் பங்கேற்க இருக்கிறார்கள்.

கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில், ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் படம் 'பேட்ட'. வரும் பொங்கல் தினத்தன்று இந்தப் படம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பேட்ட படத்தில் ரஜினிகாந்துடன் இணைந்து விஜய்சேதுபதி, சசிகுமார், பாபி சிம்ஹா, இந்தி நடிகர் நவாசுதீன் சித்திக், நடிகைகள் சிம்ரன், திரிஷா, சனந்த் ரெட்டி, மேகா ஆகாஷ், குரு சோமசுந்தரம், ராம்தாஸ், ராமச்சந்திரன் எனப் பலர் நடித்திருக்கிறார்கள். படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்து இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை இந்தப் படத்தின் 3 சுவரெட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன. பேட்ட படத்துக்கு அனிருத் இசை அமைத்துள்ளார். படத்தில் இடம்பெறும் ரஜினியின் அறிமுகக் காட்சியான  பாடல் வெளியிடப்பட்டு இரசிகர்களிடையே வரவேற்புப் பெற்றுள்ளது. அடுத்த பாடல் ஊலலலா இணையத்தில் வெளியாக இருக்கிறது.

## twitter

அஜ்மல் அரசை@ajmalnks

வேலை தேடி அலையும் திருமணமாகாதவர்கள்உறங்குவதற்காகவும் திருப்தியாக உண்பதற்காகவும் உருவாக்கப்பட்ட தினமே ஞாயிறு.

கோழியின் கிறுக்கல்!!

'எனக்கு எல்லாம் தெரியும்' என்ற எண்ணத்தை விட மிக மோசமானது, 'உனக்கு ஒன்றும் தெரியாது' என்ற எண்ணம்!!!

தேடல் @kanmani_01

இதயமுள்ள மனிதனை வேட்டையாடுகிறது இதயமில்லாத பணம்







## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | 3 | | | 7 | 6 |
| | | | 6 | | 4 | 1 | | |
| | | | 9 | 1 | 7 | | | |
| | 7 | 2 | 3 | | | 6 | | |
| | | 5 | | | | 2 | | |
| | | 9 | | | 2 | 8 | 1 | |
| | | | 8 | 2 | 1 | | | |
| | | 3 | 7 | | 6 | | | |
| 6 | 5 | | | 9 | | | | 1 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 5 | 4 | 3 | 7 | 6 | 2 | 1 |
| 1 | 2 | 4 | 6 | 5 | 8 | 7 | 3 | 9 |
| 3 | 6 | 7 | 2 | 9 | 1 | 4 | 8 | 5 |
| 9 | 4 | 1 | 8 | 2 | 6 | 3 | 5 | 7 |
| 7 | 3 | 8 | 1 | 4 | 5 | 2 | 9 | 6 |
| 6 | 5 | 2 | 3 | 7 | 9 | 8 | 1 | 4 |
| 4 | 7 | 9 | 5 | 8 | 3 | 1 | 6 | 2 |
| 5 | 1 | 3 | 7 | 6 | 2 | 9 | 4 | 8 |
| 2 | 8 | 6 | 9 | 1 | 4 | 5 | 7 | 3 |







**மேடம்:** நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். மனதில் உற்சாகம் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** எவரிடமும் சொந்த பெருமை பேச வேண்டாம். தொழில்வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரிசெய்ய வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** பரந்த மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். புதியவர்களின் அன்பு உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் செழிக்க சில மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள்.

**கடகம்:** நேர்த்தியுடன் பணிபுரிவீர்கள். தொழில்வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி ஏற்படும். பணவரவால் பொன் பொருள் அதிகரிக்கும். மாமன் மைத்துனருக்கு உதவுவீர்கள்.

**சிங்கம்:** செயல்களில் சீர்திருத்தம் தேவைப்படும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது.

**கன்னி:** மனதில் சஞ்சலம் ஏற்படலாம். தொழிலில் கூடுதல் உழைப்பினால் உற்பத்தி விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** இஷ்ட தெய்வ அனுக்கிரகம் பெறுவீர்கள். வெகு நாள் மனதில் இருந்த சஞ்சலம் தீரும். அதிக உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** பணி நிறைவேற பொறுமை அவசியம். தொழிலில் உள்ள குறைகளை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** உறவினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தாமதமான பணியை புதிய உத்தியால் நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். உபரி பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** நண்பரை குறை சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். பொறுமையுடன் செயல்படுவதால் சிரமம் விலகும்.

**கும்பம்:** பிறர் பாராட்டும் வகையில் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற புதிய திட்டம் உருவாக்கும். கூடுதல் பணவரவு கிடைக்கும். வாகனத்தில் சில மாற்றம் செய்வீர்கள்.

**மீனம்:** அவமதித்தவர் அன்பு பாராட்டுகிற நிலை உருவாகும். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

- கோபம் என்பது ஆன்மாவின் தீப ஒளியை அழித்துவிடும்
- கோபம் என்பது மூடர்களின் மூளையிலே பிறக்கிறது
- கோபம் என்பது ஒரு தற்காலிகப் புத்தி பேதலிப்பு
- கோபம் என்பது தேன் கூட்டிலே எறிந்த கல் போல ஆபத்தானது
- கோபம் என்பது ஒரு நெருப்பு; அனைத்தையும் அழிக்கும்
- கோபம் என்பது மனிதனை ஏழையாக்கும்
- கோபம் என்பது மனிதனைப் பாழாக்கும்.
- கோபம் என்பது ஆன்மாவை விட்டு அகலாத அழுக்கு





# இந்த வாரம்

**09.12.2018 முதல் 15.12.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

செவ்வாய், சந்திரனால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். திட்டமிட்ட செயல் கால அவகாசத்தில் நிறைவேறும். சமூக நிகழ்வுகளில் கருத்துச் சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோரிடம் பிடிவாதமாக நடந்து கொள்வர். இஷ்டதெய்வ வழிபாடு சில நன்மையைத் தரும். சத்தான உணவு, சீரான ஓய்வு உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். மனைவியின் ஆர்வமிகு செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்கள் பாதுகாப்புக் குறைந்த இடங்களுக்குச் செல்லக்கூடாது.

## இடபம்

ராகு, புதன், குரு, சந்திரன் தாராள நன்மையை வழங்குவர். மனதில் புத்துணர்வு ஏற்படும். சிரமம் தந்த செயல்கள் வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். தம்பி, தங்கைக்கு தேவையான உதவியை வழங்குவீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் பொது அறிவு மற்றும் வேலைத்திறனில் வளர்ச்சி காண்பர். குடும்பத் தேவை பெருமளவு பூர்த்தியாகும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலக்கை அடைய மாற்று உபாயம் உதவும். பணியாளர்கள் விண்ணப்பித்த நிதியுதவி கிடைக்கும்.

## மிதுனம்

சுக்கிரன், சூரியன், சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். உறவினர் அன்புடன் சொந்தம் பாராட்டுவர். பணிகளில் தைரிய மனதுடன் ஈடுபடுவீர்கள். குறுக்கீடு விலகி புதிய வெற்றிப்பாதை உருவாகும். வீடு வாகனம் வாங்க நிதியுதவி கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோரின் ஆலோசனையை கேட்டு படிப்பு வேலையில் முன்னேறுவர். குடும்பச் செலவுகளில் தாராளம் இருக்கும். எதிரி சொந்த சிரமங்களால் விலகுவர். மனைவியின் அன்பு பாசம் அதிகரித்து குடும்ப நலன்களை பாதுகாக்கும். தொழிலில் இடையூறுகளை சரி செய்வதால் பணவரவு சீராகும்.

## கடகம்

சூரியன், சுக்கிரன், சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். மனம் ஒருமுகத் தன்மையுடன் இருக்கும். சமயோசித செயலால் பணி துரிதமாக நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் திறமை மிகுந்த செயலால் பாராட்டு பெறுவர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் அதிகரிக்கும். சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள். மனைவியின் அன்பு மனதில் நெகிழ்ச்சியைத் தரும். தொழில் வியாபாரத்தில் போட்டி குறையும். அரசு உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதாக நிறைவேற்றுவர். பெண்கள் விதவிதமாக உணவு தயாரித்து உபசரிப்பர்.

## சிங்கம்

ராகு, சூரியன், செவ்வாய், சுக்கிரன் சுப பலன்களை வழங்குவர். மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். சுற்றத்தாரின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் கூடும். வீடு, வாகனத்தில் சில மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் ஆடம்பர செயல்களில் ஆர்வம் கொள்வர். நோய்த் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் பலம்பெறும். மனைவியிடம் பாராட்டு பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சியும் தாராள பணவரவும் உண்டு. பணியாளர்கள் தொழில்நுட்ப அறிவில் மேம்படுவர். சலுகையும் கிடைக்கும். வெளியூர்ப் பயணம் இனிய அனுபவம் தரும்.

## கன்னி

சுக்கிரன், கேது, சந்திரன் நற்பலன் வழங்குவர். உறவினர்களின் உதவி கிடைக்கும். சுறுசுறுப்பாகப் பணிபுரிவீர்கள். குடும்பத் தேவை ஓரளவு நிறைவேறும். பிள்ளைகளின் அன்பு மனதில் நெகிழ்ச்சி தரும். விவகாரங்களில் சுமுக தீர்வு வந்து சேரும். வெளியூர்ப் பயணம் நல்ல பலன்களைத் தரும். மனைவியின் இனிய சொல்லும் செயலும் குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும். தொழிலில் இடையூறு விலகி உற்பத்தி விற்பனை கூடும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றிச் சலுகையை பெறுவர். பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்கள் நண்பரின் உதவியால் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## துலாம்

குரு, சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் நற்பலன் தருவர். சிறு செயலும் சிறப்பான பலன் தரும். நீதி நேர்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தாய்வழி உறவினர்களால் உதவி உண்டு. வெளியூர்ப் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். பூர்வ சொத்தில் பெறுகின்ற பணவரவு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். வழக்கு விவகாரத்தில் விவகாரம் சுமுக தீர்வு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி இலாப விகிதம் டும்.

## விருச்சிகம்

சுக்கிரன், கேது, சந்திரன் சிறப்பான பலன் தருவர். சமூக நடப்பில் புதிய அனுபவம் பெறுவீர்கள். பேச்சும் செயலும் முன் யோசனையுடன் இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் கூடும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் படிப்பு வேலையில் சிறந்து பாராட்டு பெறுவர். நண்பரிடம் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். வழக்கு விவகாரத்தில் தீர்வு ஏற்படத் தாமதமாகலாம். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை திருப்திகர அளவில் இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல் தவறாமல் பின்பற்றுவர்.

## தனுசு

புதன், சுக்கிரன், செவ்வாய் ஆதாய பலன் தருவர். புகழ்ந்து பேசுபவரிடம் நிதானித்துப் பழகவும். உடன்பிறந்தவர்களின் உதவி ஊக்கம் தரும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் நண்பருக்கு இணையாக பெற்றோரிடம் பழகுவர். குடும்பச் செலவுகளில் சிக்கனம் வேண்டும். நோய்த் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் கூடும். உறவினர் வகையில் செலவு அதிகரிக்கலாம். மனைவியின் கருத்துகளில் உள்ள நியாயத்தை ஏற்றுக் கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் இலக்கை நிறைவேற்றி சலுகையை பெறுவர்.

## மகரம்

சூரியன், புதன், குரு, சந்திரன் ராஜ யோகபலன் தருவர். பணிகள் சிறந்து நற்பெயரும் புகழும் கிடைக்கும். புதிய வாய்ப்புக்களை பயன்படுத்தி அதிக பணவரவு பெறுவீர்கள். உடன்பிறந்தவர்களின் கருத்தை சொல் மதித்துச் செயல்படுவர். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தரக் கேட்டு பிடிவாதம் செய்வர். கடன் தொந்தரவு குறையும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனைவி வழிசார்ந்த உறவினர் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் பணி இலக்கை எளிதாகப் பூர்த்தி செய்வர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

## கும்பம்

சூரியன், சுக்கிரன், ராகு சனீஸ்வரரால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். சுற்றத்தார் அன்பு பாராட்டுவர். இஷ்ட தெய்வ அருள்பலம் துணை நிற்கும். முக்கியமான பணிகள் சிறப்பாக நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். தம்பி, தங்கைகளுக்கு மங்கல நிகழச்சி நடந்தேறும். பிள்ளைகள் நற்செயல்களால் பெற்றோருக்குப் பெருமை தேடித்தருவர். பகைவர் இடம் மாறிப்போவர். மனைவி அதிக பாசத்துடன் நடந்து கொள்வார். வீட்டில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் கூடும். தொழில் வியாபாரம் செழித்து வளரும். மேலதிக பணவரவு சேமிப்பாகும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.

## மீனம்

சுக்கிரன், கேது, புதன், குரு அனுகூல அமர்வில் உள்ளனர். பலரும் வியந்திடும் வகையில் செயல்படுவீர்கள். பேசும் வார்த்தையில் நிதானம் இருக்கும். வெளியூர்ப் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். பிள்ளைகள் படிப்பு வேலையில் முன்னேற்றம் காண்பதற்கு கூடுதல் பயிற்சி வேண்டும். தாய்வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வுமுறை உருவாகும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை சீராகும். தொழில் வியாபாரம் செழித்து வளர்ந்திட அணுகுமுறை பின்பற்றுவீர்கள். பணியாளர்கள் கடமையை உணர்ந்து பணிபுரிவர்.

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் யாழ்ப்பாணத்துடன் இணைந்த எஸ்ஓஎஸ் தொழிற் பயிற்சி நிலையத்தில் NVQ–III தரத்திலான கீழ்க் குறிப்பிடப்படும் கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

பயிற்சிநெறிகள்

1. தகவல் தொடர்பாடலும் தொழில் நுட்பமும்
2. ஆங்கிலக்கற்கைநெறி

பயிற்சிநெறி 1, 2 இற்கானதகைமைகள்

➢ *க.பொ.தசா/ தரத்தில் கணிதம், ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சாதாரண சித்தியைக் கொண்டிருத்தல்.*

3. குளிரூட்டலும் வளிச்சீராக்கலும்
4. அழகுக்கலை/சிகைஅலங்கரிப்பு

பயிற்சிநெறி 3, 4 இற்கானதகைமைகள்

➢ *க.பொ.தசா/தரம் வரைகற்றிருத்தல்.*

மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள 17 – 28 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களது விண்ணப்பங்களை கற்கை நெறிக்கான தெரிவினை தெளிவாகக் குறிப்பிட்டு தொலைபேசி இலக்கத்துடன் 16.12.2018 இற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

*நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.*

*"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."*

**தொடர்புகளுக்கு:**
**எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம்**
**இல:219,நாயன்மார்கட்டு,**
**நல்லூர்,யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021-2211342**
**077-4442531**
**077-7859308**

**மின்னஞ்சல்:**jaffna@soscvsrilanka.org

---

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## பதவி வெற்றிடம்
## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமமானது பெற்றோர்களை இழந்த, பெற்றோரால் கைவிடப் பட்ட, கைவிடப்படும் ஆபத்தான நிலையிலுள்ள சிறுவர்களை குடும்ப சூழலில் பூரண பாதுகாப்புடன் கூடிய கல்வி, மருத்துவசேவைகளை வழங்கும் சமூகசேவைகள் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் சர்வதேச அரச, மதசார்பற்ற 135 சர்வதேச நாடுகளிலும் இலங்கையில் 36 வருடங்களாகவும் சிறுவர்களுக்கான பூரண பரா மரிப்பு சேவையை வழங்கிவருகின்ற ஒரு அமைப்பாகும்.

**பதவிவெற்றிடம்**

1. அன்னை (28 - 45 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம்

**தகைமை:**

➤ திருமணமாகாத, ஆகியிருப்பின் விதவையான /விவாகரத்து பெற்றிருப்பதோடு தனக்கென பிள்ளைகள் கொண்டிராதிருப்பதோடு குடும்பச் சுமைகள்/பொறுப்புக் களற்றராகவும், சிறுவர்களுக்கானஅன்புஆதரவளித்துநல்வழிகாட்டும் பொருட்டு நற் தேகாரோக்கியமும் நற்பண்புகளையும் கொண்டுள்ளவராகவும், எழுத்தறி வாற்றலுள்ளவராக இருத்தல்.

இந் நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் /இப் பதவிக்கு நீங்கள் பொருத்த மானவர் எனக் கருதும் பட்சத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். இப் பதவி நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி,நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

நேர்முகத்தேர்விற்கான அழைப்புதொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."

**தொடர்புகளுக்கு:**
**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,**
**இல. 219, நாயன்மார்கட்டு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொ.பேசி: 021-2211101**
**077-3733711**

(cs.1651) (13.17)

---

Arunthathee
Online Matrimony | Wedding Magazine | Wedding Planner

மாற்று மோதிரம்

DECEMBER
28 29 30
CHELVA PALACE, JAFFNA

திருமண கண்காட்சியும்
அழகு சாதனப் பொருட்கள் மற்றும் புடைவைகளின்
மலிவு விற்பனையும்.

BRIDAL SHOW
COMPETITION
18 வயதிற்கு மேற்பட்டவர்கள்
மணபெண் முக அலங்காரம்
பதிவுக்கட்டணம் 2000/=

BRIDAL FASHION SHOW
பதிவுக்கட்டணம் 5000/=
அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பங்குபற்றலாம்

Further information
076 1828 522

December 29th மாலை 4.00 மணி முதல்
தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு இடம்பெறும்

# செல்வா மணி மண்டபத்தின் எதிர்கால நோக்கம்



- 200 பேர் கொண்ட திருமண வைபவம் தந்தையை இழந்து மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளின் திருமணங்கள் எமது மண்டபத்தால் இலவசமாக நடத்த முன்வந்துள்ளோம்.
- இம் மண்டபத்தால் பெரும்பாலான குடும்பங்களுக்கு அதாவது கணவனை இழந்து தவிக்கும் குடும்பங்கள், தாய், தந்தையை இழந்து வாழும் குழந்தைகள், கால்கள், கைகள் இழந்து அங்கவீனமுற்ற குடும்பங்கள், மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு எமது மண்டபத்தால் சிறு சிறு உதவிகள் செய்வதற்கு மண்டப உரிமையாளர் முன்வந்துள்ளார்.
- ஆச்சிரமங்களில் தாய், தந்தையை இழந்து தங்கி வாழும் இளம் யுவதிகளின் ஆச்சிர மங்களின் அறிவுறுத்தலுக்கேற்ப அவர்களின் திருமணங்களும் எமது மண்டபத்தால் இலவசமாக முன்னின்று நடத்த முன்வந்துள்ளோம்.
- எமது மண்டபத்தின் எதிர்கால நோக்கத்தை அதாவது இத்திட்டங்கள் யாவும் பங்குனி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம். இது பற்றிய மேலதிக விவரங்களை மண்டபத்துக்குச் சென்று தொடர்பு கொள்ளவும்.
- எமது மண்டபத்தால் இன்னும் பல திட்டங்கள் கொண்டு வருவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளோம்.
- இதுபற்றிய தகவல்களை அறிந்து கொள்ள கீழ் உள்ள தொலைபேசியூடாகவோ அல்லது அலுவலகத்திலோ தொடர்பு கொள்ளலாம்.

**செல்வா மணி மண்டபம்**
**139, பலாலி றோட், டிப்போ அருகில், உரும்பிராய்.**
T.P:- 021 221 2464 / 077 460 2356
Email: selvaweddinghall@gmail.com

(CS/21687)(11.17)



**மீள்குடியேற்ற வீடுகளை அமைப்பவர்களினதும் புதிதாக வீடுகளை அமைப்பவர்களினதும் அவதானத்திற்கு**

மேற்குறிப்பிட்ட படி வீடுகளை அமைக்கும் போது அவ்வீட்டுக் கூரைகளுக்கு உஷ்ணத்தை தவிர்த்து குளிர்ச்சியை தரக்கூடிய சுகாதார பாதுகாப்புடைய முக்கியமாக புற்றுநோயை உண்டு பண்ணாத 100% இயற்கை வளங்களைக் கொண்டு தயாரிக்கும் களிமண் கூரை ஓடுகளை பாவித்து பயன் பெறுங்கள்.

மேற்குறிப்பிட்ட கூரை ஓடுகளை வாங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.


01. நடமாடும் ஓடு வியாபாரிகளிடமிருந்து ஓடுகளை வாங்குவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் 2ஆம் 3ஆம் தர ஓடுகளை கலந்து விற்பதற்கு முயற்சிக்கிறார்கள்.
02. பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஓடு விற்பனை செய்யும் முகவர்கள் ஊடாக சிறந்த ஓடுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
03. தரம் 01 (No.01) ஓடுகள் வடமாகாணத்தில் 50.00 ரூபா ஆகவோ அல்லது அதற்கு மேலாகவோ உண்மையான விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் அதற்கு குறைவான விலையில் ஓடுகள் விற்பனை செய்பவர்களிடம் கவனமாக இருங்கள்.
04. நேரடியாக ஓட்டுத் தொழிற்சாலைகளுக்குச் சென்று தரமான ஓடுகளை நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ளலாம்.
05. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் சங்கத்தை தொடர்பு கொண்டு நியாயமான விலைக்கு நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் ஓடுகளைப் பெற்றுக் கொள்வதனூடாக உங்கள் ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

**இது அகில இலங்கை களிமண் ஓடு உற்பத்தி தொழிற்சாலைகள் சங்கத்தினால் ஓடு நுகர்வோரை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஓர் விழிப்புணர்வு.**

(CS 32172)(4.17)

**மேலதிக தொடர்புகளுக்கு :**
**077 627 4117/ 077 756 4578/ 077 756 1548**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 07 . 1936

மறைவு 20 . 11 . 2017

## Dr. கதிர்காமு வல்லிபுரம்

(ஓய்வுநிலை வைத்தியர்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களிற்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் ;
**குடும்பத்தினர்.**

**தர்ஷனிபுரம்,**
**அல்வாய்.**

(CS 21613) (14.17)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

மலர்வு 24 . 04 . 1943



உதிர்வு 09 . 11 . 2018

கடந்த 09.11.2018 இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் கார்த்திகேசு பீதாம்பரம் J.P.

(ஓய்வுநிலை உதவிப் பிரதேச செயலர், தெல்லிப்பழை)


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் 01.12.2018 சனிக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்)**

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்திகேட்டு நேரடியாக வருகைதந்து இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களுக்கும். தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்தவர்களுக்கும், தேவையான போதெல்லாம் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் மற்றும் இந் நிகழ்வில் எம்மோடு தங்கி எம் துயர் துடைத்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றி.

**04, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.** (cs 21652) 13.17 **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சோமசுந்தரம் சிவராசா

பிரம்படி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவராசா 07.12.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ரேணுகாவின்(ஆசிரியர் - யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பவளராணி மற்றும் ராதாராணி (பிரான்ஸ்), விமலராணி ஆகியோரின் அருமைச்சகோதரரும் காலஞ்சென்ற குலவீரசிங்கம் மற்றும் சுகுமார், இராகுலன், சந்திரிகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌரியின் உடன்பிறவா சகோதரரும் ஜீவிதா(பிரான்ஸ்), தெய்வியா (பிரான்ஸ்), அரவிந், மைவிழி, பிலஹரி ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**18/5, பிரம்படி ஒழுங்கை,**
**கொக்குவில்**

(CS 21704) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லையா சிவகாமிப்பிள்ளை

வேலணை கிழக்கு 1ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கரியாலை நாகபடுவானை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சிவகாமிப்பிள்ளை கடந்த (05.12.2018) புதன்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலணை செல்லையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, கார்திகேசு, சங்கரப்பிள்ளை குழந்தைவேலு, வியாலாச்சி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பத்மநாதன் (கனடா), திருலோகநாதன், சிவானந்தன் (முழங்காவில்), சிவச்செல்வி, காலஞ்சென்ற நாகலெட்சுமி, இந்திரலதா (சுவிஸ்), சிவராணி (ஜேர்மனி), தயாராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவானந்தன், ரவீந்திரன் (சுவிஸ்) காலஞ்சென்ற நிமலவட்சன் (ஜேர்மனி), அப்பன் (வேலணை), புவனேஸ்வரி (கனடா), சகுந்தலாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் இளங்கீதன், அருள்வானி, சத்தியவானி, கிருஸ்ணவேனி, கலைவாணி, நிசாந்தி, ரேவதி, பிரசன்னா, சஜீவன், சசிதரன், சர்மிலன், சர்மிலா, தர்சன், தர்சிகா, துஸ்யந்தன், சோபிகா, கௌசிகன், றம்மியா, லாவண்யா, கிருஷன், டினுசா, ஜனந்தன், யசிந்தா, வாகிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் கரியாலை நாகபடுவானில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரியாலை நாகபடுவான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றரர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

**கரியாலை,**
**நாகபடுவான்.**

(c.8634) (13.17)

**தகவல் : குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சிவசம்பு



**தோற்றம்**
**25.12.1945**

**மறைவு**
**06.12.2018**

மூளாயைப் பிறப்பிடமாகவும் கோயில்வீதி,நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவசம்பு 06.12.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் பரராஜசிங்கம், பூபாலசிங்கம், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் புவனேஸ்வரி, குணமணிதேவி, தனபாலசிங்கம், மகிளேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதிவதனி, புவிச்சந்திரன், கமலவதனி, லோஜினி, தேவிகா, திலகா, யுஜிபரன் ஆகியோரின் அன்புத் தாயும் மனோகரன், வசந்திரா, தயாபரன், விஜயாதன், தனேஸ்வரன், கிருபாகரன், துளசிகா ஆகியோரின் அன்பு மாமியும் ஜெனனன், சயந்தன், கௌதினி, ஆரவி, பிரணவன், விலோஜன், நிரோஜன், அபிநாத், அக்ஷிகா, அபிஷன், ஆருஷன், அகிலாஸ், கீர்த்திகா, தர்த்திகா, கோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 360, கோயில் வீதி,**
**நல்லூர்.**

(CS 21682) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 208 4938/ 071 967 1979**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**இந்திராணி திருநீலகண்டன்**

தோற்றம் 15.06.1947 — மறைவு 13.12.2015

திதி:- துதியை

எமக்கெல்லாம் நல்வழி
காட்டிய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
நீங்கள் எம்மை விட்டுச்
சென்று ஆண்டுகள் மூன்று
உருண்டோடி விட்டதே!
நம்ப முடியவில்லை!
உங்கள் இனிய அன்பான கதைகள்
எம் காதுகளில் ஒலிக்கின்றது

உங்கள் சிரித்த முகம் அன்பான
பார்வை கொண்ட தோற்றம்
எம் கண்களில் தெரிகின்றது
எம்முடன் கூடவே
இருக்கின்றீர்கள் நீங்கள்
மறையவில்லை என்றென்றும்
எங்களுக்குள் வாழ்கின்றீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(cs 21693)(11.17)

## வேலையாள்கள் தேவை

சுஜித் என்டப்பிறைஸ்ஸஸ் நிறுவனத்தில் பணிபுரிய
- பண வசூலிப்பாளர்கள் (Recovery Officer)
- விற்பனை முகவர்கள் (Sales Ref) தேவை.

சம்பளம் - 40,000 தொடக்கம் 60,000 வரை பெறலாம்.

எமது நிறுவன மட்டக்களப்பு கிளைக்கு
- முகாமையாளர்
- வேலையாள்களும் தேவை.

(IN/5897)(11,17)

**077 904 1258, 021 227 0586**

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்த
ராக சண்டிலிப்பாய் கமநல சேவைகள்
நிலையத்தில் கடமைபுரியும்
**திருமதி சிதம்பரநாதன் வசந்தகலா**
அவர்களின் அன்புப் புதல்வன்
**செல்வன் சிதம்பரநாதன் அக்சயன்**
அவர்கள் 06.11.2018 காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிச்சங்க சமூகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.**

(CS/21690)(11.17)

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் கமநல சேவைகள் நிலையத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி **மாலதி துஸ்யந்தன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**மயில்வாகனம் இராஜேந்திரம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**கமநல சேவைகள் நிலையம் உடுவில்**

(ak 39)(13.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராக உடுவில் கமநல சேவைகள்
நிலையத்தில் கடமையாற்றும் **திருமதி துஸ்யந்தன்
மாலதி** அவர்களின் பாசமிகு தந்தை
**மயில்வாகனம் இராஜேந்திரம்**
அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிச் சங்க சமூகம்**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**
**யாழ்ப்பாணம்.** (CS 21691) (14.17)

## வேலணை பிரதேச சபை
## 2019ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், என்பவற்றை 01.01.2019 தொடக்கம் 31.12.2019 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 10.12.2018 முதல் 21.12.2018 மதியம் 2.00மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 24.12.2018 பி.ப 1.00மணிவரை
கேள்விதிறக்கும் திகதி :- 24.12.2018 பி. ப 2.30மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | | 2000 | 5000 | 24,750.00 |
| 2 | வேலணை அம்பிகைநகர் மீன்சந்தை | | 2000 | 5000 | 12,800.00 |
| 3 | சரவணை மீ சந்தை | | 2000 | 5000 | 6500.00 |
| | வேலணைதுறையூர் மொத்தமீன் விற்பனைச்சந்தையும் சந்தையில் அமைந்துள்ளகடைகளும் | | | | |
| 4 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதியகட்டிடம்) | | 2000 | 10,000 | 198,000.00 |
| 5 | கடைஇல-2 கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | 1000 | 2000 | 5000 | 28,440.00 |
| 6 | கடைஇல-4 கருவாட்டு கடை | 1000 | 2000 | 5000 | 31,284.00 |
| 7 | கடைஇல-5 கருவாட்டு கடை | 1000 | 2000 | 5000 | 31,284.00 |
| 8 | கடைஇல-6 கோழிக்கடை | 1000 | 2000 | 5000 | 30,345.00 |
| | வேலணைபொதுச்சந்தை(6ம் வட்டாரம்) | | | | |
| 9 | மரக்கறி ,மீன் | | 2000 | 5000 | 30,050.00 |
| 10 | சிற்றுண்டிச்சாலை | 750 | 2000 | 10,000 | 24,840.00 |
| | புங்குடுதீவுமுற்றவெளிச்சந்தையும் கடைத்தொகுதியும் | | | | |
| 11 | கோழிக்கடை | 500 | 2000 | 5000 | 61,555.00 |
| 12 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600 | 2000 | 5000 | 14,058.00 |
| 13 | கடைஇல-6 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 14 | கடை இல-7 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 15 | கடை இல-2 (உப அலுவலகத்திற்கு அருகாமை) | 800 | 2000 | 9600 | 96,000.00 |
| 16 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | | 2000 | 5000 | 13,500.00 |

04.11.2018ம் திகதிய உதயன்,தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட கேள்வி அறிவித்தலில் காணப்படும் நிபந்தனைகள் அனைத்தும் தொடர்ந்தும் இதற்கும் பின்பற்றப்படும். இது தொடர்பான விபரங்களை அறிய எமது தலைமை அலுவலகம் , உபஅலுவலகங்கள், என்பவற்றில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**திரு ந.கருணாகரகுருமூர்த்தி**
**தவிசாளர்**
**பிரதேச சபை**
**வேலணை.**

(C 8629)(14.17)

**திகதி :-7.12.2018**

## உடனடியாக விற்பனைக்கு

பிரித்தானியாவில் உற்பத்தி செய்த புத்தகம் ஒட்டும் இயந்திரம்
10 Clamp Book Binding Machine

(ACO/3378)(11.17)

**077 152 4741**

## பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

**English & தமிழ் மொழி மூலம்**
**Grade 6 to O/L - Maths & Science**
**Grade 10, O/L & A/L - ICT**

தொடர்புகளுக்கு : **077 205 5224**

(CS 21607)(4.17)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 இல் பிறந்த செவ்வாய்க்குற்றமற்ற பூராடம் நட்சத்திரம். கிரகபாவம் 54, விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரியும் (அதிபர்) மணமகனுக்குப் படித்த (உத்தியோகம் பார்க்கும்) பண்பான மணமகள் தேவை.

**076 305 4804** (IN/10872)(11,17)

## தேவை

நீர்கொழும்புக்கும் கொச்சிக்கடைக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு பழைய, பாவித்த தகரப்பொருள்கள் **(Charterd Tins Sheets)** தேவை. பொருள்களை இறக்குமிடத்தில் பணம் உடனடியாகத் தரப்படும்.

**071 494 8309** (IN/10872)(11,17)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் கச்சேரியில்
பணிபுரியும் குடும்பத்திற்கு
வீடு வாடகைக்குத் தேவை.

**077 666 7857**

(CS 21648) (14.17)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்நகரை அண்மித்த
பகுதியில் (4km உட்பட்ட)
குடும்பம் ஒன்றுக்கு
வீடு வாடகைக்கு தேவை.

**077 933 0680**

(CS 21618) (14.17)

## பணியாளர் தேவை

முழுங்காவிலில் உள்ள
ICE Factory ஒன்றுக்கு
இயக்குநர்(Operator) தேவை.
(வெல்டிங் வேலை அறிவு
விரும்பத்தக்கது)

தொடர்பு : **077 232 6003**
**076 295 8828**

(CS 0021662)(14.17)

## விநியோகஸ்தர் தேவை

பிரபல நிறுவனத்தின்
அழகுசாதனப் பொருள்களை
(Cosmetic) வவுனியாவிலிருந்து
விநியோகிக்கக் கூடிய
விநியோகஸ்தர் தேவை.

**077 393 6085**

(CS 0021661)(14.17)

## வீடு வாடகைக்குண்டு

இணுவில், மானிப்பாய்
றோட்டில் சகல
A/C வசதியுடன் வீடு
வாடகைக்குண்டு.

தொடர்பு : **077 859 2426**
**077 838 5172** (வைபர்)

(CS 21611)(14.17)

## இப்பொழுது திரையில்


A Ceylon Theaters (Pvt) Ltd Proudly presents




| | |
|---|---|
| **Majestic** Jaffna. 4.45 pm [021 222 7712] | **Chelva** Jaffna. 10.30, 2.30, 6.30 pm [021 222 7973] |
| **Raja 2** Jaffna. 10.30, 2.30, 6.30 pm [021 222 7332] | **Salu Cinema** Point Pedro. 10.30, 2.30, 6.30 pm [021 226 5000] |
| **Shanthi** Batticaloa. 10.30, 2.30, 6.30 pm [065 222 3516] | **Vasanthi** Vavunia. 10.30, 2.30, 6.30 pm [024 222 1410] |
| **Saraswathy** Trinco. 10.30, 2.30, 6.30 pm [026 222 2221] | **Nahams** Chunnaham. 10.30, 2.30, 6.30 pm [0772 186 646] |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by: Cinema Entertainments (Pvt) Ltd (CEL)



softlogic
நத்தார்
50% வரை
விலைக்கழிவு
நம்பமுடியாத
வெகுமதிகள்
மற்றும்
வழங்கல்
வட்டியற்ற
இலகு
கொடுப்பனவுத்
திட்டங்கள்
60 மாதங்கள் வரை வட்டியற்ற திட்டம் + 35% வரை விலைக்கழிவு
அனைத்து முன்னணி கிரடிட்கார்ட்களுக்கும்
சொப்ட்லொஜிக்கில் இப் பண்டிகை காலத்திற்கு தொலைக்காட்சிகளுக்கு சிறந்த சலுகைகள்
ஆகக்குறைந்த ரூ.2,826/- மாதந்த தவணைக்கு
softlogic PRIZM LED TV | SLE32W800
32"
ரூ.49,990/-
விசேட பணவிலை ரூ.33,490/- | மாதந்தம் ரூ.2,826/-
இலவசம்
MAXMO DVD பிளேயர் DVD2606
MAXMO கேஸ் குக்கர் GC2121
Panasonic ரயிஸ் குக்கர் SR-Y22LJ1
Panasonic LED TV | TH-32F403
32"
HD ready
HDMI
USB
ரூ.54,990/-
விசேட பணவிலை ரூ.39,990/- | மாதந்தம் ரூ.3,238/-
இலவசம்
Panasonic DVD பிளேயர் DVD-S500
MAXMO இஸ்திரி SW105
Dialog TELEVISION
SAMSUNG LED TV
32"
UA32N4010
ரூ.56,990/-
விசேட பணவிலை ரூ.39,990/-
மாதந்தம் ரூ.3,356/-
இலவசம்
DVD-S500
Panasonic DVD பிளேயர்
MAXMO இஸ்திரி SW105
Dialog TELEVISION
softlogic PRIZM Smart LED TV
43"
SLE43S5D
Opera TV
ரூ.99,990/-
விசேட பணவிலை ரூ.84,990/-
மாதந்தம் ரூ.5,449/-
இலவசம்
Softlogic PRIZM 24" LED TV
SLE24W3A
softlogic PRIZM 4K UHD Smart LED TV
50"
SLE50S2U
Opera TV
YouTube
NETFLIX
ரூ.157,990/-
விசேட பணவிலை ரூ.119,990/-
மாதந்தம் ரூ.8,132/-
இலவசம்
Softlogic PRIZM 32" LED TV
0%
சொப்ட்லொஜிக் விற்பனைக்கு பின் விசேட சேவை
அழைப்பு 011 5 541 900
உடனடி அழைப்பு 011 5 705 705
சொவ்ட்லொஜிக் உத்தரவாதம் சகிதம்
WESTERN UNION WU moving money for better
சொவ்ட்லொஜிக் மெக்ஸ் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5678989
சொவ்ட்லொஜிக் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5671108
softlogic

# நித்திய சுகம் 402

உடலே கோயில்


# நீரிழிவு நோயும் உடற்பயிற்சியும்

செ. அறிவுச்செல்வன்



இன்று அதிகளவில்பாதிப்புக்களை ஏற்படுத்தும் தொற்றாநோய்களில் ஒன்றாக நீரிழிவு நோய் காணப்படுகிறது. குறிப்பாக ஆசிய நாடுகளில் இந்த நோயின் தாக்கமானது அதிகமாகவுள்ளது. உடல்திணிவுச்சுட்டி (Body Mass Index, BMI) குறைந்தவர்களில்கூட இதுஓர்பிரச்சினையாகவுள்ளது.

உலகின் 60 வீதமான நீரிழிவு நோயாளிகள் ஆசியக் கண்டத்திலேயே வாழ்கின்றனர். இதற்குக் காரணம் அவர்களின்தசைநார்களின் பருமன் (muscle mass) குறைவாகவும், வயிற்றுப் பகுதிகளில் அதிகளவு கொழுப்புப் படிவு ஏற்படுவதுமேயாகும். தவிர இவர்களின் வாழ்க்கை முறையும் பெரிய பங்கு வகிக்கின்றது.



'நகரமயமாதலினால் ஏற்பட்ட உடற்பயிற்சிக் குறைவு, புகைப்பழக்கம்மற்றும்பிரதான உணவாக அதிகளவில் அரிசியையும் தீட்டிய தானியங்களையும் பயன்படுத்துதல்' போன்ற வாழ்க்கை முறைகள் அதிகளவில்பாதிப்பைஏற்படுத்துகின்றன. தவிர ஆசியக் கண்டத்தை எடுத்து நோக்கின் அளவுக்கதிகமான இனிப்புப் பாவனையும் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான முதன்மைக் காரணியாக அமைந்துள்ளது.
எமது நாட்டைப் பொறுத்த வரையில் கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் 1.1 மில்லியன் மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இள வயதினரிடையேயும்இந்தநோயின் ஆதிக்கம்அதிகரித்துச் செல்கின்றது.

எனவேஇந்தநோயின்தாக்கத்திலிருந்து மீள்வதற்கும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கும்நாம்எமது உணவுப்பழக்கத்தை மாற்றிக் கொள்வதுடன், ஒழுங்கான உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். இதுவே நோயில் இருந்து விடுபடுவதற்கான சிறந்த வழிமுறையாக அமையும்.

**உடற்பயிற்சியின் நன்மைகள்**

நீரிழிவு நோயாளிகளுக்கு உடற்பயிற்சியே மிகவும் பாதுகாப்பானதும், விரும்பத்தக்கதுமான ஒரு கட்டுப்பாட்டு முறையாகும். இந்த நோயினால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள்ஏற்பட்டபின்னரும்கூட உடற்பயிற்சி செய்வதன் மூலம் இந்த நோயின் தாக்கம் மேலும் மேலும் அதிகரிக்காது கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு நோயாளி உடற்பயிற்சி செய்வதால் அவரது குருதியில் குளுக்கோசின் அளவு குறைவதுடன், உடல் நிறையும் குறைவடையும். ஒழுங்கான உடற்பயிற்சியில் ஈடுபடும்போதுஉடலில்இன்சுலின்பயன்பாடு (Insulinsensitivity) அதிகரிக்கின்றது. இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது.
உடற்பயிற்சியின் மூலம் எமது உடலில் தசைநார்கள் வலிமைபெற்று பருமனில் அதிகரிக்கின்றன. இதனால் குருதியிலுள்ளகுளுக்கோசின்பாவனைநாளுக்குநாள்அதிகரிப்பதால்குருதியில்குளுக்கோசின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. தசை நார்கள் வலிமை பெறுகின்றமையால் உடற் சமநிலை அதிகரிக்கின்றது. எமது இயக்கங்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. இதனால் விபத்துக்கள், முறிவுகள் குறைக்கப்படுகின்றது.

**உடற்பயிற்சியை ஆரம்பித்தல்**

நீரிழிவு நோயாளி ஒருவர் உடற்பயிற்சியை ஆரம்பிக்க முன்னர் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது நல்லது. குறிப்பாக அவரது மருந்துகளில் மாற்றம் செய்யவேண்டி வரலாம். அல்லதுதென்படாதிருக்கும்சிலநோயின்பக்கவிளைவுகள், பாதிப்புக்களை அல்லது உயிராபத்துக்களைக்கூட ஏற்படுத்தலாம்.
ஆரம்பத்தில் ஒரு நோயாளி தினமும் 30 நிமிட நேரம், கிழமையில் 5 அல்லது 6 தினங்கள் பயிற்சியில் ஈடுபடலாம். அவ்வாறு ஆரம்பத்தில் ஒரே முறையில் 30 நிமிடம் பயிற்சியைச் செய்ய முடியாதவர்கள்அதனைஇரண்டுஅல்லதுமூன்று வேளைகளில் பிரித்துச் செய்யலாம்.
ஆரம்ப காலத்தில் மெதுவாக ஆரம்பித்து நாளடைவில் நேரத்தையும் வேகத்தையும் கூட்டிச் செல்லலாம். ஆரம்பிக்கும் போது குறைந்த இலக்கை நோக்கி நகர வேண்டும். அப்போது தான் இலகுவில் இலக்கை அடைய முடியும். பயிற்சியும் மன மகிழ்ச்சியைத் தரும்.
தினமும் பயிற்சிக்கு முன்னர் உடலைப் பயிற்சியில்ஈடுபடுத்துவதற்கானஆரம்பப் பணிகளைச் செய்தே (worm up) ஆரம்பிக்கவேண்டும். அதுபோல்பயிற்சிகளை முடிக்கும் போதும் (cool down) செய்ய வேண்டும்.
நோயாளிகளுக்கான பயிற்சிமுறை இரண்டு வகைப்படும். அவையாவன,

- காற்றுச் சுவாசத்தின் மூலம் பயிற்சியில் ஈடுபடுதல்.
- உபகரணங்களைப் பயன்படுத்தி பயிற்சியை மேற்கொள்ளுதல்.

**காற்றுச் சுவாசத்தின் மூலம் பயிற்சியில் ஈடுபடுதல்**

காற்றுச் சுவாசத்தின் மூலம் மேற்கொள்ளும் உடற்பயிற்சியை உயர் இதயத்துடிப்பு வீதத்தின் 50 வீதத்தில் ஆரம்பித்து, மெது மெதுவாக 70 வீதம் வரை கொண்டுசெல்லலாம். (Maximum Heart Rate = 220-Age) அதாவது 60 வயதுடைய ஒருவர் ஆரம்பத்தில் மெதுவாக 80 தொடக்கம் 90 துடிப்பு/நிமிடம் என்றஅளவில்ஆரம்பித்து, நாளடைவில் 110 தொடக்கம் 120 துடிப்பு/நிமிடம் என்ற இதயத் துடிப்பு வீதத்தில் பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.



**உபகரணங்களைப் பயன்படுத்தி பயிற்சியை மேற்கொள்ளல்**

உடற்பயிற்சி உபகரணங்களைப் பயன்படுத்தி பயிற்சியை மேற்கொள்ளும் போது, கை நிறைகளைப் பயன்படுத்தி அதிகளவு பயிற்சிகளை மேற்கொள்ளுதல் போதுமானதாக அமையும். இந்தப் பயிற்சியின் மூலம் உடலின் பிரதானமான தசை நார்களுக்குப் பயிற்சியை வழங்கலாம். உதாரணமாக கால்கள், கைகள், தோள்மூட்டின்பின்பகுதி, வயிற்றுப்பகுதி என்பன அடங்கும்.
பயிற்சிகளில்ஈடுபடும்போதுகிழமையில் காற்றுச் சுவாசத்தின் மூலம் மேற்கொள்ளும் பயிற்சிகளை 3 அல்லது 4 தினங்களும், உபகரணங்களைப்பயன்படுத்திச் செய்யும் பயிற்சியை இரண்டு தினங்களும்மேற்கொள்ளலாம்.
உபகரணங்களைப்பயன்படுத்திபயிற்சியைச் செய்யும்போது ஒரு தடவையில் 8 முதல்12 முறைபயிற்சிசெய்யலாம். இவ்வாறு 3 முறை செய்யலாம். ஒவ்வொரு முறை செய்யும்போதும் தசை நார்களுக்கு 2 தொடக்கம் 3 நிமிட் ஓய்வு வழங்குவதன் மூலம் தசைக்கான குருதிச் சுற்றோட்டத்தைச்சீராக்கிக்கொள்ளலாம்.

இதனால் தசை நார்கள் தேவையான போசணையைப் பெற்றுக்கொள்ளும். பயிற்சியை ஆரம்பிக்கும்போது மிகச் சிறிய எடையில் ஆரம்பித்து சில கிழமைகள் இடைவெளியில் மெதுமெதுவாக நிறையைக் கூட்டிச் செல்லலாம். நிறையை அதிகரிப்பதிலும் பார்க்க எண்ணிக்கையைக் கூட்டுவது பாதுகாப்பானதாக அமையும்.

காற்றுச்சுவாசத்தின் மூலம்மேற்கொள்ளக் கூடிய பயிற்சிகளாக நடத்தல், துள்ளுதல், நடைஇயந்திரத்தைபயன்படுத்துதல் போன்றவை அமைந்துள்ளன. இவற்றைவிடநீச்சல், சைக்கிளோட்டம் என்பனவும் இதில் உள்ளடங்கும்.

**பயிற்சியில் ஈடுபடும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

- நீங்கள் விரும்பிய நேரத்தில் பயிற்சியை மேற்கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யும்போது தினமும் உங்களால் தடையின்றிப் பயிற்சியில் ஈடுபடக் கூடிய நேரமாக இருத்தல் வேண்டும்.
- உணவு உட்கொண்ட பின் பயிற்சியில் ஈடுபடுவது நல்லதல்ல.
- தனியாகப் பயிற்சிகளைச் செய்வதிலும் பார்க்க நண்பருடனோ அல்லது குழுவாகவே சேர்ந்து செய்வது விரும்பத்தக்கது. அதாவது அவசர நிலமைகள் ஏற்படும் போதுஉதவியாகஇருப்பதுடன், ஒருமன மகிழ்ச்சியான சூழலில் பயிற்சியை மேற்கொள்ள வழிவகுக்கும்.
- உடலின்பகுதிகளில்காயங்கள்அல்லது வீக்கங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதனைக் கவலையீனமாக விட்டுவிடாது மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதாவது தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பயிற்சியிலிருந்து போதியளவு ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது.
- நெஞ்சுவலி, தலைச்சுற்று, மூச்சுத்திணறல்அல்லதுஉடற்பயிற்சிசெய்யமுடியாத நிலை ஏற்பட்டால் உடனடியாக பயிற்சியை நிறுத்தவும். அருகிலுள்ள மருத்துவமனையில் ஆலோசனை அல்லது சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

***உடற்பயிற்சியை தொடர்ந்து செய்வோம்! நீரிழிவு நோயை வெற்றி கொள்வோம்!***

*கட்டுரையாளர்:*
*மருத்துவ அதிகாரி,*
*விளையாட்டு மருத்துவ அலகு,*
*யாழ்.போதனா மருத்துவமனை.*

# மைத்திரிக்குப் புதியவகை நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது!

## கூறுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான்

கொழும்பு, டிசெ. 9

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன புதுவகையான நோய்த்தொற்றுக்கு இலக்காகி உள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

திருகோணமலை கிண்ணியாவில் நேற்றுக்காலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்கத் தொடர் போராட்டங்களை நாங்கள் முன்னெடுக்கவில்லை. இது நாட்டின் ஜனநாயகத்தையும், அரசமைப்பையும் பாதுகாக்க நடத்தப்படும் போராட்டமே. 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பம் இட்டாலும் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமைஅமைச்சராகநியமிக்கமாட்டேன் என்று அரசதலைவர் கூறுகிறார். அவர் வேறு ஒருவரைத்தலைமைஅமைச்சராக நியமிப்பதற்கு நாங்கள் சம்மதித்தால் அது ஜனநாயகத்துக்கு எதிரான தவறான முன்னுதாரணமாகஅமைந்துவிடும். அதாவது நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப்பலத்தைப்பெறாத ஒருகட்சிக்கு அரசதலைவர்நினைத்ததைப்போல்தலைமை அமைச்சர்பதவியைவழங்கமுடியும்என்ற மனநிலைக்குமக்களைத்திசைதிருப்பஇது வழிவகுக்கும்.

அரசதலைவரின் தவறான முடிவுகளால் நாட்டின் அரச, தனியார் சேவைகள் முடக்கப்பட்டுள்ளன. அரசதலைவர் ஒருநாள் ஹிட்லர்போல்செயற்படுகிறார். அடுத்தநாள் வேறொருவர்போல் நடந்துகொள்கிறார்.

ஐக்கியதேசிய முன்னணியுடன்கலந்துரையாடும்போது எமது வாக்குகளால் வெற்றிபெற்ற அரசதலைவர் போல் பேசுகிறார். அதன்பின்னர்ஐக்கியமக்கள்சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து எங்களுடன் பேசியதற்கு முற்றிலும் வேறாகப் பேசுகிறார். அதிலும் காலையில் ஒரு பேச்சு மாலையில் இன்னொரு பேச்சு. உதாரணமாக அரசியல் நெருக்கடிக்கு 24மணித்தியாலங்களில்தீர்வுகாண்பதாகக் கூறியவர் மறுநாள் ஒரு வாரத்தில் தீர்வு காண்பதாகக் கூறுகிறார். மொட்டில் இணைந்த அவரின் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்றுகூறி சில தினங்களில்மொட்டுடன் கூட்டணி என்று கூறுகிறார்.

இவரது கையில் நிறைவேற்று அதிகாரம் இருப்பதுகுழந்தையின்கையிலுள்ளபொம்மையைப்போன்றுள்ளது. தன்னால்நாடாளுமன்றத்தில்பெரும்பான்மையைக்காட்ட முடியாது என்று அறிந்ததும் நாடாளுமன்றைக்கலைப்பதாகவெளியிட்டதில்தொடங்கிய அவரின் அரசிதழ்நோய் இன்றுவரை தொடர்கிறது.

### இதுதான் காரணமா?

அரசதலைவர்முதன்மைஅதிதியாகக்கலந்துகொள்ளவிருந்த விழாவைப் புறக்கணிக்கிறோம் என்று கூறிய விடுதி உரிமையாளர்களைப் பழிவாங்கவே அரசிதழ்வெளியிடக்காரணமாக அமைந்துள்ளது. அவருக்குக்கோபம்வந்தால் உடனே ஒரு அரசிதழை நாம் எதிர்பார்க்கலாம்.

அரசதலைவரின் அண்மைக்காலச்செயற்பாடுகளை அவதானிக்கும்போது அவர் புதுவகையான நோய்த் தொற்றுக்கு இலக்காகியுள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே அவர் சிறந்த மருத்துவர்களிடம் சிகிச்சை பெறுவது நாட்டு மக்களுக்கு நல்லது.

அரசதலைவரின் இந்தச்செயற்பாடுகளால் ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு தற்போதுபலமடங்குஅதிகரித்துள்ளது. கட்சியில் காணப்பட்ட முரண்பாடுகள் களையப்பட்டுள்ளன. இனிநடைபெறும் எந்தவொரு தேர்தலிலும்ஐக்கியதேசியக்கட்சிபெருவெற்றிபெறும் சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. ஆனால் சட்டவிரோத அரசின் கீழ் எந்தத் தேர்தலும் நடைபெற நாம் அனுமதியளிக்க முடியாது. இனிநடைபெறும்அனைத்துத்தேர்தல்களும் ஜனநாயக அரசின் கீழ்தான் இடம்பெறும் - என்றார்.

அரசதலைவருக்கு மனநோய் பீடித்துள்ளது என்று ஏற்கனவே அரசியல்வாதிகள் பலர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(4)




Nestle
NESPRAY
FortiGrow
முழு ஆடைப்பால்மா

பல தலைமுறைகளாக இலங்கை தாய்மார்களின் நம்பிக்கையை வென்ற நாமம் NESPRAY. இப்போது மீண்டும் முழு ஆடைப்பால்மாவாக உள்நாட்டு தூயப்பசும்பாலினால் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நெஸ்லேயின் சர்வதேச ரீதியிலான விசேட நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியாகும் நெஸ்பிறே முழு ஆடைப்பால்மா, கறந்தெடுக்கப்படும் தூயப்பசுப்பாலின் இயற்கை தன்மை மாறாது கல்சியம் மற்றும் மைக்ரோநியூட்ரியன்ட் பாதுகாப்புடன் விட்டமின் A மற்றும் D உள்ளீடுகளுடன் குழந்தைகளின் வளர்ச்சிக்கு போஷாக்கு ஊட்டமளித்திடும்.

நெஸ்லே, உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி மற்றும் விற்பனை நிறுவனமாக காணப்படுவதோடு உயர் தரமான பால் உற்பத்திக்காக அதன் நிபுணத்துவத்தை இலங்கையின் பால் பண்ணையாளர்களுக்கும் வழங்கிவருகின்றது. மேலும் சுவிஸ் மில்க் டிஸ்ட்ரிக்ட் பால் பண்ணை முறைகளை தழுவி இலங்கையின் சுமார் 20,000 உள்நாட்டு பால் பண்ணையாளர்களின் பால் உற்பத்தியை தரம் மற்றும் அளவின் அடிப்படையிலும் தினசரி- அதிகரித்து, உள்நாட்டு பாலின் தேவையை மேலும் அதிகரித்துள்ளது.

போஷாக்கு, சுவை மற்றும் நறுமணமிக்க நெஸ்பிறே முழு ஆடைப்பால் மாவினை நாடளாவிய ரீதியில் இப்போது கொள்வனவு செய்திட முடியும்.

Nestle
Good Food, Good Life

வியக்க வைக்கும் சலுகைகள் மொபிடெல் இடமிருந்து

Huawei Y5 Lite
ரூ.17,890
ரூ.14,950

Mobile ரவுட்டர்
ரூ.5,500* மட்டும்

மொபிடெல் Child watch
ரூ.6,030
ரூ.5,000

ஸ்மார்ட் ஹோம் டிவைஸ்களுக்கு 50% தள்ளுபடி

இச்சலுகை 31 டிசம்பர் 2018 வரை செல்லுபடியாகும்.

*முற்கொடுப்பனவு டேட்டா இணைப்புகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டுமே ரவுட்டர்கள் மற்றும் டொங்கிள்களுக்கான விசேட விலைகள் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட மொபிடெல் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

அரச வரிகள் மற்றும் தீர்வைகள் உண்டு.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Home ரவுட்டர்
ரூ.3,990* மட்டும்

டொங்கிள்
ரூ.1,990* மட்டும்

Sri Lanka Telecom Mobitel
4G

# நற்குணங்களை நாளும் நினைந்து நடப்போம்!

வ.மணிமாறன்

நல்லவற்றை நாளும் சொல்ல வேண்டி இருக்கிறது. ஒரு முறை நல்லதைச் சொன்னால் போதுமே என்ற எண்ணம் கூடத் தோன்றலாம். இன்றைக்கு உலகம் புதிதாக வளர்கிறது. புதிய உயிர்கள் தோன்றுகின்றன. புதிய நிகழ்வுகள் நடக்கின்றன. புதிய புரிதல்கள் ஏற்படுகின்றன. இன்று புதிதாய்ப் பிறக்கிறோம். சென்றது மீளாது. நேறறுச் சொன்னது நேற்றோடு நின்றுவிடுகிறது. எனவே இன்றும் சொல்லவேண்டி இருக்கிறது. என்றும் நல்லவற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். கேட்பதற்கான தேவையும் அவசியமும் இருந்து கொண்டே இருக்கின்றன.

குறிப்பாக இளைஞர்களுக்குச் சொல்லித் தர வேண்டிய செய்திகள், ஒழுக்கங்கள், உயர்பண்புகள் நிறைவாகவே இருக்கின்றன. நல்ல பண்புகளை நாளும் நினைவுபடுத்த வேண்டி இருக்கிறது. நான்மணிக்கடிகை என்னும் நூல் நான்கு நல்ல மணிகளை ஒவ்வொரு பாடலிலும் அமைத்து அறிவூட்டும் இலக்கியமாகும். அதில் ஒரு பாடல் சிறந்த கருத்துக்களை எடுத்துக்கூறுகிறது. அந்தப் பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

*திருஒக்கும் தீதுஇல் ஒழுக்கம். பெரிய*
*அறன் ஒக்கும் ஆற்றின் ஒழுகல் பிறனைக்*
*கொலைஒக்கும்கொண்டுகண்மாறல்புலைஒக்கும்*
*போற்றாதார் முன்னர்ச் செலவு!*

இந்தப் பாடலில் நான்கு நல்ல நயமான கருத்துகள் இடம்பெற்றுள்ளதை காண முடிகிறது. அவை வருமாறு,


**நல்லொழுக்கத்தோடு இருத்தல்!**

தீமையைத் தராத நல்ல ஒழுக்கம் செல்வம் போன்றது என்கிறது. 'திருஒக்கும் தீதுஇல் ஒழுக்கம்' என்ற இந்தப் பாடலடி. இந்தப் படல் வரி செல்வம், செல்வமின்மை, ஒழுக்கம், ஒழுக்கமின்மை என்ற இரு இணைகளை முன்வைத்து எழுதப் பெற்றுள்ளது. மிகுந்த செல்வம் என்பது ஒழுக்கம் என்றால் ஒழுக்கம் இருப்பவரிடத்தில் செல்வம் இருக்காது என்பது பொருளாகிறது. மிகுந்த செல்வம் உடையவரிடத்தில் ஒழுக்கம் இருக்குமா என்ற ஐயத்தையும் இது கிளப்பி விடுகிறது. செல்வம் என்பது தீமை தராத நிலையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும். ஒழுக்கம் என்பது நன்மையாக இருந்தால் அது செல்வத்தை ஈட்டித்தரும் வழி என்று புரிந்து கொள்ளவேண்டும். நடந்து செல்பவர் இடத்தில் கொஞ்சம் பணம் சேர்ந்து விட்டால் அவர் மகிழுந்தில் செல்ல முயற்சி செய்கிறார். நடப்பது நன்மை என்ற அவரின் உடல் நன்மையும் கெடுகிறது. பணம் வந்துவிட்ட காரணத்தால் அவர் மகிழுந்தில் செல்ல எண்ணுவதால் செலவும் கூடுகிறது. நடந்து செல்பவர் செல்வம் வந்த போதும் நடந்தே சென்றால் பணமும் செலவாகாது. ஒழுக்கமும் பாழ்படாது. இதுவே 'திரு ஒக்கும் தீது இல் ஒழுக்கம்' என்பது.

**கடமையைத் தவறாமல் செய்தல்!**

ஒருவர் பெரிய பெரிய அறங்களை எல்லாம் செய்யவேண்டாம். தன் கடமையைச் சரிவர ஒழுக்கமாகச் செய்தால் அதுவே அறம் என்கிறது நான்மணிக்கடிகை. கடமைகளைச் சரிவரச் செய்பவன் வேறு அறங்களைச் செய்யவேண்டுவது இல்லை என்று குறிக்கிறது 'பெரிய அறன் ஒக்கும் ஆற்றின் ஒழுகல்' என்ற பாடலடி. ஆசிரியர் ஒருவர் தன் ஆசிரியக் கடமையைக் குறைவில்லாமல் செய்ய வேண்டும். மாணவர் தான் படிக்கும் கடமையைக் கீழ்படியும் கடமையை மறவாமல் ஆற்றவேண்டும். மருத்துவர் தம்மிடம் வந்த நோயாளியைக் காக்க வேண்டும். நீதிபதி சரியான நீதி வழங்க வேண்டும். அவரவர் அவரவர் கடமையை ஆற்றினால் அதுவே மிகச்சிறந்த அறம் என்கிறது நான்மணிக்கடிகை.

> ஆசிரியர் ஒருவர் தன் ஆசிரியக் கடமையைக் குறைவில்லாமல் செய்ய வேண்டும். மாணவர் தான் படிக்கும் கடமையைக் கீழ்படியும் கடமையை மறவாமல் ஆற்றவேண்டும். மருத்துவர் தம்மிடம் வந்த நோயாளியைக் காக்கவேண்டும். நீதிபதி சரியான நீதி வழங்கவேண்டும். அவரவர் அவரவர் கடமையை ஆற்றினால் அதுவே மிகச் சிறந்த அறம் என்கிறது நான்மணிக்கடிகை.



**நண்பர்களை என்றும் நட்புடன் அமைத்துக் கொள்ளுதல்**

நண்பர் ஒருவரை தம்முடன் இணைத்துக்கொண்டு பின்பு அவனை விட்டுநீங்குதல் என்பது உயிர்க்கொலை புரிந்ததற்குச் சமமாகும். நண்பர்களை ஆராய்ந்து நட்பு கொள்ளவேண்டும். நட்பு கொண்டபின் அந்த நண்பனை விட்டுவிடுதல் என்பது மிகப்பெரும் குற்றம். 'நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள் பவர்க்கு!' என்கிறார் வள்ளுவர்.

**போற்றார் முன் செல்லுதல் இழிவாகும்!**

தம்மை போற்றாதவர்கள் முன்னர் செல்வது இழிவைத் தரும். தம்மை மதிக்காதவர்களிடத்தில் மதிப்பை எதிர்பார்ப்பது தவறு. மதியாதவர்கள் தலை வாசல் மிதியாமை கோடி பெறும். மதிக்காதவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து நாம் விலகி விடுவது என்பது நமக்கு நன்மையைத் தரும். அவர்களும் நன்மை பெறுவார்கள். வெறுப்பவர்கள் என்று சொல்லாமல் ஏன் போற்றாதவர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. வெறுப்பவர்கள் என்ற நிலைக்கு யாரையும் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் உள் கருத்தாகும்.

நல்ல ஒழுக்கமுடன் இருத்தல், கடமையைத் தவறாமல் செய்தல், நண்பர்களை என்றும் நட்புடன் அமைத்துக் கொள்ளுதல், போற்றாதவர் பக்கம் செல்லாதிருத்தல் என்பன நான்மணிக்கடிகை காட்டும் நான்கு நற்குணங்கள் ஆகும். இந்த நற்குணங்களை நாளும் நினைந்து நாம் நடக்கவேண்டும். மற்றவர்களுக்கும் இதனை அறிவித்து அவர்களையும் நல்வழிப்படுத்த வேண்டும்.

## வித்தக விநாயக விரைகழல் சரணே!



தந்த மொடித்துத்தம் தண்கருணைத்
திறங்கொண்டு
முந்தி வரைந்தானோர் நற்பெருங்
காவியம்!
தொந்தித்தன் முன்னாலே பந்தைப்போல்
நெளிந்தாடத்
தும்பிக்கை வளைத்தத்தை ஓவென்று
ஆக்கினான்!
விந்தை விலங்கொத்த உருவத்தைக்
கொண்டிங்கே
நஞ்சிந்தைச் சிந்திக்க நற்பாடம்
நவில்கின்றான்!
பஞ்சத்தைப் பேராழிப் போல்கொண்ட
நெஞ்சமே,
நஞ்சுண்ட கருங்கண்டன் றன்பிள்ளை
நம்நெஞ்சுள்
வஞ்சத்தை வாழாது ஓட்டவே வழுத்துவாம்!

***சு.புருஷோத்தமன்***


## நாவலன் எனும் பாவலன்!

சைவமும் தமிழும்
தழைத்தோங்க
வந்துதித்த உத்தமனே
அன்பையும் அருளையும்
திருவாய் உவந்து
வாழ வைத்த பாவலனே

சைவநெறி இயம்பும் ஒழுக்கமதைக்
கடைப்பிடித்த வித்தகனே
தமிழர்தம் வாழ்வை மேலோங்கச்
செய்த பாதுகாவலனே
நானிலம் சிறக்க நூலமுதம் தந்து
அறிவமுது ஊட்டிய போசகனே

அன்பே சிவமாம் என்று உரைத்து
அல்லும் பகலும் உழைத்த திருத்
தொண்டனே
சமூகப் பேரொளியாய் என்றும்
பொலிக நின் திருநாமம்!

***சிவரம்யா***



## வீடு வாடகைக்கு

வெளிநாட்டிலிருந்து / வெளி இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் வருவோர் தங்குவதற்கு ஏற்ற சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு நாள் வாடகைக்கு உண்டு.

(A/C and Non A/C Rooms)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

மூன்று மாதம் நிரம்பிய நல்ல இன லப்றடோர் நாய்க்குட்டி (பெண்) விற்பனைக்குண்டு.

T. P : **077 429 1246, 077 633 3000**

## பயிற்சியுடன் ஆங்கில ஆசிரியர்களுக்கான

(TRAINEE ENGLISH TEACHER) **வேலைவாய்ப்பு**

- பயிற்சியின் பின் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் வேலைக்கு அமர்த்தும் முகமாக ஆங்கில ஆசிரியர்கள் சேர்த்து கொள்ளப்படுகின்றனர்.
- வயது 18 - 28க்கு உட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

*தூர பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு

K & K Ads

நேர்முகப்பரீட்சைக்கு உங்களது பெயர் மற்றும் விலாசத்தை SMS ஊடாக அனுப்பவும். **0785 880 680**

INTERNATIONAL TEACHER TRAINING ACADEMY

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் பட்டதாரிக் கற்கைகள் பிரிவு திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

நீங்களும் ஒரு பட்டதாரி ஆகலாம்!

**Fast Track Degree Programme - One Year**

**கல்வியாண்டு 2019 / 2020 (ஆங்கிலம் / தமிழ்)**

கற்கைகள்

*BA in English
* BBA in Management
*BA in Education
*BSc in Engineering
* BSc in Psychology
*BA in Fine Arts
* BSc in Computer Science
*BSc in Nursing

UGC APPROVED

- அடிப்படை தகைமை GCE (A/L) விரிவுரைகள் வாரத்தில் ஒருநாள்
- விண்ணப்ப முடிவு திகதி :- 21.12.2018


புதிய பிரிவுகள் ஆரம்பம் – 05.01.2019

குறிப்பு:- கல்வியாண்டு 2017/ 2018 இல் இதுவரை ஆய்வுச்சுருக்கம், ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்காதவர்களுக்கான இறுதித் திகதி 31.12.2018

(CS21676)(11,17)

**IPS City Campus**
கலாநிதிN.தணிகாசலம்பிள்ளை - இணைப்பாளர்
T.P:- 021 450 8489/ 077 602 1794
Email:- degreeinfo08@gmail.com

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தம்பியப்பா சிதம்பரநாதன்**

(ஓய்வுபெற்ற திட்ட அமுலாக்கல் அதிகாரி,
முன்னாள் நியாப் திட்ட உதவி அதிகாரி)

மலர்வு 25.06.1945 | உதிர்வு 20.11.2017

திதி:- பூர்வபட்ச துதியை

ஆண்டொன்று ஓடியது விண்ணில்
ஆறாத துயரங்கள் எம்மில்...
ஒரு வருடம் உரைத்துச் சென்றது
உம்மைப் போல் ஒருவரில்லையென....
உம் அன்பு மழையில் நனைந்தோம் அன்று
கண்ணீர் மழையில் நனைகின்றோம் இன்று....

இல.68, கருவேப்புலம் வீதி, கொக்குவில்.
நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.
(CS21685)(11,17)

## விற்பனைக்கு

42 ஆசனங்கள் உடைய 2010 ஆம் ஆண்டு **Lanka Ashok Leyland A/C Bus** விற்பனைக்குண்டு.

**077 301 9943** (CS/21669)(11,17)

## காணிவிற்பனைக்கு

கைதடி நுணாவில் A 9 வீதி அறுகுவெளிக்கு அருகில் 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**076 716 2036** (AJA/4654)(11,17)

## காணி விற்பனைக்குண்டு

நீர்வேலி அத்தியார் கல்லூரி முன் வீதியில் 2¼ பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

(CS 21686)(04,17)

**077 539 5560/ 076 101 9347**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் உள்ள வீடு ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.
**வேலை நேரம் -**
காலை 8.00 - மாலை 3.00.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்

**077 361 1282** (CS/21698)(11,17)

## சமையல் ஆள்தேவை

றைஸ் அன் கறி, கொத்து றொட்டி, பிறைட்றைஸ் போட தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS 21699)(04,17)

**076 114 9412/ 021 226 5042/ 077 741 2713**

## விற்பனை உதவியாளர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் தேவை

கொழும்பில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு ( **Super Market**) தங்கி நின்று கடமையாற்ற 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் உடைய பணியாளர் உடன் தேவை.
தங்குமிட வசதி வழங்கப்படும்.
சம்பளம் 40,000/-

(CS21695)(11,17) **077 477 3481**

## மணமக்கள் தேவை

IT படித்த மணமக்களுக்கு வெளிநாட்டில் உள்ள மணமக்கள் தேவை. இலங்கையில் படித்த மணமக்களுக்கு இலங்கையில் உள்ள மணமக்கள் தேவை. பிறப்பிடம் - கண்டி. வேலை - கட்டார் எக்கவுண்டன்.
1976 இல் உள்ள மணமகனுக்கு இலங்கையில் உள்ள மணமகள் தேவை. சீதனம் இல்லை.

ஜெயக்குமார் - **077 535 3289, 0094 7672 50144, 077 853 3483, 0049 162 746 2625**
(CS21695)(11,17)

## ஜீப் வண்டி தேவை Mitsubishi 4DR5 Jeep

கைவிடப்பட்ட , துருப்பிடித்து பாவனையில் இல்லாத அல்லது உபயோகிக்க முடியாத நிலையில் உள்ள Mitsubishi 4DR5 ஜீப் (J24 அல்லது J44) தேவை. வாகனத்தின் பதிவு புத்தகம் இருப்பது விரும்பத்தக்கது.

(N 10952)(04,17)

தொடர்பு: **077 716 0469**

## மணமகன் தேவை

**வயது** :44
**தொழில்** : அரச உத்தியோகம் (முகாமைத்துவ உதவியாளர்) யாழ்ப்பாணம்.
**சமயம்** : கிறிஸ்தவம் (R.C) றோ.க கௌரவகுடும்பம்
**உயரம்** : 5' 2"
குறுகிய காலத்தில் விவாகரத்து பெற்றவர் - பிள்ளைகள் இல்லை

**077 613 9378**

## வைத்தியம்

முள்ளந்தண்டு நசிவுகள் /தேய்மானங்கள் மற்றும் கை/கால் மூட்டு தேய்மானங்களிற்கு சத்திர சிகிச்சை செய்ய பயமா ? சத்திர சிகிச்சையின்றி நிவாரணம் வழங்கப்படும். மேலும் உடல்பருமன் குறைத்தல் / கூட்டுதல் (வயிறு / மார்பு/கை), தலைமுடி உதிர்வு , குழந்தையின்மை, ஆண்மை குறைபாடுகள், Prostrate, (Ulcer) குடல்புண், சலரோகம், ஆஸ்துமா போன்ற எல்லாவகையான நோய்களுக்கும் நிரந்தர தீர்வு வழங்கப்படும்.
**(முன் பதிவு அவசியம்)**

(CS 17302)(04,17)

**Shan's Health Care**
K.K.S Rd, Kokuvil
**077 035 7307 / 077 407 2058**

## பணியாளர் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு**
1) கணினி தரவு பதிவாளர் **(Computer data Operator)**
2) களஞ்சிய பணியாளர் **(Store keeper)**
ஆகிய பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.
**குறிப்பு - பெண்கள் மட்டும்.**

(CS20986)(11,17)

அத்தியடி நியூ றோட், யாழ்ப்பாணம்.
**076 752 3994**

## காணவில்லை



ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த நாகராசா புஸ்பமலர் என்பவரை (07.12.2018) வெள்ளிக்கிழமை யிலிருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்காணும் இலக்கத் திற்கு தகவலை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் - மகன் தொடர்பு - 077 8649 747, 077 271 9817, 076 900 7460**

## வேலைவாய்ப்பு

IDEAL FIRST CHOICE

**Auto A/C Technician, Auto Electrician, Auto Mobile Mechanic, Lubricant Technicians**

- 45 வயதுக்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.
- NITA, German Tech, VTA அல்லது அதற்கு சமமான அங்கீகாரம் உள்ள நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள்.
- தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியமும், மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- உங்கள் **CV** ஐ **careers@idealgroup.lk** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

(C32185)(10)

**No.63, நெடும்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.**
**Tel: 070 297 2252**

## மரண அறிவித்தல்கள்

### இரட்ணசபாபதி விமலன்

**இன்பமாகி மண்ணில்:** 27.12.1971
**துன்பமாகி விண்ணில்:** 07.12.2018




மாத்தறையைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு வற்றாப்பளையை வசிப்பிடமாகவும், தற்போது வவுனியா கள்ளிக்குளம் மாமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணசபாபதி விமலன் (07.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரட்ணசபாபதி தம்பதியரின் அன்புமகனும் சர்மிளாவின் அன்புக் கணவரும், தேசிகன், சன்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.12.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வவுனியா கள்ளிக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கள்ளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிராம அபிவிருத்திச் சங்கம், கள்ளிக்குளம், வவுனியா.**
**தகவல் : குடும்பத்தினர்.**



**கபிரியேற்பிள்ளை மனோவேதகாவலன்** (ஏழாலை கிழக்கு)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், 1A சோமசுந்தரம் அவனியு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேற்பிள்ளை மனோவேதகாவலன் கடந்த (07.12.2018) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை செல்லமணி தம்பதியரின் அன்பு மகனும் யேசுகாவலன் (கனடா), சாந்தமணி (கனடா), காலஞ்சென்ற ஆன்ஞானமணி, ஞானகாவலன் (தயா, கனடா), ஜெயமணி (கனடா), காலஞ்சென்ற யோதிகாலவன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் கலாவதி (கனடா), காலஞ்சென்ற அருட்பிரகாசம் மற்றும் தேவதாசன் (பாபு அன்றோ எலக்றிக்கல், யாழ்ப்பாணம்), சுஜீபா (கனடா), ஜோசப் தனிநாயகம் (கனடா) ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.12.2018) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**1 A , சோமசுந்தரம் அவனியு, யாழ்ப்பாணம்.**
**தகவல் : தேவதாசன் (பாபு) மைத்துனர் 077 729 6999**

கட்டுரை

ஸ்டோஸ்வாமி



# சிக்கியது சீனி வரி!

அண்மையில் உருவாகி மறைந்த புதிய அமைச்சரவையின் குறுங்கால ஆயுளுக்குள் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. பொருளாதார ரீதியாக மக்களைக் கவரக்கூடிய மற்றும் முன்னைய கூட்டாட்சி அரசைக் குறைத்து மதிப்பிடத்தக்க வகையான வரிச் சலுகைகளும் அதில் உள்ளடங்கியிருந்தன. பொதுத்தேர்தல் ஒன்றுக்கான பலமான சாத்தியம் எதிர்வுகூறப்பட்டிருக்கும் நிலையில், குறுகிய கால அவகாசத்தில் வழங்கப்பட்ட இந்தச் சலுகைகள் ஒருவகைக் கட்டியம் கூறல் நடவடிக்கையாகவே கொள்ளப்பட்டன. இதன் தொடர்ச்சியாகச் சீனி வரியிலும் குறைப்பு ஒன்று அறிவிக்கப்பட்டிருந்தது. புதிய பொருளாதார அமைச்சராக விளங்கிய மஹிந்த ராஜபக்ச, இனிப்பூட்டப்பட்ட மென்பான உற்பத்திக் கைத்தொழில்துறையினருடன் மேற்கொண்டிருந்த சந்திப்பை அடுத்து குறித்த வரிக்குறைப்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், இனிப்பூட்டப்பட்ட பானங்களுக்கு 40வீத வரிக்குறைப்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே நடைமுறையிலிருந்த இனிப்பூட்டப்பட்ட பானங்களுக்குச் சேர்க்கப்படும் ஒவ்வொரு கிராம் சீனிக்கும் 50 சதம் வரி என்கிற நடைமுறை மாற்றப்பட்டு, இப்போது அதில் 20சதம் குறைக்கப்பட்டு, 30 சதமாகக் தொடரப்பட்டிருந்தது.

**சீனி வரியின் அறிமுகம்**

சுவையூட்டிய அல்லது சீனி சேர்த்த பானங்களை அதீதமாகப் பருகுவது நீரிழிவு, உடற்பருமன் மற்றும் பற்சொத்தை போன்ற சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முதன்மைக் காரணியாக விளங்குவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிடுகிறது. பொதுமக்களின் சீனி நுகர்வைக் கட்டுப்படுத்தும் முகமாகச் சீனி சேர்த்த பானங்களுக்குச் சிறப்பு வரி ஒன்றை அறவிடும் நடைமுறை பல்வேறு நாடுகளிலும் அறிமுகப்படுத்



தப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கையில் குறித்த வரி, பாதீட்டு முன்மொழிவுகளுக்கு அமைவாக 2017ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து நடைமுறைக்கு வந்தது. கூட்டரசின் சுகாதார அமைச்சராகப் பதவி வகித்திருந்த பல் மருத்துவ நிபுணர் மருத்துவர். ராஜித சேனாரத்ன. குறித்த வரியை நடைமுறைப்படுத்துவதிலும் அறவிடுவதிலும் பிடிவாதமாயிருந்தார். குறித்த நடவடிக்கைக்கு அரசதலைவரின் ஆதரவும் கிடைத்திருந்தது.

**வரிக்குக் கிடைத்த பலன்**

சீனி சேர்க்கப்பட்ட பானங்களின் நுகர்வைப் பொதுமக்களிடையே குறைக்கும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட வரிக்குக் கிடைத்த பலன், இலங்கையின் முன்னணி (காபனீரொட்சைட் ஊட்டப்பட்ட) மென்பான உற்பத்தியாளரான சிலோன் கோல்ட் ஸ்ரோர் நிறுவனத்தின் 2017-2018 ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டிருந்தது. குறித்த வரியின் காரணமாக மென்பானங்களின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து அந்த வகைப் பானங்களின் நுகர்வில் வீழ்ச்சி காணப்பட்டிருந்தது.

2016-2017ஆம் ஆண்டோடு ஒப்பிடுமிடத்து 2017-2018ஆம் ஆண்டில் இந்தப் பானங்களினால் ஏற்படும் வருவாயில் 2 வீத வீழ்ச்சி காணப்பட்ட அதேவேளை, வரிக்கு பிந்திய இலாபத்தில் 34 வீத வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தது. 2016- 2017ஆம் ஆண்டில் மென்பான உற்பத்தியானாலான வருமானம் 13 ஆயிரத்து 971 மில்லியன் ரூபாயாக காணப்பட்டதுடன் இது 2017 - 2018 இல் 13 ஆயிரத்து 649 மில்லியன்ரூபாயாகக்குறைவடைந்திருந்தது. 2ஆயிரத்து 430 மில்லியன் ரூபாயாக 2016-2017 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வரிக்குப் பிந்திய இலாபம் சீனி வரி காரணமாக 2017 - 2018 காலப்பகுதியில் ஆயிரத்து 600 மில்லியன் ரூபாய்களாக வீழ்ச்சிப் போக்கை காட்டியிருந்தது. சீனி வரியின் வருகை காரணமாக மென்பானங்களுக்கான விலையில் சராசரியாக 33 வீத அதிகரிப்பு செய்யப்பட்டிருந்ததாக சுட்டிக் காட்டப்படுகிறது.

**'மைலோ' பானத்தின் மீது எகிறி விழுந்த அரச தலைவர்**

2017ஆம் ஆண்டின் உலக நீரிழிவு தின நடைபவனியில் கலந்துகொண்டிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அங்கு வழங்கப்பட்ட மைலோ மென்பானத்தினைக் கையிலெடுத்து அதனது சீனி உள்ளடக்கம் தொடர்பில் கர்ஜனை செய்திருந்தார். 'மைலோ' மென்பானத்தின் சீனி உள்ளடக்கம் 16.5 வீதம் என குறிப்பிட்ட அரச தலைவர், அது 5 வீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டதுடன் அவ்வாறு அமையாத பட்சத்தில் அதற்கேற்ற வகையில் வரிகள் அறவிடப்படும் என்றும் கூறியிருந்தார்.

**தொற்றா நோய்களின் தாக்கம்**

தொற்றா நோய்களின் தாக்கம் காரணமாக அதிக அச்சுறுத்தலை இலங்கை எதிர்கொள்வதாகக் கூறப்படும் அதேவேளை, நிகழும் இறப்புக்களில் 75 வீதமான இறப்புகளுக்கும் 20 வீதமான (Premature) இளவயது இறப்புக்களுக்குமான சூத்திரதாரியாக தொற்றா நோய்களே விளங்குகின்றன. இதில் சீனி மற்றும் கொழுப்பை அதிகளவில் கொண்ட உணவுகளை உள்ளெடுப்பதன் காரணமாகவும் போதுமான அளவு சரீரத் தொழிற்பாட்டை நிகழ்த்தாததன் காரணமாகவும் தொற்றாநோய்கள் அதிகளவில் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது.

**உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை**


இனிப்பூட்டிய பானங்களுக்கு வரி அறவிடுவது தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கைகள், குறித்த வரியிடலை ஆரோக்கியமான நடவடிக்கையாகவே சுட்டிக்காட்டுகின்றன. அதிலும் இலங்கை தொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் 100 மில்லி லீற்றர் பானத்துக்கு 6 கிராம் என்கிற நுழைவாய் மட்ட அளவுக்கு அப்பால் 100 மில்லி லீற்றர் பானத்துக்குச் சேர்க்கப்படுகின்ற ஒவ்வொரு கிராம் சீனிக்கும் ஒரு ரூபா வரி விதிக்குமாறு விதப்புரை வழங்கியிருக்கிறது. அவ்வகையான வரியிடல், இனிப்புச் சுவையூட்டிய பானங்களின் விலையை 24 வீதத்தினால் அதிகரிக்கும் என்றும் பான நுகர்வை 26 வீதத்தால் குறைக்கும் என்றும் வரி வருமானத்தினை 5.3 பில்லியனினால் அதிகரிக்கும் என்றும் எதிர்வுகூறியிருந்தது.

முன்னைநாள் சுகாதார அமைச்சரான மைத்திரிபால சிறிசேன , மகிந்த அரச தலைவராக விளங்கிய காலத்தில் பல்தேசியக் கம்பனிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் தமது கைகள் கட்டப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். எனினும் தற்போதைய நிலையில் அதுவும் நிலமை தலைகீழாக உள்ள கட்டத்தில் சீனி வரி தொடர்பாக மகந்த எடுத்திருக்கும் வரிக்குறைப்பு தீர்மானம் தொடர்பில் அரசதலைவர் தரப்பிடமிருந்து எதிர்ப்பு எதுவும் இதுவரை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நாட்டுமக்களின் நலனுக்குத் தீங்கிழைக்கக்கூடியதும் இலாபமீட்டும் நிறுவனங்களுக்கு ஆதரவானதுமான தீர்மானத்தினால் முன்னைய அரசினால் நடைமுறைக்கிடப்பட்ட நடவடிக்கைகளில் முன்னுக்குபின் முரணான நிலமை தற்போது தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. புகையிலை மருந்துப்பொருள்கள் மற்றும் சீனி உள்ளடங்கிய பானங்கள் தொடர்பில் இறுக்கமான நடைமுறைகள் தொடர்ச்சியாக நடைமுறைப்டுத்தப்பட்டு வந்த நிலையில் குறுநாள் அரசினால் சீனி வரி தொடர்பில் எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானமும் அதற்கு அரசதலைவர் காண்பித்திருக்கும் 'கப்சிப்' நிலைவரமும் ஆரோக்கியமற்ற தொடர்ச்சிகளுக்கான ஆரம்ப கட்டமாகவே புலப்படுகின்றன.

சுவையூட்டிய அல்லது சீனி சேர்த்த பானங்களை அதீதமாகப் பருகுவது நீரிழிவு, உடற்பருமன் மற்றும் பற்சொத்தை போன்ற சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முதன்மைக் காரணியாக விளங்குவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிடுகிறது. பொதுமக்களின் சீனி நுகர்வைக் கட்டுப்படுத்தும் முகமாகச் சீனி சேர்த்த பானங்களுக்குச் சிறப்பு வரி ஒன்றை அறவிடும் நடைமுறை பல்வேறு நாடுகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

# ஆற்றல் தரும் முதுசொத்தின் ஏற்றங்களை போற்றுவோம்



விழுதாக எழ வைத்த
விருட்சத்தின் விளை நிலத்தை
இழுக்காக எண்ணத் தகுமோ - அது
இங்கிதப் பண்பாகுமோ?
தொழுதேற்றித் துதி பாட
தோன்றிய முதுசொத்தை
இழிவாக்கிப் புறந்தள்ளவோ- நம்
இதயப்பூமி இதைத் தாங்குமோ?

எழும் மனித ஏற்றத்தின்
ஏணியாய் நின்றோரை
வழுவாக்கிப் பழி சொல்லியே
வசைபாடி வருத்தல் தகுமோ?
தொழுதேற்றி முழுமையின்
தோன்றல்கள் புகழ்பாட
எழுக எம் சந்ததியே - எம்
ஏற்றமவர் சந்நிதியே

அயராது நாமுயர அத்தனையும் பெறச் செய்து
துயர் தரா வளர்த்தவரை தூர வைத்துப் பார்க்கலாமோ
தயவின்றித் தயங்காமல் தள்ளாடும் வயதினிலே
'வயோதிபர் மடம்' என்ற வட்டத்துள் வாட்டலாமோ?

ஊட்டி வளர்த்து எமை உத்தமராய் நல்வாழ்வின்
ஓட்டத்துள் நன்கிணைய ஒளிரவைத்த முதுசொத்தை
நாட்டி வைத்த நாயகரை நட்டாற்றில் விடலாமோ
நீட்டும் கரம் நிராகரித்து நிழல்தர மறக்கலாமோ?

வித்திலே நீரூற்றி விளைவாக்கி விருட்சமாய்
இத்தரையில் உயர்த்திவைத்து இனிதாக வாழ்வுதந்து
வித்தகராய் உயர்த்தி எமை விற்பன்னர் ஆக்கி வைத்த
உத்தமரின் உன்னழகை உயர்வாக நாம் மதிப்போம்

நரைகண்டு பொலிவுற்று நலிவுற்ற போதிலும்
கரைகாணும் கலங்கரை விளக்காக ஒளிர்வர்
கறைபட்டு சிதைபட்டு கலங்குன்ற போதிலும்
நிறைவான பலம் தந்து நிழலாகி நிற்பர்

ஆற்றலும் அறிவும் தந்து
ஆளுமைச் செழுமை கொண்டு
தேற்றி வைத்த செம்மல்களை
தேடாமல் மறப்போமா?
நாற்றாய் எமை நாட்டுவித்து
நாமுயர வளம் தந்து
ஊற்றாகி எம்முள்ளே
உறைந்தவரை மறுப்போமா?
காற்றாய் மூச்சாய் - எம்முள்
கலந்துவிட்ட பொக்கிசங்கள்

ஏற்றம் தந்த ஏணிகள்
எழிலுடன் வளம் பெறட்டும்
மாற்றம் எது வரினும்
மாறிடா மனங்களாய் நாம்
போற்றிடுவோம் முதியோரை
பொக்கிசம் எம் முதுசொங்கள்

கவிதை

மானியூர் ரட்ணேஸ்

## சொற்சிலம்பம் போட்டி இல: 550

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| | ■ | 10 | | ■ | 11 | | ■ |
| 12 | | | ■ | 13 | | ■ | 14 |
| 15 | | | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | | 19 | | |
| ■ | 20 | | ■ | 21 | | 22 | ■ |
| 22 | | ■ | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:..................................................
முழுமையான தபால் விலாசம்: ...............................
..................................................................
கையொப்பம்:.........................................................

### இடமிருந்து வலம்

1. காப்பியக் கதாபாத்திரம்
5. பாய்
7. குதிரை, மான் போன்றவற்றின் பெண் குட்டி
8. கலையை இரசிப்பவள்
10. மறி
11. பழம்
12. நுண்ணிய துணிக்கை
13. பயிரோடு வளரும் வேண்டாத தாவரம்
15. குறளைத் தந்தவர்
17. ஒரு குறி கணிதத்துடன் தொடர்பானது
18. வாசிக்கும் இடம்
20. ஒரு தமிழ் மாதம்
21. இசையோடு பாடுவது
22. சத்தம்
23. தாமரை

### மேலிருந்து கீழ்

1. சகலருக்கும் சமமாக அனைத்தும் கிடைப்பது.
2. அடையாளம்.
3. உலோகத்திலானது, தட்டையாக வளைத்தால் வருவது.
4. மஜ்னு மனம் கவர்ந்தவள்.
5. அடுப்பங்கரையை இப்படி அழைப்பர்.
6. அதிர்ந்து போய் நில்
9. குழப்பம்
10. விலைக்கழிவு
13. கருத்தரித்த நிலை
14. தொடக்கம்
16. (மதுசாரம், சாராயம் என்பவற்றை) பிரித்தெடு
17. இணக்கம்
19. ஒருவரின் குண இயல்பு
20. அவா

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 548 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சிவதனுசு (5) மாதா (7) தடம் (8) பகர்வு (10) பருத்தி (11) பரிதி (13) திரைதல் (15)ரசி (16) கூரை (17) கட (18)தகுதி (20) கரம்குவி (22) கண்டி (23) வில்லன்

### மேலிருந்து கீழ்

(1) சிதம்பரம் (2) வட (3) தம்பதி (4) சுபத்திரை (5) மார் (6) தாவுதல் (9) கதிரை (12) ரிசி (14) தரகு (16) கூடம் (17) கரடி (18) தவில் (19) திறன் (20) கண் (21) குவி

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 548இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
அ.உமாசிறி,
சரஸ்வதி வீதி,
பட்டிதோட்டம், மன்னார்.

**2 ஆம் பரிசு**
செல்வி ஸ்ரீ துஷாரா,
ஆண்டு 13B யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**3 ஆம் பரிசு**
செ.விநாயக,
வாணி அகம்,
நவாலி தெற்கு, மானிப்பாய்

**4 ஆம் பரிசு**
த.கிருஷாந்தினி,
இல.03ஆம் குறுக்குத்தெரு,
உதயபுரம், யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
த.ஸ்ரீதரன்,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

### பாராட்டுப் பெறுவோர்

க.கல்யாணி,
இல.22/4
3ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை.

அ.ஆதர்சன்,
இல.305 A இருபாலை வீதி,
கோண்டாவில்.

த.பரமேஸ்வரன்,
உபதபாலகம்,
கந்தரோடை, சுன்னாகம்.

**சொற்சிலம்பம் போட்டி இல.550**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (19.12.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.550 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.12.2018ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 547 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3119 திகதி: 2018.12.08 சனிக்கிழமை

SATURDAY FORTUNE

பச்சை

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|
| 03 04 12 42 H | 54 | 53,873,460/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 458

வர்ணம் : இளஞ்சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 2018.12.08

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,173,410/-

வெற்றி இலக்கங்கள்: 12 31 42 53

ஆங்கில எழுத்து: B

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▸ 202

சீட்டிழுப்பு திகதி ▸ 08.12.2018 சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| B | 47 48 64 | 01 |

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ.16, 919, 280 /=

2018.12.13 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை

திருமதி தர்சினி முரளிதரன்

அவர்களின் அன்புத் தந்தை

**நாகமுத்து அருணாசலம்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**

(CS 21694) (14.17)

## கண்ணீர் காணிக்கை



எமது பாடசாலை

ஆரம்பக்கல்வி ஆசிரியை

**திருமதி கௌசலா இராகவன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

**துயர்பகிரும்**

**ஆசிரியர் நலன்புரி சங்கம்**

**யா/உடுவில் மான்ஸ் ம.வி**

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையர்க்கரசி திருநாவுக்கரசு



மலர்வு 25.03.1945 உதிர்வு 01.12.2018

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி திருநாவுக்கரசு கடந்த (01.12.2018) சனிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் செந்தூர்வாசன், புவலோஜினி, சிவலோஜினி, சத்தியலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் பகீரதன், ஜெகன்மோகன், தீபா, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் மிதுனகா, விபிசஷன், அபினா, அபிலாஷ்சன், அம்சவிருதன், அம்சத்வனி, அனிஷா, அனோமிகா, ஹரிஸ்கர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.12.2018) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு லண்டனில் உள்ள Crevesend Crematorium இல் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உறவினர்.

T.P.: 447956162681

## கடை வாடகைக்குண்டு

பரமேஸ்வரா சந்திக்கு அருகில் 1 ஆம் மாடியில் அலுவலக பயன்பாட்டிற்கு அல்லது Fancy, Beauty Parlour ஏற்ற கடைகள் வாடகைக்குண்டு.

**தொடர்பு - சிறி 076 685 2529**

## கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு

யாழ். நகரில் இருந்து 3km தூரத்தில் பலாலி வீதியில் அமைந்துள்ள கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு. குழுவாக சேர்ந்திருக்கும் மாணவர்கள் மற்றும் அலுவலக உபயோகம், கல்வி நிலையங்களிற்கு உகந்தது.

**தொடர்பு - 076 546 0811**

## வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலிக்கு அருகில் மூன்று அறைகள், Hall, சமையலறை உள்ளடங்கலான வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பத்திற்கு (மூன்று அல்லது குறைவான) ஏற்றது குளியலறை இணைப்பு இல்லை. பொருத்தமானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

**ராசன் - 076 292 4387**

## வீடு வாடகைக்கு

யாழ். இந்து ஆரம்பபாடசாலைக்கு மிக அருகில் வாகனதரிப்பிட வசதியுடன் கூடிய களஞ்சியசாலைக்கு உகந்த மிகப்பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு - 077 016 1864**

## காணி விற்பனை

இராசபாதை வீதி, கோப்பாயில் 9 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 773 0567**

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, இருபாலையில் 4 3/4 பரப்பு, வணிக நோக்கிற்கு ஏற்றது.

**தொடர்பு - 077 810 1408**

## தரம் III அதிபர்கள் நியமனத்துக்கான தெரிவுக்குரிய போட்டிப் பரீட்சை 2019

மேற்படி பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் இருதினங்கள் நடைபெறும்.

**வளவாளர் : பேராசிரியர் மா.சின்னத்தம்பி**

**இடம் : CAPS NO. 52, பலாலி வீதி, திருநெல்வேலி. (Near Sampath Bank)**

**திகதி : 14, 17. டிசெம்பர். 2018**

ஆர்வமுடையவர்கள் தொடர்பு கொள்க.

முன்பதிவு செய்வது அவசியமானது.

*தொடர்புகளுக்கு,*

**0212216933, 0773867458.**

## மணமகன் தேவை

1983, அவிட்டம் யாழ்.பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டு தனியார் வங்கியில் உயர் பதவியில் கடமையாற்றி (CIMA, ACCA) தற்போது U.K இல் குடியுரிமை பெற்று Financial Accountan ஆகப் பணிபுரியும் ஆறு மாத காலத்தில் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை. மணமகன் தொழில் தகைமையுடைய (Professionally Qualified) பட்டதாரியாக இருத்தல் வேண்டும். லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, U.S.A இலங்கை ஆகிய நாடுகளின் மணமகன் கருத்தில் கொள்ளப்படும். (ACO 354)(14.17)

**077 337 5805**

## Study, Work & Live in CANADA

**விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி**

### Admission Interviews



By Founder Donatus Doss of Canadian College

CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES

**Available Courses**

- IT Programmes
- Business Programes
- Supply Chain & Logistics Management

Date : 12th December 2018

Time : 10.00am to 2.00pm

Venue : 4, IBC Road, Colombo 6.

Call : 0777 761 346

flex Institute

4, IBC Road, Colombo 6. Tel: 011 2364157

Hotline: 0777-761346

E-mail: flexinstitute04@gmail.com

Web: www.flexinstitute.lk

## வாகனம் விற்பனைக்கு உண்டு

நிறுவன பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள காகோ மொடல் அசோக் லேலண்ட் ரிப்பர் ஒன்று விற்பனைக்கு உண்டு. கொள்வனவு 03 கியூப். 54, 000 km மட்டும் ஓடியது.

**தொடர்புகளுக்கு - 077 7696 443**

## 1 Day Saree Work பயிற்சி

Bead, Sequence, Stone, Spring, Dust, Net என இன்னும் 30 நவீன வேலைப் பாடுகளில் தைத்தல், ஒட்டுதல், Ironing செய்முறைகளில் Saree Work 4000/= மட்டுமே செய்முறைக்கான பொருள்கள் இலவசம். சான்றிதழ் வழங்கப் படும். செய்யும் மாதிரிகள் உங்களுக்கே வழங்கப்படும். Saree, Salwar, Skirt, Blouse, T-Shirt என அனைத்து ஆடைகளிலும் பயன்படுத்தமுடியும்.

Date : 10 /12 / 2018, Time : 02.30 pm - 5.00 pm

Place : BCAS Campus Jaffna

No. 16, Point Pedro Road, Jaffna.

0752346806

## நிர்வாக அலுவலர் தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு தமிழ், ஆங்கிலம் மொழித் தேர்ச்சியுள்ள சிங்களம் பேசத்தெரிந்த நிர்வாக அலுவலகர் தேவை. அரச, தனியார் துறைகளில் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப் பிக்கலாம்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையுடன் விண்ணப்பங் களை யாழ் வணிகர் கழகம், இல.165 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பங்கள் யாவும் 17.12.2018 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் 17.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**
**இல. 165, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C 8636) (14.17)

## முதுகுநோய் வலிகளிலிருந்து உங்கள் முதுகெலும்பை பாதுகாக்க

முதுகெலும்புகளில் வலியும், அசைவுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தன்மையும் ஏற்படக்காரணம் எலும்புகள் அசையும் போது, துண்டு வடம் அல்லது நரம்புகளில் ஏற்படும் அழுத்தமாகும்.

காயம், வயதுடன் ஏற்படும் சீர்கேடு, தொற்றுக்கள், தட்டுவிலகுதல் மற்றும் இடுப்பு வலி காரணமாக ஏற்படும் முதுகுவலி

எமது உன்னதமான ஆயுர்வேத மருந்தானது கழுத்து, தோள்பட்டை அல்லது கைகள், முதுகு அல்லது கால்களில் பரவும் வலியிலிருந்து நிவாரணம் தரும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**



FAIR PHARMA (PVT) LTD


செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**

Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## கிருஹயக்ஞ (மதியபோசன) அழைப்பு



கடந்த (28.11.2018) புதன்கிழமை அமரத்துவம் எய்திய எமது குடும்பத்தலைவர்

### அமரர் சிவஸ்ரீ கிருஷ்ணஐயர் நாராயணக்குருக்கள்

(ஸ்ரீ கதிரேசன் கோவில்ஐயா)

அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நாளை (10.12.2018) திங்கட் கிழமை நடைபெறும் இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின் றோம். இதனை தனிப்பட்ட முறையில் அன்பான அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**24/3, அம்மன் கோவில் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில். 021 205 2391**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

## ஐ.தே.கவின்...

கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டின் அரசமைப்பின்படி பதவியேற்ற நான்கு ஆண்டுகளுக்குப்பின்னர் அரச தலைவர் புதிய ஆணை கோரி, அரச தலைவர் தேர்தலுக்கு அறிவிப்பை வெளியிட முடியும். இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தலைவர் தேர்தலை இப்போது நடத்த மாட்டேன் என்று மைத்திரிபால கூறியுள்ளார்.

'உடனடியாக அரச தலைவர் தேர்தலை நடத்துவது பற்றி நான் தான் முடிவு செய்ய வேண்டும். அதனைச் செய்யும் திட்டம் என்னிடம் கிடையாது. ஏனையவர்களின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப செயற்பட நான் தயார் இல்லை" என்று அரச தலைவர் கூறியுள்ளார்.

அரச தலைவர் பதவியின் இரண்டாவது காலத்துக்குப் போட்டியிடும் திட்டம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள மைத்திரிபால, அதுபற்றி இப்போது முடிவு செய்ய முடியாது என்று பதிலளித்துள்ளார்.

"அதுபற்றி இப்போது முடிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. கடந்த ஒரு மாதமாக நீங்கள் பார்த்தால் மணித்தியால அடிப்படையில் அரசியல் நடக்கிறது. ஊடகப் பணியாளர்களான, நீங்கள் பல செய்திகளை வைத்திருக்கிறீர்கள். கடந்த ஐந்து வாரங்களில் இது நடந்தது.

ஒரு ஆண்டு காலத்திற்குள் என்ன நடக்கும் என்று இப்போது யார் சொல்ல முடியும்? இப்போது எதையும் நாங்கள் கூற முடியாது" என்றும் அவர் கூறியுள்ளார். (5)

## ஒன்றரை...

நாடு முழுவதிலும் இருந்து ஒன்றரை லட்சம் பேரைக் கொண்டு வந்து, கொழும்பில் குவித்துத் தொடர்ந்து மூன்று நாள்களுக்குப் பேரணி நடத்தப்படவுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக நியமிக்க மறுத்து வரும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கே, ஐக்கிய தேசியக் கட்சி இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது. (5)

## நெருக்கமான...

சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சி என்பன பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டன் அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாயப் பணியகத்தின், மனித உரிமை கரிசனையுள்ள 30 நாடுகள் தொடர்பான, 2018இல் மனித உரிமைகள் நிலமைகள் என்ற இடைக்கால அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் நிலமைகளைப் பிரிட்டன் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இது மனித உரிமைகள் பாதுகாவலர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற பலரது கரிசனையையும் நாங்கள் அறிவோம். மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி என்பன பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் தொடர்பாக, நாங்கள் எல்லா தரப்புகளுடனும் பேசியுள்ளோம். அதனை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் சிவில் சமூக பிரதிநிதிகளுடனும், பன்னாட்டுப் பங்காளர்களுடனும் நெருக்கமான தொடர்பில் இருக்கிறோம். தேவைப்பட்டால், சூழ்நிலைக்கேற்ப பதிலளிக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றும் பிரிட்டன் இராஜாங்க அமைச்சர் அகமட் தெரிவித்துள்ளார். (5)

## முச்சக்கரவண்டி...

யாழ்ப்பாணம், டிசெ. 9

வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி மற்றும் மூடுந்து (ஹையேஸ்) வாகனம் என்பன தீயில் எரிந்த நிலையில் மீட்க்கப்பட்டுள்ளன.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அருகிலுள்ள வீட்டிலேயே இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வாகனங்கள் எரிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் தெரிவித்ததாவது,

நாம் இரவு உறங்கிக் கொண்டிருந்த போது வெளியில் வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. நாம் வெளியில் வந்து பார்த்த போது வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தன. உடனடியாக தீயைக் கட்டுப்படுத்தினோம். எனினும் முச்சக்கர வண்டி முழுமையாகவும், மூடுந்து பகுதியளவிலும் எரிந்து விட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தோம். அவர்களும் வீட்டுக்கு வந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அவர்களின் விசாரணையில் நாம் எமக்கும் ஒரு குடும்பத்தினருக்கும் இடையில் அண்மைக்காலமாக தகராறு உள்ளது. அவர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடுவதாகக் கூறியுள்ளோம் என்றனர். (5,8)

## மகிந்த தரப்புக்கு...

யில் இருந்து வெளியேற்றுமாறு எப்படிக் கோர முடியும். இவ்வாறு சீற்றத்துடன் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரான சி.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன்.

தமிழ் மக்கள் பேரவையிலிருந்து புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்களை வெளியேற்றுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ச்சியாகப் பேரவைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார். இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவைக்கு கஜேந்திரகுமார் கடிதமும் அனுப்பியிருந்தார். தமிழ் மக்கள் பேரவை, ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் புளொட் அமைப்பிடம் விளக்கம் கோரியிருந்தது. அதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு 4 பக்கங்களில் காட்டமான பதில் கடிதம் அனுப்பியிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், புளொட் அமைப்பின் தலைவர் எழுதிய கடிதத்தில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரு நியமன உறுப்பினர்களை மாத்திரமே கொண்டுள்ளது. கிழக்கின் எழுக தமிழ் வெற்றிக்கு அவர்களா காரணம்? வடக்கில் எழுக தமிழ் வெற்றிபெற நானும், சுரேஸ் பிரேமசந்திரனும், கஜேந்திரகுமாரும் தெருத் தெருவாக நடந்தோம். கிழக்கில் எழுக தமிழ் வெற்றி பெறுவதற்கு, எங்கள் கட்சியின் உறுப்பினராக இருந்த வியாழேந்திரன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் துரைரட்ணம் ஆகியோரே கிழக்கின் வெற்றிக்கு காரணம். தமிழ் மக்களுக்காகப் பாடுபடுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுகின்றது. நெடுங்கேணிப் பிரதேச சபையின் நிலமை கருதி கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் இறுதி நேரத்தில் நடுநிலமை வகித்தனர். இப்படி தமிழர் விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட அவர்கள், பேரவையிலிருந்து எம்மை வெளியேறுமாறு கோருவது வேடிக்கையானது - என்றார். (5,105)

## கடவுளே...

நாட்டின் அரசியல் நெருக்கடி நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்லும் நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கைத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்து இவ்வாறு வெளியாகியுள்ளது.

கொழும்பைத் தளமாகக் கொண்ட சிங்கள ஊடகத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ள நேர்காணலிலேயே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளே காரணம். இந்தக் குறைபாடுகளுக்கு ரணில் விக்கிரமசிங்கதான் பொறுப்புக் கூறவேண்டும்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் 80வீதமானவை நன்மையளிக்கும் வகையில் உள்ள போதும் 20வீதமானவை பெரிய அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் காரணிகளாக உள்ளன. 20வீதமான தவறுகளால்தான் நாடு அரசியல் உறுதிப்பாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கதான் இதற்கு முழு பொறுப்பாகும். எதிர்காலத்தில் குறைப்பாடுகளை திருத்தியமைக்க நான் நடவடிக்கைகளை எடுப்பேன்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஒருபோதும் தலைமை அமைச்சராக நான் நியமிக்க மாட்டேன். அந்தக் கடவுளே வந்து ரணிலை தலைமை அமைச்சராக நியமிக்குமாறு கூறினாலும் நான் நியமிக்க மாட்டேன். மேலும், கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி மகிந்தவைத் தலைமை அமைச்சராக நியமிக்கும் தீர்மானத்தை நான் எடுத்திருக்காவிட்டால், இலங்கை என்ற நாடே உலக வரைபடத்திலிருந்து காணாமற் போயிருக்கும் - என்றார். (5,10,71)

## பொல்லைக்...

மகிந்தவால் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. மனு கோரல் (டென்டர்) போன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏலமிடப்பட்டனர். சில உறுப்பினர்கள் 500 மில்லியன் ரூபா கோரியதாக எனக்குத் தகவல் கிடைத்தது. மகிந்தவுக்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனதற்கு அதிகளவான பேரத்தொகையே முக்கிய காரணமாக இருந்திருக்கும் என்று நான் நினைக்கின்றேன் - என்றார்.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்ததாவது:

நிதிப் பற்றாக்குறை காரணமாகவே மகிந்த ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாக தெரிவித்துள்ளார். அத்துடன், சில உறுப்பினர்கள் 500 மில்லியன் ரூபா வரை கேட்டதால் மகிந்தவால் பெரும்பான்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது போனதாகவும், அதனால்தான் நாட்டில் அரசியல் நெருக்கடிகள் தோன்றியதாகவும் தெரிவித்துள்ளமையானது ஒரு அரச தலைவர் கூறும் கருத்தல்ல. இந்த காரணத்தை அடிப்படையாக கொண்டு நிதி மோசடி தொடர்பில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக முறைப்பாடு செய்ய முடியும்.

உலகில் எந்தவொரு தலைவரும் இவ்வாறான கருத்துகளை வெளியிட்டதில்லை. மகிந்தவும் - மைத்திரியும் இணைந்து மேற்கொண்ட மிகப்பெரிய ஊழல்மோசடி அவர் வாயாலேயே நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு அரச தலைவருடன் தொடர்ந்து பயணிக்க முடியாது. பொதுத் தேர்தல் அல்ல அரச தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலே அடுத்து நாட்டுக்கு அவசியம் என்றார். (5,10)

## நீதிமன்றத்...

நீதிமன்றத் தீர்வு பிரச்சினைக்குத் தீர்வாகாது என்று கூறுகின்றோம். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அரசியல் சிக்கல் நிலைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு காண்பதாக சுதந்திரக் கட்சி மாநாட்டின் போது மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துள்ளமையே அவரது கருத்து புலப்படுத்துகின்றது என்று சில ஊடகங்கள் ஊகம் வெளியிட்டிருந்தன. ஆனால் நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்தச்சிக்கல் நிலைக்கான நிரந்தர தீர்வாக அமையும் என்று நாங்கள் கருதவில்லை.

அரச தலைவரால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை நியாயமானதா? , பொதுத் தேர்தல் ஒன்று தற்போது நடத்துதல் ஏற்புடையதா? ஆகிய இரு கேள்விகளுக்கும் நீதிமன்றத்தின் தீர்ப்பு பதிலளிக்கும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை நியாயமானது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டால் பொதுத்தேர்தலுக்குச் செல்ல முடியும். நாடாளுமன்றக் கலைப்பு நியாயமற்றது எனின் நாடாளுமன்றம் தொடர்ந்து இயங்கும். நாடாளுமன்றம் தொடர்பில் தலையீடு செய்தமை, பெரும்பான்மை இல்லாத ஒருவரை தலைமை அமைச்சராக நியமித்தமை, அவருக்குப் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கு அனுமதிக்காமல் பிற்போட்டமை போன்ற அரச தலைவரின் செயற்பாடுகளுக்கான எதிர் நடவடிக்கை என்ன என்ற கேள்வி எழுகின்றது. அதேவேளை சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்களின் செயற்பாட்டுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டதே தவிர, அரசை சட்டத்துக்கு அமைவாக அமைப்பதில் எவ்வித தடைகளும் இல்லை. ஆனால் இன்னமும் அரச தலைவர் ஒருவார காலம் காத்திருந்து, தீர்வு வழங்குவதாகக் கூறுவதிலிருந்து அவர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களுக்கு மதிப்பளிக்கவில்லை என்பது புலனாகின்றது. எனவே இந்தப்பிரச்சினைக்கு நீதிமன்றத்தீர்ப்பு நிரந்தர தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்தப் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்த நிறைவேற்றதிகார அரச தலைவர் முறைமை நீக்கப்பட வேண்டும். நிறைவேற்றதிகார அரச தலைவர் முறைமையும், தற்போது அந்தப்பதவியை வகிக்கின்ற மைத்திரிபால சிறிசேனவின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுமே நாட்டில் இவ்வளவு மோசமான குழப்பநிலை ஏற்படுவதற்கு காரணமாகும். சாதாரண மனிதர்களாக இருப்பவர்கள் நிறைவேற்றதிகாரமுடைய இந்தப்பதவிக்கு வந்த பின்னர் செயற்படும் விதமே இதனை நீக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அதனை நோக்கி அனைவரும் போராட வேண்டும்.

### ரணிலை ஆதரிக்கோம்

நாங்கள் மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்ட முறைமை தவறு என்றுதான் போராடுகின்றோம். ஜனநாயகத்தைக் காப்பாற்றத்தான் போராடுகின்றோம். ரணில் விக்கிரமசிங்கவுக்கு நம்பிக்கை இருக்கும் தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரவுள்ளது. அதனை நாங்கள் ஆதரிக்கோம் - என்றார். (5,61)

## மைத்திரி, மகிந்த...

வித்தார். சுதந்திரக் கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினுடைய உத்தியோகபூர்வ இல்லத்தில் அவர் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழு கூட்டம் இடம்பெற்றது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அனைத்து உறுப்பினர்களும் அதனை ஏற்று அதற்கேற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு நான் கருத்து தெரிவிக்கும் போது , மகிந்தவின் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டணி செயற்படும் என்று கூறினேன். அதன் அர்த்தம் அவர் தலைமையிலான கட்சியுடன் இணைந்து பயணிப்போம் என்பதேயாகும். எவ்வாறிருப்பினும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவே இந்தக் கூட்டணிக்குத் தலைவராகச் செயற்படுவார்.

பொதுமக்கள் முன்னணியின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் உறுப்புரிமையை நீக்குவது தொடர்பாக தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான அவசியம் தற்போது இல்லை. காரணம் சுதந்திரக் கட்சி மற்றும் பொதுமக்கள் முன்னணி ஆகியன எதிர்வரும் காலங்களில் இணைந்து பயணிப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை ஒரு பிரச்சினையாகக் கருத முடியாது.

இந்தப் புதிய கூட்டணியின் சின்னம், பெயர் மற்றும் அரச தலைவர் வேட்பாளர் குறித்து இது வரையில் தீர்மானிக்கப்படவில்லை. நீதிமன்ற தீர்ப்பின் பின்னரே தேர்தல் இடம்பெறுமா என்பது தெரியவரும். தீர்ப்பின் பின்னர் அது குறித்து ஆராயப்படும். நீதிமன்றத்தால் முழுமையான தீர்ப்பை வழங்க முடியாது. காரணம் இது ஜனநாயக நாடாகும். நீதிமன்ற தீர்ப்பை விடவும் மக்கள் ஆணை பலம் மிக்கதாகும். மக்கள் எதிர்பார்ப்பது பொதுத் தேர்தலையே - என்றார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றைக் கலைத்து வெளியிட்ட அரசிதழ் அறிவிப்புக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு இந்த வாரம் வெளியாகக் கூடும். அரச தலைவரின் முடிவு சரியானது என்று நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகினால் நாடாளுமன்றத் தேர்தல் உடனடியாக நடத்தப்படும். இவ்வாறானதொரு நிலையிலேயே, தேர்தலை எதிர்கொள்வதற்கான புதிய கூட்டுத் தொடர்பில் மைத்திரி - மகிந்த அணியினர் ஆராய்ந்துள்ளனர். (5,71)

# யங்ஸ்ரார் வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 9
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டடத்தில் வவுனியா மாவட்டத் தெரிவு அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், டிசெ. 9
வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவு சங்க கலாசார மன்றம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகமும் மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)




# இன்டர் மிலன் கழகத்தை தோற்கடித்தது யுவென்டாஸ்

இத்தாலியக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது யுவென்டாஸ். இன்டர் மிலனை எதிர்த்து யுவென்டாஸ் மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இன்டர் மிலன் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாத போதிலும் ஒப்பீட்டளவில் யுவென்டாஸை விடவும் மிலன் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது.
இரண்டாவது பாதியில் யுவென்டாஸ் ஆதிக்கம் செலுத்தியது. ரொனால்டோ - மான்டுகிக் கூட்டணி மிலனுக்கு அச்சுறுத்தலை வழங்கியது. 61ஆவது நிமிடத்தில் யுவென்டாஸின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மான்டுகிக். அதுவே ஆட்டத்தின் ஒரே கோலுமாக அமைய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யுவென்டாஸ். (ம)

# மன்னார் வீரர் நிசாந்தபாலன் சம்பியனானார்

யாழ்ப்பாணம், டிசெ. 9
மன்னார் பூப்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ரீதியாக நடத்தப்படும் பூப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நிசாந்தபாலன் கிண்ணம் வென்றார்.
மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களான நிசாந்தபாலன், திலக்சன் இருவரும் மோதினார்கள்.
முதலாவது செற்றை 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நிசாந்தபாலன் தனதாக்கினார். இரண்டாவது செற் 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் திலக்சனிடம் சென்றது. முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றிருந்தனர். இதனால் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற் 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நிசாந்த பாலனின் வசமானதை அடுத்து அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம-23)



# விடைபெற்றார் ஹபீஸ்

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் இருந்து விடைபெற்றார் பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர் மொகமட் ஹபீஸ்.
நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடியது. இந்தத் தொடரின் மூன்றாவது ஆட்டத்துடன் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெறும் முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தார் ஹபீஸ். இதன்படி மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றார் ஹபீஸ். (ம)




# அசென்சியோவின் அதிரடியால் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட்!

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இலகுவான வெற்றிபெற்றது ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் அணி.
மட்ரிட்டை எதிர்த்து மிலில்லா மோதியது. முதலாவது பாதியில் அசென்சியோ வில்லியம்சன் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 35ஆவது மற்றும் 39ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்துக் கோல்களைப் பதிவுசெய்தார். 38ஆவது நிமிடத்தில் ஜாவி மலில்லாவின் கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது.
இரண்டாவது பாதியில் 43ஆவது மற்றும் 82ஆவது நிமிடங்களில் இஸ்கோவும், 75ஆவது நிமிட்த்தில் வின்சியஸூம், 89ஆவது நிமிடத்தில் யாசினியும் கோல்களைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

# பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9
மன்னார் பூப்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ரீதியாக நடத்தப்படும் பூப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8 மணிமுதல் திறந்த பிரிவு ஆண்களுக்கான போட்டிகளும், தொடர்ந்து 40 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (ம-23)

தேசியமட்ட

# கூடைப்பந்தாட்ட அணியில் இந்துக் கல்லூரி வீராங்கனை நிதர்சனா

யாழ்ப்பாணம், டிசெ. 9
இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தவுள்ள சிரேஷ்ட பிரிவு வீராங்கனைகளுக்கான தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட பெண்கள் அணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவி நிதர்சனா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ம-23)

# முதல் இன்னிங்ஸில் இந்தியா முன்னிலை

# இரண்டாவது இன்னிங்ஸிலும் நல்ல நிலை

## இன்று இந்தியா அடித்தாட வாய்ப்பு

இந்தியாவுக்குக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 235 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலிய அணி. இந்திய அணி 250 ஓட்டங்களைப் பெற்ற காரணத்தால் அந்த அணி முதல் இன்னிங்ஸில் 15 ஓட்டங்களால் முன்னிலைபெற்றது. இரண்டாவது இன்னிங்ஸிலும் இந்திய அணி சிறந்த ஆரம்பம் கண்டுள்ளது.

அடிலெய்ட் மைதானத்தில் கடந்த ஆறாம் திகதிஇந்தஆட்டம்ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில்வெற்றிபெற்றுமுதலில்துடுப்பெடுத்தாடிய இந்திய அணிசகல இலக்குகளையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பம்முதல்சிறப்பாகத்துடுப்பெடுத்தாடிய புஜாரா அதிகபட்சமாக 123 ஓட்டங்களைக் குவித்தார். ரோகித் 37 ஓட்டங்களையும், பன்ட் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில்ஹசில்வுட்3இலக்குகளையும், ஸ்ராக், கம்மின்ஸ், லயன் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.


பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில்7இலக்குகளைஇழந்து197ஓட்டங்களைப்பெற்றிருந்தது. இந்தியாவின்முதல் இன்னிங்ஸ்ஓட்டங்களைஎட்டுவதற்குஆஸ்திரேலிய அணிக்குமேலதிகமாக59ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் ஹெட் 61 ஓட்டங்களுடனும் ஸ்ராக் 8 ஓட்டங்களுடனும் மூன்றாம்நாளுக்காக நேற்றுக்களமிறங்கினார்கள். 15ஓட்டங்களுடன்ஸ்ராக்ஆட்டமிழந்தார். 72 ஓட்டங்களுடன் ஹெட்டின் இன்னிங்ஸை முடிவுக்குக் கொண்டுவந்தார் சமி. 235 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா. லயன் 24ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பந்துவீச்சில் பும்ரா, அஸ்வின் இருவரும் தலா 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

15 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெ டுத்தாடியது இந்திய அணி. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக ராகுல் மற்றும் முரளி விஜய் இருவரும் சொல்லிக்கொள்ளும் படியான ஆரம்பத்தை வழங்கினார்கள். இலக்குச்சரிவில்லாமல்50ஓட்டங்களைத்தாண்டியது இந்திய அணி. அணி 63 ஓட்டங்களைப்பெற்றிருந்தநிலையில்18ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முரளி விஜய். அடித்தாடிக்கொண்டிருந்தராகுல்44ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

எனினும் புஜாரா முதல் இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் அற்புதமாக விளையாடினார். ஸ்ராக்வீசிய அனேகமான திடீர் மேலெழும்பல் பந்துகளையும், ஹசில்வுட் வீதிய உட்திரும்பல், வெளித்திரும்பல் தன்மையுடைய பந்துகளையும்புஜாரா மிகமிக அற்புதமாகத் தடுத்தாடினார். ஸ்ராக் வீசி புஜாராவின் கழுத்து நோக்கிச் சென்ற பந்தை புஜாரா 'ராவிட்டின் பாணியில்' மேலெழும்பித் தடுக்க அதைப் பார்த்து ஸ்ராக்கே வியந்து தலையசைத்து விட்டுச்சென்றார். புஜாரா-கோக்லிஇணை ஆஸ்திரேலிய அணிமீதான தனது பிடியை சற்று இறுக்கியது. இணைப்பாட்டமாக 71 ஓட்டங்கள்பகிரப்பட்ட நிலையில்34ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோக்லி. நாள் முடிவில் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. புஜாரா 40 ஓட்டங்களுடனும் ரகானே ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். தற்போதைய நிலவரத்தின்படி இந்திய அணி முன்னிலையில் உள்ள ஓட்டங்களின் எண்ணிக்கை 166. (ம)









எனினும் புஜாரா முதல் இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் அற்புதமாக விளையாடினார். ஸ்ராக் வீசிய அனேகமான திடீர் மேலெழும்பல் பந்துகளையும், ஹசில்வுட் வீதிய உட்திரும்பல், வெளித்திரும்பல் தன்மையுடைய பந்துகளையும் புஜாரா மிகமிக அற்புதமாகத் தடுத்தாடினார். ஸ்ராக் வீசி புஜாராவின் கழுத்து நோக்கிச் சென்ற பந்தை புஜாரா 'ராவிட்டின் பாணியில்' மேலெழும்பித் தடுக்க அதைப் பார்த்து ஸ்ராக்கே வியந்து தலையை சைத்துவிட்டுச் சென்றார்.

## பெய்னிடம் பதற்றத்தை பார்க்கிறாராம் கிறிஸ்ட்

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிம் பெய்னிடம் பதற்றத்தைப் பார்க்கின்றேன் என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் தலைவர் கில்கிறிஸ்ட். இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் கில்கிறிஸ்ட். "துடுப்பாட்ட வரிசையின் மத்திய இடத்தில் களமிறங்கும் வீரர் ஆரம்ப வீரருக்குரிய தகைமையையும் உறுதியையும் கொண்டிருத்தல் அவசியம். ஏனெனில் முன்வரிசை விடும் தவறுகளைச் சரி செய்பவரும் பின்வரிசைக்குரிய அத்திபாரத்தை அமைப்பவரும் மத்திய வரிசை வீரரே. அந்த வகையில் ஆஸ்திரேலியாவின் மத்தியவரிசையில் களமிறங்கும் பெய்னிடம் நான் உறுதித்தன்மை எதையும் பார்க்கவில்லை" என்று கில்கிறிஸ்ட் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆஸ்திரேலியாவில் கோக்லி ஆயிரம்!

ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற அடைவை நிலைநாட்டினார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

ஆஸ்திரேலியாவில் எதிர் அணிகளின் வீரர்கள் ஆதிக்கம் செலுத்துவது அரிதிலும் அரிதாக நடப்பது. இந்திய வீரர்களில் சச்சின், லக்ஸ்மன், ராவிட் ஆகியோர்தான் ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் வைத்து ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த இந்திய வீரர்களாக இதுவரை இருந்த நிலையில் தற்போது அவர்களுடன் கோக்லியும் இணைந்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாவது இன்னிங்ஸில் அவர் இந்த அடைவை எட்டினார். (ம)



## ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்

ENGLISH PERSONAL CLASSES
அனுபவம் மிக்க ஆசிரியரினால்
உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு - 077 658 9443
யாழ்ப்பாணம்.

## வாகனம் விற்பனைக்கு

வவுனியாவில்
ISUZU ELF 350, 14½ அடி
Powerstaring
41 - xxxx 12,75000/-
**077 532 5968** (AVA/438)(11,17)

## விற்பனைக்கு

BGF இலக்கம் கொண்ட FAZER Motor Bike உடனடி விற்பனைக்கு உண்டு. (13000km மட்டுமே ஓடிய வாகனம்) விலை பேசி தீர்மானிக்கலாம்.
இடம் - காங்கேசன் துறை வீதி. தட்டாதெருச்சந்தி. யாழ்ப்பாணம்.
**076 666 4252** (CS 21675)(04.17)

## விற்பனைக்கு

யாழ் CTB பஸ் நிலையத்திற்கு பின்பாக மின்சார நிலைய வீதியில் HNB வங்கிக்கு அருகில் இல - 175. 12 அடி அகலம் 100அடி நீளம் கொண்ட தனிக்கடை விற்பனைக்குண்டு.
**077 723 2535** (CS 21680) 04.17)

## காணி விற்பனைக்கு

வத்தளை அல்லிஸ்டவுன்
Charry Land இல் இருக்கும்
8 Perch காணி விற்பனைக்கு
உண்டு. ஒரு Perch 12 லட்சம் ரூபா
பெறுமதியானது.
(தரகர்கள் தேவை இல்லை)
**076 231 3548** (AJA/21666)(11.17)


## விற்பனைக்குண்டு

கதிரைகள், பந்தல்கள்,
மணவறைகள் மற்றும் சகல
பொருள்களும்
விற்பனைக்குண்டு.
**077 476 6795** (CS 21638) (04.17)

## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 05 . 09 . 1937



விண்ணில் 20 . 11 . 2018

கடந்த 20.11.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் ஏரம்பு பசுபதி (ஆசாரி) (புங்குடுதீவு 04)

(உரிமையாளர் - இலட்சுமி மரக்காலை ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர், சமூகசேவையாளர்)

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி அறிந்து தொலைபேசி. முகநூல் ஊடாகவும், நேரிலும் வந்து ஆறுதல் தெரிவித்து துயரில் பங்கு கொண்ட உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (10.12.2018) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் யாவும் 12.12.2018 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.53, பார்க்குழி வீதி,
தோணிக்கல், வவுனியா. (AVA/436)(11.17)

குடும்பத்தினர்.
076 852 3162/ 077 082 1914

## கணித, ஆங்கில வகுப்புக்கள்

Group & Personal Classes
தரம் 06 முதல் O/L வரை
ஆரம்பம் :- 11.12.2018 (செவ்வாய்க்கிழமை)
இடம் :- மருதடி வீதி, யாழ்ப்பாணம்.
(பொஸ்கோ. பாடசாலை அருகாமை)
Mr.J.R.Abraham
Tel :076 88 65 300

## www.AusTamilMatrimony.com.au

ஆஸ்கிரேலியா. இலங்கை
மற்றும் உலக நாடுகளில்
வாழும்தமிழ் மணமக்களை
இணைக்கும்சேவை.



Register before 31/01/2019 to get 3 months FREEmembership for Brides/Grooms living in Sri Lanka/Canada/UK/Europe
Ph: +61 415 150 483

## மகாராஜா பொதிகள் சேவை

ParceLk · DHL · GTV Express SRI LANKA · aramex

பண்டிகை காலத்திற்கான விஷேட விலை கட்டண கழிவுடன் விஷேட் சேவை ஆரம்பம்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா கனடா 1000/- | நோர்வே சுவிட்சர்லாந்து 900/- | சுவீடன் பெல்ஜியம் நெதர்லாந்து பிரான்ஸ் இத்தாலி டென்மார்க் பின்லாந்து 750/- |
| அவுஸ்திரேலியா 850/- | ஜேர்மனி 650/- | |
| | லண்டன் 600/- | |



( 11Kgக்கு மேல் 1Kgக்கான கட்டணம் )

ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338<br>021 4925024 | 021 4930099 | 024 4930200<br>076 6908961 | 021 4930330 |

## மரண அறிவித்தல்

மலர்வு 15 . 10 . 1934



உதிர்வு 07 . 12 . 2018

### திருமதி இராஜேஸ்வரி செகராஜசிங்கம்

முள்ளானையைப் பிறப்பிடமாகவும் தற்போது சிவபூமி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி செகராஜசிங்கம் கடந்த (07.12.2018) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர் வை. செகராஜசிங்கத்தின் (J.P.) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதி களின் பாசமிகு மருமகளும் திருமால் அச்சகம் உரிமையாளர் சிறிஸ்கந்த ராஜா (J.P.), மங்கையர்க்கரசி (J.P. ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் யோகேஸ்வரியின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் அன்ன பாக்கியம், வெற்றிவேலு பாலாம்பிகை மற்றும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் மனைவி பாக்கியம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2018) திங்கட்கிழமை முள்ளானை, இளவாலையில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக பி.ப. 3.00 மணியளவில் முள்ளானை, சூரியன் கலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தல்ல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முள்ளானை, இளவாலை.

தகவல்:
கணவர் - வை. செகராஜசிங்கம்

## VACANCY

We are looking for **Show Room Manager ( Male)** Experience in **Sale and Marketing Field. Tamil / Sinhala / English medium with Excellent Communication.**
**Show Room Sale Executive (Female)**
**Good in English Knowledge & Computing**
Please Apply Your CV Before **14th December 2018 to the following Address.** (CS/21645)(11.17)

**Alpha Industries (Pvt) Ltd**
**Jaffna Branch**
**No.270, K.K.S.Road, Jaffna.**
**077 313 9361/ 021 570 7707**

## British College of Higher Studies

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| வெளிநாடு செல்பவர்க்கான பயிற்சிகள்<br>IELTS (Academic & General)<br>Student visa, migration visa<br>IELTS Life skills –<br>Sponsor visa, Settlement visa | IELTS Exam Online Registration எம்மிடமே |
| Certificate courses (அனைத்து வயதினருக்கும்)<br>**Diploma in English** **Spoken English**<br>**Diploma in Sinhala** **Spoken Sinhala** | All age Groups வயதிற்கேற்ப தனி பிரிவுகள் |
| Special English classes for A/L 2019 batch students<br>பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கு ஆங்கிலத்தின் முக்கியத்துவம் கருதி A/L 2019 மாணவர்களுக்கென புதிய வகுப்புகள் குறைந்த காலத்தில் சிறந்த பயிற்சி. 100% தேர்ச்சி. | A/L 2019 முதல் 20 பேருக்கு மட்டுமே |
| **O/L பரீட்சை எழுதும் மாணவர்களே**<br>உங்களின் விடுமுறை காலத்தை பயனுள்ள தாக்குங்கள் உங்களுக்காகவே புதிய பிரிவுகள்<br>Diploma in English ஜனவரி முதல்<br>பதிவுகள் ஆரம்பமாகி விட்டன | O/L 2018 முதல் 40 பேருக்கு மட்டுமே |

**B.C.H.S No.15, Sirambiyady lane, Jaffna**
**லங்கா சதொச மேல்மாடி 0212224550**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.